# வைக்கம் போராட்ட வரலாறு



தொகுப்பாசிரியர்:
**கி.வீரமணி** எம்.ஏ., பி.எல்.,

# வைக்கம் போராட்ட வரலாறு


தொகுப்பாசிரியர்

**கி.வீரமணி** எம்.ஏ., பி.எல்.,


**திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**
பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை - 600 007.

# நூல் குறிப்பு



| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | வைக்கம் போராட்ட வரலாறு |
| தொகுப்பாசிரியர் | : | கி. வீரமணி எம்.ஏ., பி.எல்., |
| பதிப்பு | : | முதல் பதிப்பு : 1999<br>நான்காம் பதிப்பு : பிப்ரவரி, 2020 |
| நூல் அளவு | : | டெம்மி (140 mm x 220 mm) |
| அச்சு எழுத்து அளவு | : | 12 points |
| பக்கங்கள் | : | 128 |
| கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| நன்கொடை (குறைந்த அளவு) | : | ரூ.100/- |
| வெளியீடு மற்றும் உரிமை | : | **திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**<br>சென்னை - 600 007. ☎: 044 - 2661 8161 |
| அச்சிட்டோர் | : | 'விடுதலை' ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,<br>சென்னை - 600 007. |
| கிடைக்குமிடங்கள் | : | பெரியார் புத்தக நிலையம்<br>● பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை -600 007. ☎: 044-26618163<br>● பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி-620 017 ☎: 0431-2771815<br>www.dravidianbookhouse.com |




வைக்கத்திலே வைக்கம் வீரர் பெரியார் அறப்போர் புரிந்த இடம்



வைக்கத்தில் நடைபெற்ற வைக்கம் பொன்விழா மாநாட்டில், பெண்கள் மாநாட்டைத் துவக்கி வைத்து அன்னை மணியம்மையார் உரையாற்றினார் (26.04.1975)



வைக்கம் போராட்டக் குழுவினர்

# வைக்கம் போராட்ட வரலாறு

இரண்டு நாள்களிலே சில நாள்களுக்குமுன் ‘துக்ளக்’ இதழிலே ஒரு செய்தி வந்தது.

உங்களுக்குத் தெரியும் – அண்மையில், தந்தைபெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி தமிழக அரசு எடுத்த முடிவுக்கு ஏற்ப, நூற்றாண்டு விழாக் குழவின் பரிந்துரையின் படி வைக்கத்தில் தந்தை பெரியாருக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது என்பது.

அதன்படி 03.11.1985 அன்று வைக்கம் நகரிலே ‘வைக்கம்‘ வீரர் தந்தை பெரியாரின். நினைவகத்திற்கு அடிக்கல் நாட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ் விழாபற்றி தமிழக அரசு வெளியிடும் “தமிழரசு” இதழிலே (16.11.1985) வெளிவந்ததுள்ள படிப்பிடிப்பு இதோ:

“மண்டும் மதங்கள் அண்டா நெருப்பாய் இருந்தவர்; படரும் ஜாதிப்படைக்கு மருந்தாய்த் திகழ்ந்தவர்; தூயதாடி மார்பில் விழும்; தொண்டு செய்து பழுத்த பழம் தந்தை பெரியாருக்குத் தமிழகம் ஓராண்டுக் காலம் நூற்றாண்டு விழாக் கொண்டாடி மகிழ்ந்தது. நம் நெஞ்சமெல்லாம் நீங்கா நினைவாய் நிலைத்திருக்கும் அந்தப் பகுத்தறிவுப் பகலவன், கேரள மாநிலத்திலே உள்ள வைக்கத்தில் ஜாதிப் பேயை ஓட்ட நடத்திய போராட்டம், தீண்டாமையை விரட்டச் செய்த சத்தியாகிரகம் – அதன் மூலம் பெற்ற பெருவெற்றி – சரித்திரப் பிரசித்தி பெற்றதாகும்.

அதன் நினைவாக, சுயமரியாதைச் சுடர் கொளுத்திய ஈரோட்டுச் சிங்கத்திற்கு வைக்கம் நகரில் ஒரு நினைவகம் அமைக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டுள்ளது தமிழ்நாடு அரசு. அதற்கான நிலத்தைக் கேரள

அரசு நமக்கு வழங்கும் விழாவும், நினைவகத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவும், அவர் உதிர்த்த முத்துக்களின் ஆங்கில நூல் வெளியீட்டு விழாவும், ஒரு சேர 03.11.1985 அன்று வைக்கம் நகரிலே சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் சார்பிலே மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், கேரள அரசின் சார்பிலே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.பி.ஜே ஜோசப் அவர்களும் அன்றைய விழாவிலே முக்கியப் பங்கு வகித்தனர்.

தந்தை பெரியார் அவர்கள் 1924ஆம் ஆண்டு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராயிருந்த காலத்தில், வைக்கம் நகரில் தலைமையேற்று நடத்திய அந்த சத்தியாகிரகம்தான் இந்தியாவிலேயே முதன்முதலாகத் தீண்டாமையை எதிர்த்து நடத்தப்பட்ட சத்தியாக்கிரகமாகும்.

விழா நாளன்று, வடக்கு நுழைவாயிலில் தந்தை பெரியார் அவர்கள் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கிய அதே இடத்திலிருந்து மாபெரும் கொடுமைகளையெல்லாம் சந்தித்து வெற்றி கண்டார்கள். மனிதனை மனிதன் தொடக்கூடாது: முக்கிய வீதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் நடமாடவே கூடாது. என்றெல்லாம் கட்டுப்பாடுகள் இருந்த இந்த வைக்கத்தில், அந்தக் கண்மூடிக் கொள்கையெல்லாம் இன்று மண்மூடிப் போயிருக்கிறதென்றால் அதற்குக் காரணம், தந்தை பெரியார். அவரை நாம் என்றும் மறக்க முடியாது. தந்தை பெரியார் அவர்களை என்றென்றும் மக்கள் மனத்தில் நிலைநிறுத்தும் வண்ணம் இங்கே பதினைந்து இலட்சம் ரூபாய் செலவில் அமையவிருக்கும் நினைவகத்திற்காக, முதல் தவணையாக அய்ந்து இலட்சம் ரூபாய் அளிக்கப்படுகிறது. இதற்கான நிலத்தை வழங்கியமைக்காகத் தமிழ்நாடு அரசு சார்பிலும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சார்பிலும், கேரள அரசுக்கும் மாண்புமிகு கேரள முதல்வர் அவர்களுக்கும், வைக்கம் வாழ் பெருமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழா மூலம் தமிழகத்திற்கும், கேரளத்திற்கும் உள்ள தொடர்பு மேலும் வலுப்பெறும்.

இவ்வாறு உரையாற்றிய மாண்புமிகு தமிழ்நாடு நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், 'தந்தை பெரியார் புரட்சி மொழிகள்' என்னும் அரிய நூலின் ஆங்கிலப் பதிப்பை வெளியிட,

முதல் படியை மாண்புமிகு கேரள வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். வைக்கம் விழா நினைவாகத் தஞ்சாவூர் தட்டு ஒன்றும் அவருக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு செய்தி - சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு.ஏ.பி முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில் “வைக்கம் போராட்டத்தின்போது தந்தை பெரியார். அவர்களோடு சிறை சென்றவர் திரு.கே.பி. கேசவமேனன். செல்வக்குடியிலே பிறந்த பெரியார் அவர்கள் அந்தப் போராட்டத்தின்போது சிறைவாசமேற்று சிறையில் கைதிகளுக்குரிய அரையாடையுடன், கைதிகளுக்குரிய கட்டை முத்திரை சுமந்து கொடிய குற்றம் இழைத்த கைதிகளைவிட இருமடங்குப் பணி செய்ததாக அவர் கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட தியாகிக்கு எடுக்கப்படும் விழா இது” என்றார்.

தமிழ்நாடு அரசு செய்தித்துறை இயக்குநர் திரு. இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது “சரித்திர நாயகராம் தந்தை பெரியாருக்குச் சரித்திரம் படைக்க எடுக்கப்படும் விழா இது! இந்த வைக்கம் நகரத்தை அறுபதாண்டுகளுக்கு முன்னரே உலகிற்கு அறிமுகம் செய்தவர் தந்தை பெரியார். இவ்விழாவில் உணர்ச்சியோடு பங்கேற்றுள்ள பெருமக்களையும், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் பாராட்டுகின்றேன்” என்றார்.

இந்த விழாவில் கோட்டயம் கோட்டாட்சியர் திருமதி லீடா ஜேக்கப் இ.ஆ.ப., முன்னாள் நகராட்சித் தலைவர் திரு. ஜான்தாமஸ், நகர காங்கிரஸ் கட்சிச் செயலாளர் திரு.பி.வி விசுவநாதன், முன்னாள் நகராட்சித் தலைவர் திரு.டி.கே கோபாலகிருஷ்ணன் பணிக்கர், முன்னாள் நகராட்சித் தலைவர் திரு. எஸ். நரசிம்மன், முன்னாள் நகராட்சித் தலைவர் திரு.ஆர். கிருஷ்ணப்பிள்ளை , கேரள புலவர் சபாவைச் சேர்ந்த திரு.கே.கே குட்டப்பன், ஸ்ரீநாராயண தர்மபரிபாலன யக்ஞத்தைச் சேர்ந்த திரு.எஸ். ஹர்ஷன், திரு.கே. நாராயண பணிக்கர் (என்.எஸ்.எஸ்) ரெவரண்ட்ஜோசப்பள்ளி படல், திரு.கே.பி மூசா (முஸ்லிம் லீக்), வைக்கத்தின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.விசுவம், (சி.பி.எம்.), திரு. ஆர். சுசீலன் (இந். கம்யூ), திரு. கொச்சு ஜோசப் (காங்கிரஸ்), எம்.கே.நாயக் ரவீந்திரன் (இந்திய தேசிய காங்கிரஸ்), திரு.கே. கருணாகரன் ஆகியோரும் உரையாற்றினர்.

விழா முடிவில் நகராட்சி ஆணையர் திரு. குணசேகரன் நன்றி தெரிவித்துப் பேசினார்.

முன்னாள் நகராட்சித் தலைவர் திரு. ஆர். பத்மநாப நாயர், தாசில்தார் திரு. ராஜப்பன் ஆசாரி, திரு. சந்திரசேகரன் நாயர், வைக்கம் ஆணையர் திரு.கே. சசீதரன் ஆகியோர் இவ்விழா சிறப்புற பெரிதும் பாடுபட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

“கட்சி பேதமில்லாமல், ஜாதிமத பேதமில்லாமல் கேரள மக்கள் பல்லாயிரவர் இவ்விழாவில் பங்கேற்றார்கள். இதற்கு முன் இப்படியொரு விழாவைக் கேரள மாநிலம் கண்டதில்லை என்று அரசியல் நோக்கர்கள் போற்றிப் பாராட்டினர்.” மேற்கண்டவாறு “தமிழரசு” இதழிலே கட்டுரை வெளியாகியுள்ளது.

இதே வைக்கம் நகரில் வைக்கம் போராட்டம் நடைபெற்ற 50 ஆண்டுகள் நிறைவையொட்டி “பொன்விழா” நடைபெற்றது. அவ்விழாவிலே பிரதமராக இருந்த இந்திராகாந்தி அம்மையார் கலந்து கொண்டார்கள். 26.4.1975 அன்று நடைபெற்ற விழாவில் திராவிடர் கழகத்தலைவர் அன்னை மணியம்மையார் அவர்கள் கலந்து கொண்டு பெண்கள் மாநாட்டைத் திறந்து வைத்தார்கள். அவ்விழாவில் நானும் கலந்துகொண்டு உரையாற்றினேன்.

வைக்கம் போராட்டம் என்றாலே அனைவருக்கும் நினைவிற்கு வருவது தந்தை பெரியார் அவர்கள்தாம். எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படும் உண்மையும் கூட! இதனைப் பொறுக்க முடியாத பார்ப்பனர்கள் விபீடணர்களைத் தேடிப்பிடித்து சரித்திரத்தைத் திரிபுவாதம் செய்யும் காரியத்திலே ஈடுபட்டுள்ளனர். அதில் ஒரு கட்டம் தான் “துக்ளக்” இதழில் வெளிவந்துள்ள வைக்கம் போராட்டம் பற்றிய கட்டுரையாகும்.

வைக்கத்தில் தந்தை பெரியாரவர்கள் நடத்தியது மாபெரும் மனித உரிமைப் போராட்டம். பெரியார் அவர்கள் போராட்டம் ஆரம்பித்த சில நாள்களுக்குப் பின்னரே அதில் கலந்து கொண்டார் எனினும் அவர்தாம் அந்தப் போராட்டத்திற்குப் புத்துயிர் ஊட்டி-போராட்டம் வெற்றி பெறக் காரணமாக இருந்தவர். அதை நினைவூட்டக்கூடிய

வகையிலே, வைக்கத்தில் தந்தை பெரியாருக்கு ‘நினைவுச்சின்னம்’ அமைப்பதுதான் பொருத்தம் என்று முடிவு செய்யப்பட்டது.

காரணம், இந்தியாவிலேயே முதல் முறையாக மனித உரிமைகளுக்காக - சமுதாய உரிமைகளுக்காக - போராட்டம் ஒன்று வெடித்தது என்று சொன்னால் அது கேரளத்து வைக்கத்திலேதான் என்பது சமுதாயப் பார்வையோடு சரித்திரம் எழுதுபவர்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதாகும்.

அந்த வகையிலே, அதை உணர்ந்து வைக்கத்திலே நினைவுச்சின்னத்தை ஏற்பாடு செய்தார்கள். நம்முடைய நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தமிழக அரசின் சார்பாக அங்குச் சென்றார்கள். கேரள அரசின் சார்பாக அந்த மாநிலத்து அமைச்சர் அவர்கள் வந்தார்கள். நாம் நடத்திய நூற்றாண்டு விழாவின்போதுகூட வைக்கத்தைச் சார்ந்தவர்கள் வந்திருந்தார்கள். அவர்களை தமிழக அரசுக்கு, செய்தித்துறை அமைச்சர் மற்றும் தொடர்பானவர்களுக்கெல்லாம் அனுப்பி அவர்களோடு தொடர்பு கொண்டோம்.

அதற்குப்பிறகு அரசாங்கமே தொடர்பு கொண்டு, செயலாற்றியது. அய்யா அவர்களுடைய பெயராலே ஒரு நினைவுச் சின்னம் அமைப்பதற்கு உரிய நிலத்தைக் கேரள அரசு கொடுத்து சிறப்பாக நடந்துகொண்டது. அதற்காக திராவிடர் கழகத்தின் சார்பாக கேரள அரசை நாம் மனமுவந்துபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதற்கு முயற்சி எடுத்த தமிழக அரசையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்த வகையிலே, இவ்வளவு சிறப்பான ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்று சொல்வதை, தாங்கொணாத அளவிற்கு ஒருபக்கம் பார்ப்பனர்களும், இன்னொருபக்கம் தேசியவாதிகள் என்று சொல்லக்கூடியவர்களும் ஆக்கியிருக்கிறார்கள். அவர்கள் சேர்ந்துகொண்டுதான் “வைக்கம் சத்தியாக்கிரகம் சில உண்மைகள்” என்கிற பெயராலே இப்பொழுது வந்துள்ள “துக்ளக்” இதழிலே ஒரு கட்டுரை வந்திருக்கிறது!

காங்கிரஸ் சரித்திரத்திலே வைக்கம் சத்தியாக்கிரகம் மிக முக்கியமான ஒன்று. .அதைப்பற்றி காங்கிரஸ்காரர்கள் "வைக்கம் சத்தியாகிரகம், வைக்கம் சத்தியாக்கிரகம்" என்று சொல்லிக் கொள்கிறார்களே தவிர - அது எதற்காக நடத்தப்பட்டது? யாரால் நடத்தப்பட்டது? எப்போது நடத்தப்பட்டது? அதற்கும் காங்கிரஸ் இயக்கத்திற்கும்; அதன் தலைமைக்கும் என்ன சம்பந்தம்? இவை போன்ற இந்தச் செய்திகளெல்லாம் அவர்களுக்குத் தெரியாது.

இந்த நிலையிலே, வைக்கத்தைப் பற்றி எல்லோரும் தெளிவாகத் தெரிந்துகொள்வதற்கு உதவியாக "வைக்கம் போராட்ட வரலாறு" என்று ஒரு வரலாற்றையே நம்மைப் போன்றவர்கள், வரலாற்று ஆசிரியர்கள் உருவாக்க வேண்டுமென்று நாங்கள் சில காலத்திற்கு முன்னாலே திட்டமிட்டோம். அதற்கான முயற்சிகளைக்கூட சில பேராசிரியர்கள், நண்பர்கள் எல்லாம் ஒரு குழுரீதியாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் "வைக்கம் சத்தியாகிரகம் சில உண்மைகள்" என்கிற பெயராலே உண்மைகள் அல்லாத தகவல்கள் இந்த 'துக்ளக்'. கட்டுரையிலே இடம் பெற்றிருக்கின்றன.


"உண்மைகள்" என்று பெயர் இருக்கிறது; ஆனால், உண்மைக்கும் அதற்கும் சிறிதும் சம்பந்தமே இல்லை. அதை 19.11.1985 'விடுதலை'யிலும் 20.11.1985 'விடுதலை'யிலும் இரண்டு கட்டுரைகள் மூலம் தக்க ஆதாரங்கள் காட்டி எழுதியிருக்கிறோம்.

"துக்ளக்"ஆசிரியர் நண்பர் சோ அவர்களுக்குக்கூட, உங்கள் கட்டுரையில் உள்ள செய்திகளெல்லாம் அடிப்படையே அற்றவை, ஆதாரமற்றவை. அதற்கு மறுப்பை 'விடுதலை'யிலே எழுதியிருக்கின்றோம். அதை உங்கள் பத்திரிகையில் போடுங்கள் என்று கேட்டிருக்கின்றோம்,

அவர் போடுவதாக வாய்மொழி மூலமாக ஒப்புக்கொண்டு சுருக்கித்தரும்படி கேட்டிருக்கிறார். அநேகமாக அந்தக் கட்டுரையையும் போடுவார்கள் என்று நினைக்கின்றோம்.



அன்னை நாகம்மையார்



**எஸ்.ஆர்.கண்ணம்மாள்**

பெரியாருடைய தொண்டர்கள் ஆதாரமில்லாமல் எதையும் பேசமாட்டார்கள். ஏதோ “வரலாற்று உண்மைகள்” என்று மனம் போன போக்கிலே பேசமாட்டார்கள். எல்லாவற்றிற்கும் ஆதாரம் இருக்கிறது.

ஆதாரம் என்று சொன்னால், முன்பு நாம் எழுதிய நூல்கள் அல்ல; வரலாற்றுக் குறிப்புகளுக்குச் சில செய்திகள் யாரை விட்டுச் சொல்ல முடியுமோ அந்தச் செய்திகள் இருக்கின்றன.

அதற்கும் மேலாக காங்கிரஸ் வரலாற்றிலிருந்து, சுதந்திரப் போராட்டம் பற்றிய பல்வேறு நூல்களிலிருந்து பல செய்திகளை ஆதாரமாக இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அந்த வகையில், மற்றச் செய்திகளை எடுத்துக் கொள்வதற்கு முன்பாக வைக்கம் வரலாற்றை எடுத்துக் கொள்கிறேன். இன்றைக்குக் காங்கிரஸ் வரலாற்றிலேயே வைக்கம் மறைக்கப்படுகிறது. சரியான அளவிற்கு வைக்கம் போராட்டத்தை அவர்கள் எழுதுவதில்லை.

காங்கிரசினுடைய “பொன்விழாக்” கொண்டாட்டம் என்று 50 ஆண்டுகளுக்கு முன்னாலே கொண்டாடப்பட்ட அந்த நிகழ்ச்சியிலும் சரி, தமிழ்நாடு காங்கிரசின் சார்பாக காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் “வைரவிழா வெளியீடு” என்று வெளியிடப்பட்ட நூலிலும் சரி, “வைக்கம் போராட்டம்” என்று வெளியிட்ட நூலிலும் சரி, வைக்கம் போராட்டம் பற்றி ஒரே ஒரு வரிதான் இருந்ததே தவிர வேறில்லை.

தந்தை பெரியாரவர்களுடைய பங்கைப் பற்றியோ, பணியைப் பற்றியோ, அதனுடைய சிறப்பைப் பற்றியோ அவர்கள் எதுவுமே சொல்லாமல், வேறு செய்திகளைத்தாம் “வைக்கம் போராட்ட வரலாறு” என்று எழுதியிருக்கின்றார்கள்.

ஆகவே, அதை மறைக்கப்பட்ட உண்மைகளாக அவர்கள் ஆக்கி வைத்திருக்கின்றார்கள். வைக்கம் போராட்டத்தில் - முதலாவது உண்மை என்பது அந்தப் போராட்டத்தினைக் காங்கிரஸ் தலைமை ஆதரிக்க மறுத்தது, போராட்டம் வெற்றியை நெருங்கிக்கொண்டிருந்த நேரத்திலேயே காந்தியார் - கடைசி நேரத்தில் அதில் அக்கறை காட்டினார்.

காங்கிரஸ் உள்ளபடியே வைக்கம் போராட்டத்திற்கு முழுப் பொறுப்பேற்றிருக்குமேயானால் அதைவிடச் சிறந்த பெருமை சமுதாயத்திலே வேறு இருக்க முடியாது. ஆனால், அன்றைய காங்கிரசுக்கு முழுத்தலைமை தாங்கக்கூடிய நிலையிலே காந்தியார் இருந்த காரணத்தால் அது நடக்கவில்லை.

தமக்கு வர்ணாசிரம தர்மத்தில் முழுநம்பிக்கை இருக்கிறது என்று காந்தியார் பிரகடனப்படுத்திக் கொண்டிருந்தார். அதனால் அந்த வைக்கம் போராட்டம் அங்கே இயற்கையிலேயே வெடித்துக் கிளம்பியபோது அதை அவர் வரவேற்கவில்லை.

அதை வரவேற்று, அதன் மூலமாக ஜாதி ஒழிப்புக்கு, மனித உரிமைகளுக்கு மிகப் பெரிய கருவியாக அதனை ஆக்கியிருக்க வேண்டிய காந்தியார் - அந்தப் போராட்டம் தொடர்ந்து நடக்கக்கூடாத அளவிற்கு என்னென்ன செய்ய முடியுமோ அவ்வளவும் செய்தார்.

இப்படிச் சொல்வது ரொம்பப் பேருக்கு அதிர்ச்சியளிப்பதாகக்கூட இருக்கும். காந்தியார் வைக்கம் போராட்டத்திற்கு எதிராக இருந்தார் என்பது தான் உண்மை. எப்போது அதை ஆதரிக்கத் தொடங்கினாரென்றால் - அதுவெற்றியின் நுழைவாயிலிலே நுழைந்துவிட்டது என்ற பிறகுதான் காந்தியார் வரவேற்கத் தொடங்கினார் என்பது வரலாற்றினுடைய மிக முக்கியமான கட்டம்.

இந்தப் பின்னணியை முழுவதுமாக விளக்குவதற்கு முன்னர் - ‘துக்ளக்’ கட்டுரை என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம். துக்ளக்கின் கட்டுரை அறியாமையின் பாற்பட்டது அல்ல; விஷமத் தனத்தின் பாற்பட்டது.

“தமிழக அரசும், கேரள அரசும் இணைந்து கேரள மாநிலத்திலுள்ள வைக்கத்தில் ஈ.வெ.ரா பெரியாருக்கு நினைவுச் சின்னம் எழுப்பப் போகிறார்களாம். வைக்கத்தில் நடந்த போராட்டத்திற்கு ஈ.வெ. ரா. பெரியார் மட்டுமே காரணம் என்பதுபோல், தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் நீண்ட நெடுங்காலமாகவே ஒரு சித்திரத்தைத் தீட்டி வருகிறார்கள். அப்போது நடந்த போராட்டத்தின் சரித்திரப் பின்னணியை அறிந்தவர்கள் சில உண்மைகளை மறந்திருக்க மாட்டார்கள்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது, இனவெறிக் கொள்கைக்கு எதிராகப் போராடியதை உலகம் அறியும். அவர் பாரதத்துக்குத் திரும்பிய பிற்பாடு பாரத நாட்டில் தீண்டாமை என்னும் கொடிய நோய் மக்களை வதைத்து வந்ததை அறிந்து, இதை ஒழித்துவிட உறுதி பூண்டார். தன்னுடைய நிர்மாணத் திட்டத்தில் அதற்கு முக்கியத்துவம் தந்தார். அகில இந்திய அளவில், காங்கிரசுக்குள்ளே 'ஹரிஜன சேவை' என்னும் அமைப்பை ஏற்படுத்தினார். எனவே, காந்திஜியின் நிர்மாணத்திட்டங்களில் தீண்டாமை ஒழிப்பு என்பது முக்கியமானது. தனது கொள்கைகளில் கதருக்கும், தீண்டாமைக்கும் முதலிடம் தந்தார். இதை ஒட்டி உருவானதுதான் வைக்கம் போராட்டம்" என்று எழுதப்பட்டிருக்கிறது 'துக்ளக்'கில்.

ஏதோ காந்தியார்தாம் இந்தப் போராட்டத்தையே உருவாக்குவதற்கு அடிப்படையாக இருந்தார் என்கிற கருத்தைப் பின்னணியாகக் கொண்டு இந்தப் பத்தி எழுதப்பட்டிருக்கிறது.

ஆனால், உண்மை என்ன? இந்தப் போராட்டம் துவங்கி நடத்துவதற்கெல்லாம் காந்தியார் தொடர்ந்து தடையாக இருந்திருக்கிறார். அதைப் பின்னால் ஆதார பூர்வமாக காந்தியார் நூல்களிலிருந்தே நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"துக்ளக்" கட்டுரையில் தொடர்ந்து "வைக்கம் போராட்டம் நடந்தபோது, பெரியார் ஈ.வெ.ரா அப்போதைய சென்னை ராஜதானி காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராக இருந்தார். வைக்கம் போராட்டத்தில் பல மாநிலத் தலைவர்களும் கலந்துகொண்டனர். அவர்களுடன் ஈ.வெ. ராவும் கலந்து கொண்டார். 'காங்கிரஸ்' என்னும் பின்னணி அந்தப் போராட்டத்துக்கு இல்லாமல் இருந்திருந்தால், அந்தப் போராட்டம் இவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருக்க முடியாது.

இன்று பெரியாரை மட்டுமே வைக்கம் வீரராகச் சித்தரிப்பவர்கள் காந்திஜி, காந்தியாரின் புனர் நிர்மாணத்திட்டங்கள், காங்கிரஸ் என்ற மகத்தான சக்தி இவற்றை விட்டுவிட்டு, அல்லது இவற்றைப்பற்றி இப்போது நினைவுபடுத்த ஆள்கள் இல்லை என்ற நினைப்பில் செயல்படுவது சரியல்ல. வைக்கம் போராட்டம் காங்கிரஸ் இயக்கத்தின் போராட்டம். காங்கிரஸ்காரர் என்கிற முறையில்தான் பெரியார் அதில்

கலந்துகொண்டார். எனவே, வைக்கம் போராட்டத்தின் வெற்றி ஈ.வெ. ரா.வின் தனிப்பட்ட வெற்றி அல்ல. காங்கிரஸ் இயக்கத்துக்கும் காந்தியாரின் தீண்டாமை ஒழிப்புக் கொள்கைக்கும் கிடைத்த வெற்றி அது, என்பதே உண்மை. (நான் ''காங்கிரஸ்'' என்று குறிப்பிடுவது இந்நாளைய இந்திரா காங்கிரஸையோ ராஜீவ் காங்கிரஸையோ அல்ல, நான் குறிப்பிடுவது ஒரிஜினல் காங்கிரஸை)' என்கிறார் 'துக்ளக்' கட்டுரையாளர்.

''வைக்கம் வீரர்'' என்று அய்யா அவர்களைச் சொல்லும்போதோ அல்லது தந்தை பெரியாருக்கு நினைவுச்சின்னத்தை வைக்கத்திலே எழுப்பவேண்டுமென்று சொல்லும்போதோ, தந்தை பெரியார் மட்டும் தான் வைக்கம் போராட்டத்தை நடத்தினார் என்று நம்மில் எவரும் ஒருபோதும் சொன்னதில்லை.

## வைக்கம் போராட்டத்தினுடைய வரலாறு என்ன?

தந்தை பெரியாரவர்கள் 1959இல் கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தார்கள். அப்படிச் சுற்றுப் பயணம் சென்று அந்த மாவட்டத்திலே பிரச்சாரம் செய்தபோது, பக்கத்திலே திருவனந்தபுரம், திருவாங்கூர் இருக்கின்ற காரணத்தால், வைக்கத்திலே நடந்த மனித உரிமைப் போராட்டத்தைப்பற்றித் தந்தை பெரியாரவர்கள் மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள்.

''தீண்டாமை ஒழிப்பிற்குக் காங்கிரஸ்காரர்கள் சொந்தம் கொண்டாடுகிறார்களே, அவர்களுக்கு அதற்கு உரிமையுண்டா?'' என்பதை தந்தை பெரியாரவர்கள் தெள்ளத் தெளிய பல கூட்டங்களிலே விளக்கினார்கள், ''தீண்டாமையை ஒழித்தது யார்? (வைக்கம் போராட்ட வரலாறு)'' என்னும் தலைப்பிலே அந்தச் சொற்பொழிவுகள் தொகுக்கப்பட்டு சிறு நூலாக வந்துள்ளது.

இதன் முதற்பதிப்பு 1961ஆம் ஆண்டில் வெளிவந்தது. இரண்டாவது பதிப்பு 1868ஆம் ஆண்டில், பிறகு பல பதிப்புகளும் வந்திருக்கின்றன. இப்புத்தகத்தில் தான் அப்போராட்டத்தின் அடிப்படை என்ன? என்பது உள்ளது.

“இப்பொழுது வைக்கம் போராட்டத்தைப் பற்றிச் சொல்கிற பல பேர் “வைக்கம் போராட்டம்” ஆதிதிராவிடர்கள் கோவிலிலே நுழைவதற்காக நடத்தப்பட்ட போராட்டம்” என்று சாதாரணமாகப் பேசுகின்றார்கள்.

வைக்கம் போராட்டம் என்பது கோவிலிலே நுழைவதற்காக நடந்த போராட்டம் அல்ல. அதுவே ரொம்பப் பேருக்குத் தெரியாது. முதலாவதாக வைக்கம் போராட்டத்தைப் பற்றித் தெளிவுபடுத்தப்பட வேண்டிய உண்மை என்ன என்றால், தாழ்த்தப்பட்டவர்களோ, மற்றவர்களோ கோவிலுக்குள் போகவேண்டுமென்பதற்காக நடத்தப்பட்ட போராட்டமல்ல அது.

அது, கோவிலைச் சுற்றி இருந்த - தெருக்களிலே தாழ்த்தப்பட்டவர்கள், ஈழவர்கள், தீயர்கள், புலையர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் நடக்கக்கூடாது என்று நிலவி வந்த அக்கிரமத்தை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டம் ஆகும்.

வைக்கம் கோவிலைச் சுற்றி இருந்த தெருக்களிலே அவர்கள் நடக்க உரிமை பெற்றவர்களல்ல; அவர்கள் போனால் தீட்டுப்பட்டு விடும். ஆகவே, அவர்கள் ஊரைச் சுற்றிக் கொண்டுதான் போக வேண்டுமென்று நடைமுறைப்படுத்தி வைத்திருந்தார்கள்.

எனவே, தாழ்த்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தெருவிலே நடக்க உரிமை வேண்டும் என்பதற்காகத்தான் அந்தப் போராட்டம் தொடங்கப்பட்டது.

தீண்டாதார் என்பதற்கு நாம் ‘Untouchable’ என்னும் வார்த்தையைத் ‘தொட்டால் தீட்டு’ என்னும் கருத்திலே பயன்படுத்துகிறோம். ஆனால், வைக்கத்திலே அவர்கள் அன்று அமைத்திருந்த சமுதாய முறையிலே - தீண்டுவது என்பது மட்டுமல்ல; அந்த மக்கள் மற்றவர்களை நெருங்குவதே தீட்டு. ‘Untouchables’ என்பது மட்டுமல்ல; அவர்கள் எல்லாம் ‘Unapprochables’.

அதாவது நெருங்கவே கூடாதவர்கள் என்று வகுத்து வைத்திருந்தார்கள்.

நாராயண குருவினுடைய வழிவந்த எஸ்.என்.டி.பி. யோகம் - நாராயண தர்ம பரிபாலன யோகம் என்கிற இப்படிப்பட்டவர்களெல்லாம் அதை உணர்ந்த காரணத்தினாலேதான் ஒரு தெளிவோடு - இன்றைக்குச் செயல்படுகிறார்கள். உரிமைகள் என்ன என்பதை உணர்ந்து செயல்படுகிறார்கள். அந்த வகையிலே, இந்த வைக்கம் போராட்டம் எப்படித் தொடங்கியது என்கிற உண்மையைத் தந்தை பெரியாரவர்களின் "தீண்டாமையை ஒழித்தது யார்?" என்னும் புத்தகத்திலே இருந்து முதலில் எடுத்துக் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

தந்தை பெரியார் வைக்கம் போராட்டம் பற்றிப் பேசுகிறார் கேளுங்கள்:

"வைக்கத்திலே போராட்டம் ஆரம்பமானதே ஒரு சிறு நிகழ்ச்சியிலே யிருந்துதான்.

தோழர் மாதவன் என்ற பி.ஏ., பி.எல்., படித்த ஒரு வக்கீல் ஒரு வழக்குக்காக ஆஜராகப் போனார். வழக்கு விசாரணைக்கான கோர்ட் இடம் - ராஜாவுடைய கொட்டாரத்தில் (அரண்மனையில்) ஒரு இடம். ராஜாவின் பிறந்த நாள் விழாவுக்கு அந்த ராஜாவுடைய கொட்டாரத்தின் (அரண்மனையின்) எல்லாப் பாகத்திலும் பந்தல் போடப்பட்டதில் கோர்ட் நடக்கும் இடமும் பந்தலுக்குள் அடங்கிவிட்டது. இந்த மாதவன் வக்கீல் ஒரு கேசில் ஆஜராக அங்கே போகவேண்டிய அவசியம் வந்தது. இராஜாவின் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்காக முறை ஜெபம் ஆரம்பமாயிற்று. இந்த வக்கீல் ஈழவ ('நாடார்') சமுதாயத்தைச் சேர்ந்தவராதலால் அங்கே போகக் கூடாது என்று தடுத்தார்கள்.

அந்த நேரம் நான் தமிழ்நாட்டிலே தீண்டாமை விலக்கு என்பதில் தீவிரமாக இருந்து பிரச்சாரம் செய்து கொண்டிருந்த நேரம்" என்கிறார் அய்யா!

தமக்கு அதிலே எப்படித் தொடர்பு ஏற்பட்டது என்பதற்காக இதைச் சொல்லுகின்றார்.

எனவே, இந்தச் சம்பவம் எதிலே இருந்து கிளம்பியது?

ஒரு வழக்கறிஞருக்குப் படித்த மாதவன் என்ற ஈழவ சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர், வாதாடுவதற்காக நீதிமன்றம் இருக்கின்ற இடத்திற்குப் போகின்றார். ஆனால், அவர் கீழ்ஜாதிக்காரர் என்பதால் அங்கே போகக்கூடாது என்கிறார்கள்.

இதிலிருந்து இரண்டு செய்திகளை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு மனிதனுடைய ஜாதி எங்கே போய் நிற்கிறதென்றால், அவனுடைய படிப்பையும் தாண்டி நிற்கிறது. வழக்கறிஞரானாலும் அவன் ஈழவன்தான்; வக்கீல் அல்ல. அவனை ஒரு வழக்கறிஞனாகப் பார்க்கக்கூடிய சமுதாயமாக இந்த வர்ணாசிரமதர்ம சமுதாயம் இல்லை.

அந்த நிலையில், இதுதான் மற்றவர்களுக்கு ஆத்திரத்தையெல்லாம் உண்டாக்கியது.

மேலும், அய்யா சொல்லுகிறார்:

"இந்த மாதவன் (வக்கீல்) சங்கதியை வைத்தே திருவனந்தபுரத்து ஈழவ சமுதாயத் தலைவர்கள் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்க வேண்டுமென்று முடிவு செய்தனர். வக்கீல் மாதவன், டி.கே. மாதவன், கேரள காங்கிரஸ் கமிட்டித்தலைவர் கே.பி. கேசவமேனன் இவர்களோடு இன்னும் சிலரும் சேர்ந்து முடிவு செய்தார்கள்.

(இதிலே டி.கே. மாதவன் என்பவர் மாவல்லிக்கரைப் பகுதியைச் சார்ந்த தீவிரமான ஒரு தொண்டர். அவருடைய பெயராலே "டி.கே. மாதவா மெமோரியல் காலேஜ்" என்று ஒரு கல்லூரியே இயங்குகிறது. 25 ஆண்டுகளுக்கு முன்பு தந்தை பெரியாரவர்கள் திருச்சியிலே இருந்த போது, அந்தக் கல்லூரியிலே புதிய கட்டடங்கள் கட்டி அதை விரிவு படுத்தினார்கள்.

டி.கே. மாதவன் தந்தை பெரியாரவர்களிடம் மிகுந்த ஈடுபாடு உள்ளவர் என்பதை அக் கட்டடக்குழுவினர் உணர்ந்து அப்படிக் கட்டடம் கட்டி விரிவுபடுத்துகின்ற ஒரு கட்டடத்தைத் திறந்து வைக்கவேண்டுமென்று தந்தை பெரியாரவர்களைத் திருச்சியிலே சந்தித்து அழைத்தார்கள்.

தந்தை பெரியார் அவர்களும் மாவல்லிக்கரையிலே இப்போது நடந்துகொண்டிருக்கின்ற அந்தக் கல்லூரிக் கட்டடத்தைத் திறந்து

வைப்பதற்காக அப்போது கேரளம் சென்றார்கள். அந்த நிகழ்ச்சியிலே பிரம்மாண்டமான வரவேற்பைத் தந்தை பெரியாரவர்களுக்கு அவர்கள் அளித்தார்கள். அய்யா அவர்களோடு சென்று அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு அதைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு என்னைப் போன்றவர்களுக்குக் கிடைத்தது என்பதை மகிழ்ச்சியோடு இங்கு நான் சொல்லிக் கொள்கிறேன். அந்தக் கூட்டத்திற்கு அப்போது தலைமை தாங்கியவர் கேரளத்தினுடைய முன்னாள் முதலமைச்சரான திரு.சங்கரன் அவர்களாவார்கள். அவர் ஈழவச் சமுதாயத்தினுடைய தலைவர்களிலே ஒருவர்: ஆகவே அவர் அந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

இனி அய்யா அவர்களின் பேச்சைக் கவனிப்போம்:

“முறை ஜெபத்தன்று ஆரம்பிப்பது என்று முடிவு செய்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார்கள். நான் அப்போது தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டியின் தலைவராக இருக்கிறேன். எந்த ஊரில் சத்தியாகிரகம் ஆரம்பிக்கலாமென்பதற்கு வைக்கத்தையே தேர்ந்தெடுத்தார்கள்.

ஏனென்றால், அந்த ஊரில்தான் ஊர் நடுவில் கோயிலும், அதன் 4 வாசலுக்கு எதிரிலும் 4 நேர் வீதிகளும், கோயில் மதில்கள் சுற்றிலும் பிரகாரம் தெருக்கள் எல்லாம் இருக்கும்.

அந்த வீதிகளில் கீழ்ஜாதிக்காரர்களான அவர்ணஸ்தர்களும், அயித்தக்காரர்கள் எனப்படும். தீண்டாதாரும் நான்கு புறத் தெருக்களிலும் கோயில் வாசல்களுக்கு முன்னாலும் நடக்கக்கூடாது! மூன்று ஃபர்லாங் தூரத்திலேயும், நான்கு ஃபர்லாங் தூரத்திலேயும் இருக்கிற ரோட்டில்கூட நடக்காமல் ஒரு மைல் தூரம் வேறு ரோட்டில் சுற்றிக் கொண்டுதான் எதிர் ரோட்டுக்குப் போகவேண்டும். அயித்தக்காரர்களான தீண்டப்படாதவர்களைப் போலவேதான் ஈழவர்கள், ஆசாரிகள், வாணியர்கள், நெசவாளிகள் முதலியோரும் அந்த ரோட்டில் நடந்து போகக்கூடாது.

இதேமாதிரிதான் சுசீந்திரத்திலும் உள்ள கோயில் மற்றும் அந்த ராஜ்யத்தில் உள்ள மற்றக் கோயில்கள் பக்கம் அமைந்துள்ள தெருக்களிலும் நடக்க இவர்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது.

வைக்கத்தில் கோயிலுக்குப் பக்கமாக வாசலுக்கு எதிராக அமைந்த தெருக்களில்தான் எல்லா முக்கிய ஆபீசுகளும், கோர்ட், போலீஸ் ஸ்டேஷன் முதலியனவும் இருந்தன. ஏதாவது போலீஸ்காரர்களையோ, இன்ஸ்பெக்டர்களையோ, குமாஸ்தாக்களையோ மாற்றுவதானாலும்கூட கீழ்ஜாதியர்களை அங்கு மாற்ற மாட்டார்கள். ஏனென்றால், அந்தப் போலீஸ் ஸ்டேஷன் கோர்ட்டுகள் இருக்கும் இடத்திற்குப்போக கீழ்ஜாதியார்களுக்கு அனுமதி கிடையாது என்பதால், முக்கியமான கடைகளும் அந்த வீதிகளில்தான். ஆனதால் கீழ்ஜாதிகள், கூலிகள் அங்குச் செல்ல முடியாது.

சத்தியாகிரகம் ஆரம்பமானவுடன் வக்கீல் மாதவன், பாரிஸ்டர் கேசவமேனன், டி.கே. மாதவன், ஜார்ஜ் ஜோசப் முதலியவர்களைப் போல் சுமார் 19 பேரை ராஜா அரஸ்ட் செய்யும்படி உத்தரவிட்டு அதன்படி அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

தினசரி ஒருவர் வீதம் கைது செய்து அவர்களை மாத்திரம் தனிப்பட்ட முறையில் ஸ்பெஷல் கைதிகளாக நடத்த உத்தர விட்டார்கள்.

அப்போது இராஜாவிடம் மிஸ்டர் பிட் என்ற ஒரு வெள்ளைக்காரர் போலீஸ் அய்.ஜி.யாக இருந்தார். அவர் இந்தச் சத்தியாகிரகத்தை, வெகு சாமர்த்தியமாகவும், ரொம்பவும் ஜாக்கிரதையாகவும் சமாளித்தார். இந்த பத்தொன்பது பேரைப் பிடித்து உள்ளே போட்டுவிட்டவுடன் அடுத்து சத்தியாகிரகத்தில் ஈடுபட யாரும் முன்வர ஆள் கிடைக்கவில்லை.”

- என்று கூறியிருக்கிறார் பெரியார்.

இதுதான் ரொம்பவும் முக்கியமான திருப்பம். 1924 - ஏப்ரல் முதல் வாரத்தில் தலைவர்கள் இந்த சத்தியாக்கிரக போராட்டத்தைத் தொடங்கிவிட்டார்கள். தொடங்கியதும் ஒவ்வொரு அணியாகச் செல்கிறார்கள். அப்படிச் செல்லும் போது, மற்றவர்களை அனுப்பிக் கொண்டிருந்த கேசவமேனன் ஒருநாள் அவரே தலைமைதாங்கி உள்ளே போனார். கேசவமேனன் போகும்போது அடுத்து பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் அவர்களைத் தலைவராகப் பொறுப்பேற்க வேண்டுமென்று சொல்லிவிட்டுப் போனார்.

இதிலே ஜார்ஜ் ஜோசப் யார் என்பதைப்பற்றி 20.11.1985 'விடுதலை'யிலே தெளிவாக எழுதியிருக்கிறேன்.

"இண்டியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையிலே நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பாக 'Over a Cup of Tea' என்று ஓர் அற்புதமான பகுதி வரும். எப்படி "விடுதலை"யிலே காலஞ்சென்ற நம்முடைய பழைய ஆசிரியர் குருசாமி அவர்கள் "குத்தூசி" என்னும் பகுதியிலே சிறப்பாகப் பல செய்திகளை எழுதி வருகிறாரோ, அதுபோல 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே போத்தன் ஜோசப் அவர்கள் 'Over a Cup of Tea' என்று எழுதுவார்கள்.

போத்தன் ஜோசப் அவர்கள் எக்ஸ்பிரசிலேயிருந்து விலகி பிற்காலத்திலே ராஜகோபாலாச்சாரியாரிடம் "சுவராஜ்யா" எடிட்டராகக் கூட இருந்தார்கள்.

போத்தன் ஜோசப் அவர்களுடைய சகோதரர்தான் ஜார்ஜ் ஜோசப் ஆவார்கள். இவர் வழக்கறிஞர். மதுரையிலே இன்னமும் கூட அவருடைய பங்களா இருக்கின்றது. மதுரையிலேயிருந்து கேரளத்திற்குச் சென்ற பின்பு அவர் இருந்த நிலையிலே அங்கு முக்கியப் பொறுப்பு வாய்ந்த தலைவர்களிலே ஒருவராக அன்று இருந்தார்.

எனவே, இவர்களெல்லாம் இருந்து போராட்டத்தை நடத்தினார்கள். இவர்கள் நடத்திய அந்தப் போராட்டம் வேகமாக வளர்வதற்குப் பதிலாக நாளுக்கு நாள் வேகம் குறைய ஆரம்பித்தது.

போராட்டத்தின் தொய்வுக்குக் காரணமென்ன என்றால், அவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னாலிருந்தே காங்கிரசில் காந்தியாரின் ஆதரவைக் கோரினார்கள். காந்தியார் தம்முடைய ஆதரவைத் தரவில்லை என்பது மட்டுமின்றி போராட்டத்தின் எதிரிகள் சொன்னதையே ஒரே பக்கமாகக் கேட்டுக் கொண்டார்.

அதைக் கேட்டுக்கொண்டு, "நீங்கள் இந்த வைக்கம் சத்தியாக்கிரகத்தைக் கைவிடுங்கள்; அதை நடத்தாதீர்கள்: அது தேவையில்லை; அதற்குப் பதிலாக மனமாற்றத்தை உண்டாக்க வேண்டும். இதிலே மற்றவர்கள் ஈடுபடக்கூடாது" என்று இப்படிப்

பல்வேறு சமாதானங்களைச் சொல்லி அதை ஊக்கமும், உற்சாகமும் படுத்தாதது மட்டுமல்ல; அதற்கு எதிராகவே பல சமாதானங்களைச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அது என்ன என்பதை ஆதார பூர்வமாக பின்னர்ப் பரிசீலிக்கலாம்.

இதனால் நன்றாக வளரவேண்டிய இந்தப் போராட்டம் நடுவிலே திடீரென்று கைவிடக்கூடிய அளவிற்கு அபாயம் ஏற்பட்டுவிட்டது. அதற்குப்பிறகு என்ன நடக்கிறது என்பதுதான் மிக முக்கியமான ஒரு நிலை, அய்யா அதுபற்றிச் சொல்வதைப் பார்ப்போம்:

“அதோடு அதுவும் நின்றுவிடும் போலத் தோன்றியது. உடனே எனக்கு பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப்பும், கேசவ மேனனும் சேர்ந்து கையெழுத்துப் போட்டு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார்கள். நீங்கள் வந்துதான் இதற்கு உயிர் கொடுக்கணும், இல்லாவிட்டால் நாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லை. அப்படி மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுவதனால் எங்களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை என்றாலும் பெரிய காரியம் கெட்டுப்போகுமே என்றுதான் கவலைப்படுகிறோம். உடனே நீங்கள் வந்து பொறுப்பு ஏற்க வேண்டும்” என்று எழுதி அனுப்பினார்கள். எனக்கு ஏன் எழுதினார்கள் என்றால், தீண்டாமையைப் பற்றிப் பேசுவதில் நான் கெட்டிக்காரன், கிளர்ச்சியிலும் நான் கெட்டிக்காரன் என்று எனக்குப் பேர். நான் அப்போது சுற்றுப் பிரயாணத்தில் இருந்தேன்.

ஈரோட்டிற்கு எழுதப்பட்ட அந்தக் கடிதம் ரீடைரக்ட் செய்யப்பட்டு மதுரைஜில்லாவில் உள்ள பண்ணைபுரம் என்னும் ஒரு மலைப்பக்க கிராமத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவன் என்கிற முறையில் நான் பேசிக்கொண்டிருந்தபோது என் கைக்குக் கிடைத்தது.

(அய்யா அவர்கள் இந்த பண்ணைபுரம் என்ற இடத்திலிருந்துதான் வைக்கத்திற்குப் புறப்படுகிறார். அது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சிறு கிராமம். அந்தப் பண்ணைபுரத்திற்கு நாங்கள் ஒருமுறை சென்றிருந்தபோது அய்யா அவர்கள் அந்த சம்பவத்தை நினைவுகூர்ந்து மிக விரிவாகச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். பேசும்போதும் கூட்டத்திலே சொன்னார்கள்.)

உடனே மீதி சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை எல்லாம் ஒத்திப்போட்டு விட்டு நேரே ஈரோட்டுக்குப் போனேன். வீட்டுக்கு வந்தவுடன் வைக்கத்திற்குப் போய் சத்தியாக்கிரகத்தை. நடத்துவதென்று மிக்க மகிழ்ச்சியோடு மூட்டை கட்டிவிட்டேன்.''

சாதாரணமாக அய்யா உடனே முடிவெடுக்கிறார். எங்கே புறப்படுகிறீர்கள் என்று நாகம்மையார் கேட்கிறார். அதற்கு, ''எனக்கு லேசாக வயிற்று வலி, உடல்நிலை சரியில்லை சென்னைக்குச் சென்று மருத்துவம் பார்த்துக்கொண்டு தகவல் சொல்கிறேன்'' என்று எங்கே நாகம்மையார் பயணத்தைத் தடுத்துவிடுவாரோ என்று ''பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்'', என்பதற்கேற்ப இலேசாக ஒரு பொய்யைச் சொல்லிவிட்டுத்தான் அய்யா புறப்படுகிறார். இச்செய்தியை அய்யா அவர்களே கூட்டத்திலே சொல்லியிருக்கிறார்.

அதற்குப் பிறகு நாகம்மையார் அவர்களும், கண்ணம்மையார் அவர்களும் - அவர்களே போய் அந்தப் போராட்டத்தில் கலந்து கொள்கிறார்கள். அது அடுத்த கட்டம்.

மேலும் அய்யா சொல்கிறார், திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்கும் நான் வரும்வரை தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளும்படி ஒரு லெட்டர் எழுதிவிட்டு இந்தச் சந்தர்ப்பம் ஒரு நல்ல வாய்ப்பு, இதை விட்டால் இந்த மாதிரி அருமையான வேலை செய்ய வேறு வாய்ப்புக் கிடைக்காது என்று எழுதிவிட்டு 2 பேரைக் கூட்டிக் கொண்டு வைக்கத்திற்கு வந்தேன். (இங்கே எவ்வளவு பொறுப்புணர்ச்சியோடு நடந்திருக்கிறார் என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்கவேண்டும்.)

வைக்கம் போராட்டத்துக்காக நான் வருகிறேன் என்ற விஷயம் தெரிந்துகொண்டு, போலீஸ் கமிஷனர் பிட், இன்னொரு அய்யர் (அவர் பெயர் இப்போது சரியாய் ஞாபகத்திற்கு வரவில்லை. திவான் பேஷ்கார் சுப்ரமணிய அய்யர் என்று நினைக்கிறேன் என்று அய்யா சொல்லுகிறார்.)

(இந்தப் பேச்சை நான்தான் எழுதினேன். அந்த வாசகங்களை அப்படியே எழுதியிருக்கிறோம்.)

வைக்கத்தைப்பற்றி ஒரு பெரிய ஆராய்ச்சியாளர் டாக்டர்.டி.கே. ரவீந்திரன் என்பவர் "Vaikkam Satyagraka and Gandhi" என்று டாக்டர் பட்டத்திற்காக ஆராய்ச்சி செய்திருக்கிறார். வைக்கத்தைப்பற்றி வந்திருக்கின்ற நூல்களில் இதுதான் மிகவும் தெளிவான விரிவான அளவில் வந்திருக்கக்கூடிய ஓர் ஆங்கில நூலாகும்.

இந்த ஆங்கில நூலை முதல் பதிப்பாக வெளியிட்ட போது 'Vaikkam Satyagraka and Gandhi' என்று அவருடைய ஆய்வுத் தலைப்பை வைத்து வெளியிட்டார். திருவனந்தபுரத்தில் கேரளப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியாக இருப்பவர்தாம் டி.கே. ரவீந்திரன்.

இதற்கு அடுத்த பதிப்பில் தலைப்பை 'Hundred yards to Freedom' (சுதந்திரத்திற்கு நூறு கெஜ தூரம்) என்று மாற்றினார்.

அவர்கூட அப்புத்தகத்தில் ரொம்பவும் விரிவாக, விளக்கமாகச் சொல்லும்போது எல்லோர் பேரையும் எழுதியிருக்கிறார். அப்படி வரும்போது. திவான் பேஷ்கார் சுப்ரமணிய அய்யர் என்று பெயர் தெளிவாக இருக்கிறது. ஆகவே, அய்யா அவர்கள் எவ்வளவு நீண்ட காலத்திற்கு முன்னால் நடந்த செய்திகளைக்கூட நினைவாற்றலோடு குறிப்பிடுகிறார்கள் என்பதையும் இங்குச் சுட்டிக்காட்ட வேண்டும்.)

அய்யா தொடர்ந்து சொல்கிறார். "ஒரு தாசில்தாரும், மற்ற எல்லோரும் என்னைப் படகிலிருந்து நான் இறங்கும்போது வரவேற்றார்கள். (விஸ்வநாத அய்யர் என்பது அந்தத் தாசில்தாருடைய பெயர். அதிலே சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் அய்யர், அய்யங்கார்கள்தாம். இதில் 'பிட்' என்பவர்தாம் வெள்ளைக்காரர்). மகாராஜா அவர்கள் எங்களை அவர்கள் சார்பில் வரவேற்று வேண்டிய எல்லா சவுகரியங்களையும் பண்ணித்தரச் சொன்னார்" என்று சொல்லி வரவேற்றார்கள்.

இது எனக்குப் பெரும் ஆச்சரியத்தைத் தந்தது என்றாலும், ஏன் மகாராஜா அப்படிச் செய்தார் என்றால் அதற்கு 3 மாதத்திற்கு முன்பு இந்த ராஜா டெல்லிக்குப் போகிறதற்கு ஈரோடு வழியாக வந்து ஒரு நாள் ஈரோட்டிலே தங்கி விட்டு அடுத்த நாள் டெல்லிக்கு இரயில் ஏறிச் சென்றார். இப்படி பலமுறை இது வழக்கம்.

அப்படி ஈரோட்டிலே தங்கும் போது அதற்கு வேண்டிய வசதிகள், மகாராஜாவின் சிப்பந்திகள் தங்கும் இடம் எங்கள் சத்திரத்திலும், மகாராஜா எங்கள் பங்களாவிலும்தான் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். அப்படி 3 மாதத்திற்கு முன் வந்த போது அவருடன் இந்த போலீஸ் அதிகாரி இன்னும் ராஜாவின் உதவிக்குத் தேவையான எல்லா அதிகாரிகளும் வந்து போனதில், இவர்கள் ஈரோட்டில் என்னை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறவர்களாகவும் நானும் அவர்களை எங்கள் வீட்டிற்கு வந்தபோது சந்தித்துப் பேசியவனாகவும் இருந்திருக்கிறேன். இதனால் மகாராஜா சற்று மரியாதை காட்டினார்.

சத்தியாகிரகத்தைத் தொடர்ந்து நடத்த வந்த என்னை மகாராஜா சார்பில் இந்தப் பெரிய அதிகாரிகளே வரவேற்கிறார்கள் என்று கண்டதும் அப்பக்கத்திய பாமர மக்களுக்கு ஒரே குஷாலாக ஆகிவிட்டது.

என்னை விருந்தினராக மகாராஜா கருதினாலுங்கூட நான் பல இடங்களிலும் சென்று பொதுக் கூட்டம் போட்டு சத்தியாக்கிரகத்தைப் பற்றிப் பேசினேன்; காரசாரமாகப் பேசினேன்! ‘கீழ்ஜாதிமக்களான நாம் உள்ளே தெருவில் போவதால் தீட்டுப்பட்டு விடும் என்று சொல்லும் வைக்கத்தப்பனைப் போட்டு வேட்டி துவைக்கணும்’ என்றெல்லாம் கடுமையாகப் பேசினேன்.

சுற்று வட்டார மக்கள் ஆயிரக்கணக்கில் வைக்கம் வந்து கூடிவிட்டார்கள். அது ராஜாவுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. 5-6 நாள் வரை சும்மாதான் இருந்தார். பலரும் போய் அவரிடத்தில் நான் பேசுவது குறித்து முறையிட்டார்கள். பிறகு ராஜாவினால் சும்மா இருக்க முடியவில்லை .

இப்படி சுமார் 10 நாள் ஆனவுடனேயே ஒரு போலீஸ் (சூப்பிரண்டெடன்ட்) அதிகாரி, அவர் அய்யங்கார். (பிச்சு அய்யங்கார் என்று நான் இந்த ரவீந்திரன் புத்தகத்திலிருந்து அறிந்துகொண்டேன்.) அவர் முயற்சியால் பி.சி.26இன்படி, தடையுத்தரவு போட்டார். அந்த நாட்டிலே 26 என்பது, இப்போது இங்கே 144 தடையுத்தரவு போன்றது.

நானும் சட்டம் மீறுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கண்டறிந்தேன். உடனேநான் சட்டத்தை மீறிப் பேசினேன். என்னுடன் (தற்போது காங்கிரசுக்காரராக இருக்கும்.) திரு. அய்யாமுத்து அவர்களும் மற்றும் இருவரும் சட்டம் மீறினோம். எங்களைக் கைது செய்தார்கள். எல்லோருக்கும் ஒரு மாதம் வெறுங்காவல் போட்டார்கள்! என்னை அருவிக்குத்தி என்ற ஊரில் உள்ள ஜெயிலிலே வைத்தார்கள்! அதற்குப் பிறகு எனது முதல் மனைவியார் திரு. நாகம்மையாரும் பிறகு நான் வெளியே வந்தவுடன் எனது தங்கை எஸ்.ஆர். கண்ணம்மாளும் மற்றும் சிலரும் வந்து நாடெல்லாம் சென்று பிரச்சாரம் செய்தார்கள். நான் விடுதலை ஆகிவந்து அதே மாதிரி மறுபடியும் திட்டம் போட்டேன்.

நான் வெளியே வருவதற்குள் இந்தக் கிளர்ச்சிக்கு ஏராளமான அளவில் ஆதரவு பெருகிவிட்டது. மளமளவென்று ஆள்களும் வந்துசேர ஆரம்பித்தனர். ஏராளமான பேர்கள் பல பகுதியிலும் சென்று சுற்றுப்பயணம் செய்து தீவிரப் பிரச்சாரம் செய்தார்கள். எதிரிகளும் அடிதடி, காலித்தனம், கலவரங்கள், முதலியவற்றில் ஈடுபட்டு இதை எப்படியாவது ஒடுக்கிவிட வேண்டுமென்று பலவித முயற்சிகளும் செய்துபார்த்தார்கள்.

ஆனால் போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு பெருகிக் கொண்டேயிருந்தது! வெளிநாடுகளிலிருந்து மலையாளிகளும் ஜாதிக்கொடுமை என்பதைக் கண்டு மனம் துடித்து அதற்கு தங்கள் எதிர்ப்பையும் ஜாதிக்கொடுமைகளை எதிர்த்துச் செய்யப்படும் போராட்டத்திற்குத் தங்கள் ஆதரவையும் காட்டும் வண்ணம் தினம் ரூபாய் 50, 60, 100 என்று மணியார்டர் அனுப்பிக் கொண்டேயிருந்தார்கள்.

பெரிய பந்தல் போட்டு தினசரி போராட்ட வீரர்கள் முகாம் செய்திருந்த வீட்டில் 200-300 பேர் சாப்பிடுவார்கள். தேங்காயும் மற்றக் காய்கறிகளும் மலைமலையாகக் குவிந்து கிடக்கும். பெரிய கல்யாண வீடு மாதிரி காரியங்கள் நடைபெறும்!

திரு.இராஜகோபாலாச்சாரியார் எனக்குக் கடிதம் எழுதினார். "நீ ஏன் நம் நாட்டை விட்டு விட்டு இன்னொரு நாட்டிலே போய் ரகளை செய்கிறாய்? அது சரியல்ல, அதை விட்டுவிட்டு நீ இங்கு வந்து, விட்டு விட்டுச் சென்ற வேலைகளைக் கவனி" என்று எழுதினார்.

(அதாவது, போராட்டத்தை எப்படியாவது நிறுத்திவிட வேண்டும். என்பதுதான் ராஜாஜியின் எண்ணம். காந்தியாருடைய கருத்தும், இவருடைய கருத்தும் இரண்டும் ஒன்றுதான். இதுதான் மிக முக்கியமாகக் கவனிக்கத்தக்கது.)

அப்போது இருந்த எஸ். சீனிவாசய்யங்காரும் ;இப்படித் தான் என்னை வைக்கத்திற்கு வந்தே அழைத்து வரச் சொன்னார். அதேமாதிரி பத்திரிகையிலும் எழுதினார்கள். ஆனால், இதற்குள் சத்தியாகிரக ஆசிரமத்தில் 1000 பேருக்கு மேல் சேர்ந்தார்கள். தினமும் ஊர் முழுவதும் சத்தியாகிரக பஜனையும் தொண்டர்கள் ஊர்வலமும் நடந்தன. உணர்ச்சி வலுத்துவிட்டது.

பஞ்சாபில் சுவாமி சிரத்தானந்தா என்பவர் ஓர் அப்பீல் போட்டார். அதன் பிரகாரம் பஞ்சாபிலேயிருந்து சீக்கியர்கள் 20-30 ஆள்களையும் 2000 ரூபாயையும் கையிலெடுத்துக் கொண்டு நேரே வைக்கத்துக்கு வந்தார்கள். தங்களின் சாப்பாட்டுச் செலவை தாங்களே ஏற்றுக்கொண்டு ஆதரவு தருவதற்காக உடனே இங்கிருந்த பார்ப்பனர்கள் எல்லாம் சீக்கியர்கள் வந்து இந்து மதத்திற்கு எதிராகப் போர் தொடுக்கிறார்கள் என்றெல்லாம் காந்திக்கு எழுதினார்கள்' என்கிறார் அய்யா.

இந்த சீக்கியர் - இந்து மதப் பிரச்சினை இன்றைக்கு நேற்று வந்ததல்ல; இது வைக்கத்திலிருந்தே உருவான ஒன்று.

காங்கிரஸ் நூற்றாண்டில் - தெரிந்த நூற்றாண்டில் - தெரியாத தகவல் இது. அதைத் தெளிவாக நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அய்யாவின் விளக்கம் தொடர்கின்றது.

"உடனே அதன்பேரில் காந்தியார் துலுக்கன், கிறிஸ்துவன், சீக்கியன் ஆகிய பிற மதக்காரன் எவனும் இதில் கலந்து கொள்ளக் கூடாது என்று எழுதிவிட்டார்கள்" என்று கூறுகிறார் தந்தை பெரியார்!

அடிப்படையிலேயே காந்தியாருக்கு ஒரு தவறான சூழ்நிலை இருக்கிறது. காந்தியாருடைய எண்ணம் சரியல்ல. காந்தியார் இந்தப் போராட்டத்தை எப்படியாவது நிறுத்த வேண்டுமென்று எதிரிகளோடு சேர்ந்துகொண்டுதான் முயற்சி எடுத்தாரே தவிர, இது வெற்றி பெறவேண்டுமென்று அவர் முயற்சி எடுக்கவில்லை. வைக்கம்

போராட்ட வெற்றி காந்தியாரையும் மீறி அடைந்த வெற்றி என்பதை இவை எல்லாம் தெளிவாக எடுத்துக் காட்டுவதாக இல்லையா?

அய்யா அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்:- "காந்தி எழுதினவுடனே இதில் கலந்திருந்த சீக்கியன், சாய்பு, கிறிஸ்துவன் எல்லாம் போய் விட்டார்கள். அதுபோலவே தீவிரமாக இதில் ஈடுபட்டு முன்னோடியாக உழைத்த காலஞ்சென்ற ஜோசஃப் ஜார்ஜ்க்கு இராஜகோபாலாச்சாரியார் கடிதம் எழுதினார். "இந்து மதச்சார்புள்ள இந்தக் காரியத்தில் நீ சேர்ந்திருப்பது தப்பு" என்றார்.

அதை ஜோசஃப் ஜார்ஜ் அவர்கள் இலட்சியம் பண்ணாமல் திருப்பி எழுதினார். "நான் என் சுயமரியாதையை விட்டுவிட்டு இருக்க மாட்டேன், வேண்டுமானால் என்னை காங்கிரசிலிருந்து விலக்கி விடுங்கள்" என்றார். தற்போதைய நாகர்கோவில் பயோனீர் டிரான்ஸ்போர்ட்டைச் சேர்ந்த சேவு என்பவரும், அண்மையில் காலஞ் சென்ற டாக்டர் எம்.இ. நாயுடு (திரு.இ.எம்.எம் பெருமாள் நாயுடு அவர்கள் இந்தப் பேச்சுக்கு முதல் நாள் இரவு நாகர்கோவிலில் காலமானார். பிறகு தந்தை பெரியார் சென்று துக்கம் விசாரித்தார் என்பதை வாசகர்கட்கு நினைவூட்டுகிறோம்). அவர்களும் என்னுடனேயே இருந்து தொடர்ந்து போராட்டத்தை நடத்துவது என்று முடிவு செய்தார்கள். அவர்கள் இதைவிட்டுப் போகமாட்டோம் என்று உறுதியாகத் தெரிவித்துவிட்டார்கள் என்றாலும், காந்தி சத்தியாகிரகத்திற்கு விரோதமாக எழுதி பணத்தையும் ஆளையும் தடுத்துவிடுவாரோ என்று பயப்பட்டார்கள்.

அந்தச் சமயம் சுவாமி சிரத்தானந்தா அவர்கள் வைக்கம் வந்து தாம் பணத்திற்கு வகை செய்வதாகச் சொன்னார். பிறகு காந்தி கட்டளைக்கு விரோதமாகவே சத்தியாகிரகம் நடந்துவந்தது."

இதெல்லாம் அய்யாவினுடைய வாசகங்கள். அய்யா சொன்னார் என்றால் காந்திக்கு விரோதமாக அய்யா தவறான தகவல் சொல்லி அவருக்கு வசதியாகச் சரித்திரத்தைச் சொல்லியிருக்க முடியும் என்று யாராவது வாதிட முடியும். அய்யா சொன்ன செய்திகள் நூற்றுக்கு நூறு உண்மை என்பதை ஆராய்ச்சியாளரும் தகுந்த ஆதாரங்கள் காட்டி வாதிடுகிறார். அதனையும் நாம் பின்னர் பரிசீலிக்கலாம்.

காந்தியாருடைய நூல்களிலேயே தெளிவாக அந்த உண்மைகளெல்லாம் வந்திருக்கின்றன. வைக்கம் போராட்டத்தின் போது காந்தியாரவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்ற செய்திகளை அய்யா அவர்கள் சிறு உண்மைகளைக்கூட மறைக்காமல், மறவாமல் அப்படியே வெளியிட்டிருக்கின்றார்கள். -

அதனைத் தொடர்ந்து:

"இதற்கிடையிலே நடந்த ஒரு நிகழ்ச்சியும் கவனிக்கத்தக்கது. எங்கள் போராட்டத்திற்குப் பெரிய மரியாதையும் செல்வாக்கினையும் தேடிக் கொடுத்து விட்டது. இந்தக் காந்தியார் கட்டளை. இந்தச் சமயத்தில் என்னை மறுபடியும் பிடித்து 6 மாதக் கடினக்காவல் தண்டனை விதித்து ஜெயிலில் போட்டுவிட்டார்கள்" என்கிறார் அய்யா.

அய்யா அவர்கள் மறுபடியும் போய்த் தீவிரமாய் ஆள்களை உருவாக்கியவுடனே, அரசாங்கத்திற்குக் குறிப்புக்கு மேலே குறிப்புப் போகிறது. அதுமட்டுமல்ல, பெரியாரவர்கள் வந்துதான் இந்த இயக்கத்திற்கே ஒரு புத்துயிர் ஊட்டியிருக்கிறார் என்று சொல்லி சென்னை ராஜதானியின் தலைமைச் செயலருக்கு எழுத கவர்னர் ஜெனரலின் - ஏஜெண்டான சி.டபிள்யூ.ஈ.காட்டன் என்ற அய்.சி.எஸ். அதிகாரி - கேரளம் சென்று நிலைமைகளை நேரில் கண்டறிந்த பின்னர் ஒரு கடிதம் விளக்கமாக எழுதுகிறார்.

ஆகவே, பெரியார்தான் அடிப்படையான முக்கியத்தலைவர் என்று முடிவிற்கு வருகிறார்கள். இவரைப்பிடித்து கடுமையாகத் தண்டித்து உள்ளே போட்டுவிட்டால்; போராட்டம் நின்றுவிடும் என்று நினைக்கிறார்கள். அதன் படி 6 மாத கடினக்காவல் தண்டனை விதித்து ஜெயிலில் போட்டு விட்டார்கள்.

அய்யாவின் உரை தொடர்கிறது:

"பிறகு சத்தியாக்கிரகத்தை நிறுத்துவதற்காகவும், எங்களை அழிப்பதற்காகவும் என்று நான் ஜெயிலிலே இருக்கிற சமயத்தில், இந்த நம்பூதிரிப் பார்ப்பனர்களும் சில வைதீகர்களும் சேர்ந்துகொண்டு "சத்ரு சங்கார யாகம்" என்ற ஒன்றை வெகு தடபுடலாக ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து நடத்தினார்கள்.

- வைக்கம் சரித்திரத்திலேயே இதுதான் ரொம்பவும் சுவையானது. சத்ரு சங்கார யாகம் என்றால், சமஸ்கிருதத்தில் - சத்ரு என்றால் எதிரி என்று பொருள் - சங்காரம்‘ என்றால் அழிப்பது என்று பொருள் - ஆகவே எதிரிகளை அழிப்பதற்காகவே ஒரு யாகம்.

“வேதம்” என்ற வார்த்தைக்கு “அறிவு” என்று பொருள் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த நான்கு வேதங்களில் (ரிக்கு, யஜுர், சாம, அதர்வண) உள்ள சுலோகங்களைப் படித்தால், அதில் ஒன்றும் பெரிய சங்கதி இருக்காது: ரொம்பவும் உளறுவதுபோல் இருக்கும்.

அதில் “ஓ இந்திரனே! எங்களை அழிக்க வரக்கூடிய அந்த சூத்திரர்களுக்கெதிராக நீ ஜுரத்தை ஏவுவாயாக! இடியையும் மின்னலையும் உண்டு பண்ணி அவர்களை அழிப்பாயாக!. என்று எல்லாம் இந்த மாதிரி வேண்டுகோள்தான் இருக்கும். வேதத்தை மிகவும் பொறுமையாகப் படித்தால் இதைத் தவிர வேறொன்றும் இருக்காது.

அந்த “சத்ரு சங்கார யாகம்” என்றால், பார்ப்பான் பிழைக்கவேண்டும் என்பதுதான் அடிப்படை. அதிலும், மூட நம்பிக்கைக்குத் தொட்டிலே கேரளம்தான், “மூடநம்பிக்கைக்கு அதிகமான இடம் கேரளாதான்” என்று விவேகானந்தர் ஒருமுறை ரொம்பவும் அழகாகச்சொன்னார். அதற்கு மலையாளத்தில், “அந்த விசுவாசம்” என்று பெயர் என்று அய்யா சொன்னது எனக்கு ஞாபகம் இருக்கிறது.

எனவே, எதிரிகளை அழிப்பதற்காக யாகம் செய்கிறோம் என்ற பெயராலே பார்ப்பனர்கள் நெய், பணம், பட்டுப்புடவைகள் என்று ரொம்பவும் வருமானமடைகிறார்கள். அதுவும் அந்த அரச குடும்பமும் அந்த திவான் வகைகளுடைய ஆதிக்கத்தில் இருப்பதால் - (திவான்கள் எல்லாம் அய்யர், அய்யங்கார்கள்) சுற்றுவட்டாரம் முழுவதும் வைதீக உணர்ச்சியுடைய நிலையில் இருக்கிறது.

ஆகவே, “சிறைச்சாலையிலிருக்கிற ராமசாமி நாயக்கர், இன்னும் மற்றவர்களையெல்லாம் யாகம் நடத்தும்போது புறப்படுகின்ற பூதம் நேராக சிறைக்குச் சென்று அவர்களைக் கழுத்தைப் பிடித்துவிடும். உடனே அவர்கள் இறந்து போய் விடுவார்கள். என்று சத்ரு சங்கார யாகம் நடத்துவதில் வைதீகர்கள் வேகமாக இருக்கிறார்கள். இந்தக்

கிளர்ச்சி நின்றால்தான் அமைதி ஏற்படும் என்று சொல்லி இதிலே அரசாங்கத்தவர்களும் மறைமுகமாக உடன்பாடாக இருக்கின்றார்கள்

இந்த சத்ரு சங்கார யாகத்திலிருந்து பூதம் கிளம்பியதா?"

அது ரொம்பவும் சுவையானது. அதை அய்யா அவர்களே சொல்லுகிறார்கள் கேளுங்கள்:

"ஒருநாள் நடுச்சாமத்தில் தொடர்ந்து வேட்டுச்சத்தம் கேட்டது. நான் ஜெயிலில் விழித்துக்கொண்டிருந்தேன். ரோந்து வந்தவனைப் பார்த்து, என்ன சேதி இப்படி வெடிச்சத்தம் கேட்கிறது? இந்தப் பக்கம் ஏதாவது பெரிய திருவிழா நடக்கிறதா? என்று கேட்டேன். அதற்கு அவன் சொன்னான், 'மகாராஜாவுக்கு உடம்பு சவுக்கியமில்லாமல் இருந்து மகாராஜா நேற்று ராத்திரி திருநாடு எழுந்துவிட்டார்' என்றான்."

மகாராஜா 'திருநாடு எழுந்துவிட்டார்' என்றால் செத்துப் போய்விட்டார் என்று அர்த்தம்; வேறொன்றுமில்லை. ஆகவே, சத்ரு சங்கார யாகம் செய்யும்போது பூதம் ஜெயிலுக்குள் போவதற்குப் பதிலாக அரண்மனைக்குள் போய்விட்டது போல் இருக்கிறது."

அய்யா மேலும் சொல்லுகிறார்:

"அதாவது இராஜா செத்துப்போனார் என்று சொன்னான். அவ்வளவுதான்! மகாராஜா செத்தார் என்றவுடன் எங்களுக்கு ஜெயிலுக்குள்ளாகவே ரொம்பப் பெருமை வந்துவிட்டது. அவர்கள் பண்ணிய யாகம் அங்கேயே திருப்பி மகாராஜாவைக் கொன்றுவிட்டது என்றும், அந்த யாகம் சத்தியாக்கிரகக்காரர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை என்றும் மக்களிடையே இது ஒரு தனி மதிப்பை ஏற்படுத்திவிட்டது.

(அப்போதும் மூடநம்பிக்கை இப்படித் திரும்பியது. இந்த மூடநம்பிக்கைக்கு உள்ள சக்தி இரட்டை முனைக் கத்திமாதிரி இந்தப் பக்கமும் திரும்பும், அந்தப் பக்கமும் திரும்பும் அது அரசர் குடும்பத்தையே ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது.)

அதன் பிறகு அரசாங்கம் எங்களையெல்லாம் ராஜாவின் கருமாதியை முன்னிட்டு விடுதலை செய்தனர். எதிரிகள் குரலும் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கிவர ஆரம்பித்தது.

இராணியும் கூப்பிட்டு எங்களோடு ராஜி பண்ணி ஓர் உடன்பாட்டுக்கு வர விருப்பம் தெரிவித்தவுடன் அப்போது சமஸ்தானத்தில் திவானாக இருந்த ஒரு பார்ப்பான் (அதாவது ராகவய்யா) என்னிடத்தில் நேரே இராணி பேசக்கூடாது என்று கருதி திரு. இராஜகோபாலாச்சாரிக்குக் கடிதம் எழுதினார்.

(இதில் இன உணர்ச்சி எப்படி இருக்கிறது என்று பாருங்கள். பெரியாருக்கு அந்தப் பெருமை வந்து விடக்கூடாது என்று அதிலே சம்பந்தமே படாத ராஜகோபாலாச்சாரிக்கு எழுதப்படுகிறது. இதற்கு என்ன அர்த்தம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.)

இராஜகோபாலாச்சாரியும் எங்கே என்னிடத்தில் இராணி பேசி உடன்பாட்டிற்கு வந்தால் எனக்கு மரியாதையும் புகழும் வந்து விடுமோ! அந்த மாதிரி வரக்கூடாது என்று கருதி, காந்தியாருக்கே அந்த வாய்ப்பை அளித்துக் காந்தியின் மூலமே காரியம் நடந்ததாக உலகுக்குக் காட்ட வேண்டுமென்று தந்திரம் செய்து காந்திக்குக் கடிதம் எழுதினார். எனக்கும் அதைப்பற்றிக் கவலையில்லை: எப்படியாவது காரியம் வெற்றியானால் போதும். நமக்குப் பேரும் புகழும் வருவது முக்கியமல்ல என்ற கருத்தில் நானும் ஒப்புக்கொண்டேன்.

(அய்யாவுக்குள்ள அந்தப் பெரிய எண்ணத்தை நீங்கள் கவனிக்க வேண்டும்)

காந்தியும் புறப்பட்டு வந்தார். இராணியோடு காந்தி பேசினார். (இப்படி இந்தச் சத்தியாகிரகம் நல்லபடி வேரூன்றி வெற்றி நிலைக்கு வந்தவுடன் பார்ப்பனர்கள் காந்தியை இதில் புகுத்தினார்கள் என்று அய்யா சொல்லுகின்றார்.

தந்தை பெரியாரவர்கள் சொல்லுகின்ற இந்தக் கருத்து எவ்வளவு ஆழமானது என்பதை "துக்ளக்" ஆசிரியர் போன்றவர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். சும்மா விஷமத்தனத்தை இங்கே இறைத்து விட்டால் மட்டும் போதாது.

பதில் சொல்வதற்கு யாரும் ஆள் இல்லையென்று நினைக்க வேண்டாம்; உண்மைக்கு மாறாக இந்த இயக்கத்தைப்பற்றி எவர் பேசினாலும் உடனடியாகப் பதில் சொல்வதற்கு ஆள்கள் ஆதாரத்தோடு இருப்பார்கள். (கைதட்டல்)

ஆரம்பத்திலிருந்தே காந்தியார் இதற்கு விரோதமாகத்தான் இருந்து வந்திருக்கிறார். “மகாத்மா காந்தி நூல்கள்” என்று காந்தி நூல் வெளியீட்டுக் கழகத்தினர் காந்தியாருடைய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள்.

இதிலே, வைக்கம் போராட்டத்தின் போது மற்றவர்கள் எழுதியது காந்தியார் அதற்குப் பதில் சொன்னது அத்தனையையும் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

பத்தாவது பகுதியிலே முழுவதும் வைக்கத்தைப் பற்றியே வந்திருக்கிறது. ஒவ்வொரு கட்டத்திலும் காந்தியார் வைக்கம் போராட்டத்தை மறுத்துதான் இருக்கிறார்.

இந்த ஆதாரங்கள் மட்டுமல்லாமல், மற்றவையும் உள்ளன. ரெக்கார்டு ஆபீஸ் (Recored Office) என்று சொல்லக்கூடிய திருவனந்தபுர அரசாங்கத்தினுடைய ஆவணக்காப்பகம் உள்ளது. அந்த ஆவணக்காப்பகத்திற்கும், இன்னும் மற்ற மற்ற ஆவணக் காப்பகங்களுக்கும் டாக்டர் ரவீந்திரன் அவர்கள் சென்று வைக்கம் சம்பந்தப்பட்ட பல தகவல்களைத் திரட்டியிருக்கின்றார்.

திரட்டி முழுமையாக வைக்கம் போராட்டத்தைப் பற்றி புத்தகமாகக் கொடுத்திருக்கின்றார்.

அய்யா அவர்கள் சொன்ன செய்தியை உங்களுக்கு எடுத்துச் சொல்லிவிட்டோம். இனி ரவீந்திரன் அவர்கள் சேகரித்த ஆதாரங்களைப் பார்க்கலாம்.

மிக முக்கியமாக பாரிஸ்டர் கேசவமேனன் அவர்கள் வைக்கத்திலே போராடுவது என்று ஒரு நிலையை எடுத்து அதற்கான முயற்சிகளைத் தொடங்கியபோது - காந்தியார் அவரை அந்தப் போராட்டத்தை நிறுத்தி வைக்கும்படியாகச் சொல்கிறார்.

காரணம் என்ன?

அங்கிருக்கிற வைதீகர்கள் எல்லாம் காந்தியாரிடம் முறையிடுகிறார்கள். “சமஸ்தானத்தில் ரகளை பண்ணுவதற்கு நீங்களெல்லாம் அவர்களை அனுமதிக்கக் கூடாது: இதற்கு

உங்களுடைய ஒத்துழைப்புத் தேவை" என்று சொல்லி அவர்கள் காந்தியாருக்கு எழுதுகிறார்கள்.

அதற்குக் காந்தியார் ஜார்ஜ் ஜோசப்புக்கு எழுதுவது மாதிரி இவருக்கு ஒரு கடிதம் எழுதுகின்றார். எழுதிய கடிதம் இவருக்கு வந்து சேருவதற்கு முன்னாலேயே அந்தச் செய்தியை 'இந்து'ப் பத்திரிகையிலே கொடுத்து விடுகிறார்கள்.

பாரிஸ்டர் கே.பி. கேசவமேனன் அதை 'இந்து'விலே படிக்கிறார். உண்மை நிலை காந்தியாருக்குச் சரியாகத் தெரியாத காரணத்தால்தான் அவர் இப்படிப்பட்ட ஒரு நிலையை எடுத்துவிட்டார். - ஆகவே, உண்மையைக் காந்தியாருக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு வேகமாக ஒரு 'தந்தி'யையே பதிலாக அவர் அனுப்புகின்றார்.

அந்தத் தந்தியின் வாசகங்கள் என்ன என்பதை நீங்கள் பார்த்தாலே உங்களுக்குத் தெளிவாகத் தெரியும். காந்தியார் பிரச்சினையின் அடிப்படையையே தெரிந்துகொள்ளாமல் இவ்வளவு பெரிய மனித உரிமைப் போராட்டத்தை நிறுத்த முயன்றிருக்கிறார். யாரோ அங்கிருந்த வைதீகர்கள் - பார்ப்பனர்கள் சொன்னதைக் கேட்டுக் கொண்டு காந்தியார் தலையை ஆட்டினார். மிக முக்கியமான ஒரு கட்டம் உருவாகும்போது அதைத் தடுத்து நிறுத்துவதற்குத் தமக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தினார் என்பது இதன் மூலம் தெளிவாகத் தெரியும்.

## TELEGRAM TO THE MAHATMA

**Reads not private property**

The press has published a letter stated to have been sent to Mr. KesavaMenon by Mr. Gandhi. Surprise is expressed that it should have been represented to Mr. Gandhi that Vaikom Temple is private property of Brahmins. Mr. KesavaMenon has sent the following reply to Mr. Gandhi: -

"Dear Mahatmaji, I learn from the "Hindu" of the 4th instant that you have sent me a letterr regarding the suspension of Satyagraha. I have not yet received the letter itself. Perhaps it is on its way to vaikom. It is better than I do not wait until I received the letter to explain to you the real situation.

The two gentlemen Messrs. Sivaram lyer and Vanchiswara lyer mentioned in your letter are not known to me personally. The facts stated by them do not seem to be correct.

Neither the Vaikom Temple nor the roads in question are now with the trustees. The temple is in the possession of the Government and its affairs are administered by Government servants.)

The roads leading to the temple are maintained by the Government out of public funds. They are used not only by Brahmins and other çaste-Hindus, but also by MohamadanS christians and other Non-Hindus. Only the unapproachables such as the Thiyyas and pulayas are prevented Legally the unapproachables have the same right to use these roads as the Brahmins and other caste-Hindus.

Under the circumstances you would. I am sure, advise us to continue Satyagraha. In reference to your advice that we should submit the matter to the arbitration of Malaviyajee I should like to say this:

You assumed that the Brahmin trustees were private individuals and that they would probably accept his award. But as I have already told you, the Travancore Government is willing to accept the substance of your suggestion we, on behalf of the untouchables. would loyally accept your advice to agree to the submission; but till then we have no alternative but to go on.

I have already wired to you why we suspended Satyagraha for a short time. The atmosphere has become cleared and we would resume satyagraha tomorrow i.e., Monday the 7th April. I am fairly certain that I would be arrested along with some of my co-workers in the course of a few hours.

Mr. George Joseph is here and we are sure that when we are taken away the struggle would be carried on with redoubled vigour under his directions. He would keep in touch with you continually. Asking for your blessings.

**I remain**

**Yours respectfully**

**Vaikom April 6, 1924** **K.P. Kesava Menon**

இதன் தமிழாக்கம் வருமாறு:

## மகாத்மாவுக்குத் தந்தி

சாலைகள் தனிப்பட்டவர்கள் சொத்து அல்ல என்று ஆரம்பிக்கிறது அந்தத் தந்தி. காந்தியார் கேசவமேனனுக்கு அனுப்பியதாகச் சொல்லப்பட்ட கடிதத்தை ‘இந்து’ப் பத்திரிகை பிரசுரம் செய்திருக்கிறது. வைக்கம் கோவில் பார்ப்பனர்களின் தனிப்பட்ட சொத்து அல்ல என்பதை திரு. காந்திக்குத் தெரிவித்திருக்க வேண்டும் என்று ஆச்சரியம் தெரிவிக்கப்படுகிறது தந்தியில். திரு. கேசவமேனன் கீழ்க்கண்ட பதிலைக் காந்திக்கு அனுப்புகிறார்.

“அன்புள்ள மகாத்மாஜி,

சத்தியாகிரகத்தை நிறுத்திவிடும்படி எனக்கு ஒரு கடிதம் தாங்கள் அனுப்பியிருப்பதாக 04.041924 “இந்து” பத்திரிகை மூலம் தெரியவருகிறது. உங்களது கடிதம் இன்னமும் எங்களுக்குச் சேரவில்லை. ஒரு வேளை அக்கடிதம் இப்போது வந்து கொண்டிருக்கக் கூடும். அக்கடிதம் வந்து சேரும் வரை உண்மை நிலைமை விளக்க நான் காத்திருக்க வேண்டியதில்லை என்றே எண்ணுகிறேன்.

உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாக நான் படித்த ஸ்ரீமான்கள் திரு. சிவராம அய்யர், வாஞ்சிஸ்வர அய்யர் ஆகிய இந்த இரு கனவான்களை எனக்குத் தெரியாது. அவர்கள் தங்களுக்கு எழுதியுள்ள தகவல்கள் சரியானவை அல்ல. சாலைகளோ கோயில் டிரஸ்டிகள் வசம் இல்லை. கோயில் அரசுக்குச் சொந்தமாக உள்ளது. அதனைப் பரிபாலனம் செய்பவர்கள் அரசு ஊழியர்களே ஆவார்கள். கோயிலுக்குப் போகும் அத்துணைச் சாலைகளும் அரசின் பொதுப்பணத்திலிருந்தே பராமரிக்கப்படுகின்றன. பிராமணர்களும், ஜாதி இந்துக்களும் மட்டும் அல்ல; முகமதியர்களும், கிறிஸ்துவர்களும், மற்ற இந்து அல்லாதவர்களும்கூட அச்சாலைகளைப் பயன்படுத்துகின்றனர்.

நெருங்கக் கூடாத ஜாதியினரான தீயர்களும் புலையர்களும்தான் அச்சாலைகளில் நுழைய முடியாது தடுக்கப்பட்டவர்களாக உள்ளனர்.. சட்டப்படி, பார்ப்பனர்களுக்கும், ஜாதி இந்துக்களுக்கும் என்னென்ன உரிமைகள் உண்டோ அதே உரிமைகள் நெருங்கக்கூடாத

ஜாதியினருக்கும் உண்டல்லவா? இந்த நிலையைப் புரிந்து கொண்டு, நாங்கள் சத்தியாகிரகத்தைத் தொடரவேண்டும் என்று தாங்கள் அறிவுரை கூறுவீர்களென நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

பண்டித மாளவியாஜியின் மத்தியஸ்தத்திற்கு நாங்கள் கட்டுப்படவேண்டும் என்று தாங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

சில தனிப்பட்ட பிராமணர்கள், கோயில் டிரஸ்டிகளாக இருக்கிறார்கள் என்று நீங்கள் எண்ணி அவர்கள் மாளவியாஜியின் மத்தியஸ்தத்திற்குச் சம்மதிப்பார்கள் என்று கருதிக் கொண்டு கூறியிருக்கிறார்கள். ஆனால் கோயில் நிருவாகம் திருவாங்கூர் அரசாங்கத்திடம் இருக்கிறது. அரசு தங்களது யோசனைக்கோ, மத்தியஸ்தத்திற்கோ ஒப்புக் கொள்ளுமாயின், உங்களது கருத்தினை, யோசனையைத் தீண்டப்படாதார் சார்பில் நாங்கள் ஏற்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், அதுவரை இச்சத்தியாக்கிரத்தைத் தொடருவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியே இல்லை!

நாங்கள் ஏன் தற்காலிகமாக இச்சத்தியாகிரகத்தை நிறுத்தி வைக்க வேண்டியிருந்தது என்பதைத் தந்தி மூலம் தெரியப்படுத்தி உள்ளோம். இப்போது நிலைமை நன்றாக உள்ளதால் நாங்கள் சத்தியாக்கிரகத்தை மீண்டும் நாளை ஏப்ரல் 7-ஆம் தேதி முதல் துவங்குகிறோம்.

இன்னும் சில மணி நேரத்தில் எனது சக சத்தியாகிரகிகளுடன் நான் கைது செய்யப்படபோவது உறுதி. திரு. ஜார்ஜ் ஜோசப் இங்கு இருக்கிறார். நாங்கள் கைது செய்யப்பட்டால், “சத்தியாகிரகம் இரட்டிப்பு மடங்கு உற்சாகத்துடன் மேலும் சிறப்பாக நடக்கும் என்று நம்புகிறோம். உங்கள் ஆசியை எங்களுக்குத் தாருங்கள்.”

**என்றும்**

**தங்கள் மரியாதை உள்ள**

**வைக்கம், 6 ஏப்ரல் 1924.** **கே.பி. கேசவமேனன்**

கேசவமேனனின் இந்த விளக்கக் கடிதத்திற்குப் பிறகும் காந்தியாரவர்கள் உண்மை நிலையை ஒப்புக்கொள்ளவில்லை. அதுபோலவே, அவர்களும் காந்தியாருடைய ஒப்புதலைப்பற்றி கவலைப்படவில்லை. திட்டமிட்டபடி போராட்டத்தைத் தொடங்குகிறார்கள். கேசவமேனனும் கைதாகிவிடுகிறார். அடுத்து

ஜார்ஜ் ஜோசப் வருகிறார். அவரையும் கைது பண்ணி விடுகிறார்கள். இந்தச் செய்தி தந்தை பெரியாருக்குப் போகிறது.

உடனடியாக தந்தை பெரியாரவர்கள் அங்கு வருகின்றார். வந்து தலைமையேற்றுப் போராட்டத்தைப் பலப்படுத்துவதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அவ்வளவையும் வேகமாகச் செய்கின்றார்கள்.

“எத்தனையோ பேர் கலந்து கொண்டார்கள், அதில் பெரியாரும் ஒருவர்தானே” என்று ‘துக்ளக்’ எழுதுகிறது.

அது உண்மையல்ல, வேறு எந்த மாநிலத் தலைவரும் அங்கு வந்து தலைமை தாங்கிக் கலந்து கொள்ளவில்லை. அய்யாதான் உடனடியாகச் சென்றார்; கலந்து கொண்டார்.

அய்யா சென்ற பிறகுதான் அதற்குத் திருப்பமும் புத்துயிருமே வருகிறது என்பதை நாங்கள் சொல்லவில்லை - இதிலேயே இன்னொரு தகவலையும் ஆதாரமாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார் ரவீந்திரன்.

1924 - ஏப்ரல் 21ஆம் தேதி சென்னை அரசின் தலைமைச் செயலாளருக்கு C.W.C. Cotton Esq. C.T.E., I.C.S. என்ற வெள்ளை அதிகாரி வைக்கம் போராட்டத்தைப் பற்றி நேரில் வந்து கண்டு தகவல் சேகரித்துக் கடிதம் எழுதுகிறார். இவர் கவர்னர் ஜெனரலின் ஏஜெண்ட் பதவியில் இருந்தவர். நிலைமைகளை நேரில் சென்று ஆய்வு நடத்திவிட்டு அவர் எழுதிய அதிகாரபூர்வமான கடிதம் வருமாறு:

From

C.W.C. Cotton Esq. C.T.E., I.C.S.,
Agent to the Governor-General)
Madras States..

To

The Chief Secretary to the Government of Madras

Sir,

In continuation of my letter of the 10th instant regarding events at Vaikom. I write to inform the Madras Government that on my way from Kottayam to Ernakulam on the morning of the 11th I met the commissioner of

Police and District Magistrate at Vaikom and walked all round the prohibited road. On the previous day Mr. Pitt decided to stop arresting the Volunteers and three "Satyagrahists" were lying on mats near the notice board of the Western entrance to the temple having been there without food or drink for nearly twenty four hours..."

அதன் தமிழாக்கம் வருமாறு:

அனுப்புநர்:

உயர்திரு.சி.டபிள்யூ, ஈ. காட்டன் சி.டி.ஈ., அய்.சி.எஸ்.,
சென்னை மாகாணக் கவர்னர் ஜெனரலின் பிரதிநிதி.

பெறுநர்:

சென்னை அரசாங்கத்தின் தலைமைச் செயலாளர்.

அய்யா,

வைக்கம் நிகழ்ச்சிகள் சம்பந்தமான என் கடிதத்தின் தொடர்ச்சியாக, சென்னை அரசாங்கத்திற்குத் தகவல் தெரிவிக்க இதை எழுதுகிறேன். கோட்டயத்திலிருந்து எர்ணாகுளத்திற்கு நான் வரும் வழியில், வைக்கத்தில் போலீஸ் கமிஷனரையும், மாவட்ட நீதிபதியையும் சந்தித்தேன். தடை செய்யப்பட்ட சாலையின் அனைத்துப் பகுதிகளையும் நடந்தே சுற்றி வந்தேன்.

முதல் நாள் திரு.பிட் தொண்டர்களைக் கைது செய்வதை நிறுத்தத் தீர்மானித்தார். கோயிலின் மேற்கு நுழைவாயிலில் தகவல் பலகைக்கு அருகில் மூன்று சத்தியாகிரகிகள் பாயின் மேல் படுத்திருந்தார்கள். அங்கே அவர்கள் கிட்டத்தட்ட 24 மணி நேரமாக உணவோ , குடிக்கும் நீரோ அருந்தாமல் (உண்ணாவிரதம்) இருந்தார்கள்."

"அங்கே உண்ணாவிரதம் இருந்த தொண்டர்கள்! அவர் எதற்கு?" எங்களைக் கைது செய்யுங்கள்; இல்லாவிடில் நாங்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்போம்' என்று பிரகடனப்படுத்தி விட்டு உண்ணாவிரதம் இருந்தார்கள் என்பதைத்தான் மேற்கண்டவாறு அந்த அதிகாரி தமது கடிதத்தில் குறிப்பிடுகிறார்.

“நீங்கள் கைது பண்ணவில்லை என்றால் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்போம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.” காந்தியாரோ - இந்த உறுதியைக்கூட சிதைத்து சின்னாபின்னமாக்குகிறார்:-

“உண்ணாவிரதம் என்பதை மிகப்பெரிய காரியத்துக்கு நடத்தவேண்டும். அதைக் கொண்டு போய்ச் சத்தியாக்கிரகத்தோடு இணைத்து இந்தக் காரியத்திற்காகச் செய்வது கூடாது; எனவே உண்ணாவிரதத்தை நிறுத்துங்கள்!” என்று சொல்லுகிறார்.

உடனே, காந்தியார் சொல்லிவிட்டார் என்பதற்காக உண்ணாவிரதத்தையே அவர்கள் நிறுத்தினார்கள்.

அதிகாரி எழுதிய கடிதத்தின் மூன்றாவது பாராவில்:

3. At noon on the 12th there were sixteen satyagrahists at different approaches to the temple, and two in hospital. Some Orthodox Hindus tried to stop the procession of satyagrahists but there was no actual collision-Most of the Volunteers are, as might have been expected, adolescents”.

இதன் தமிழாக்கம்:

3. “12ஆம் தேதி மதியம் 16 சத்தியாக்கிரகிகள் பல்வேறு வழிகளிலும் கோயிலை நெருங்கினார்கள். மற்றும் இருவர் மருத்துவமனையில் இருந்தனர். சில வைதீக இந்துக்கள் சத்தியாகிரகிகளுடைய ஊர்வலத்தை நிறுத்த முயற்சித்தார்கள். ஆனால், உண்மையான மோதல் நிகழவில்லை. பெரும்பாலான தொண்டர்கள் எதிர்பார்த்திருந்ததைப் போல் இளைஞர்களே போராட்டத்தை எப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக சிதைக்க முயற்சித்திருக்கிறார்கள்” பாருங்கள்! அரசாங்கத்தின் ஒற்றர் குறிப்பு இது. காலித்தனத்தைக் கையாண்டு அதைத் தடுப்பதற்காகவும் கூட முயற்சி செய்திருக்கிறார்கள். அதில் கலந்து கொண்டவர்கள் பெரும்பாலும் இளைஞர்களே என்றும் அவர் எழுதுகின்றார்.

நான்காம் பாராவில்:

4. “On the 14th new tacties were employed, Volunteers who are now being relieved every three hours being told to look out for oppurtunities to get past the police picquets, but as Mr. Pitt had been warmed of this, they have so far not met with any success”.

இதன் தமிழாக்கம்:

“14ஆம் தேதி புதிய உத்தி கையாளப்படுகிறது. மூன்று மணிக்கு ஒரு தரம் தொண்டர்கள் அணி அணியாக விடப்படுகிறார்கள். அவர்கள் போலீஸ் காவலைத் தாண்டுவதற்கான சந்தர்ப்பத்தைக் கவனித்துக் கொள்ளும்படி எச்சரிக்கை செய்யப்பட்டு அனுப்பப்பட்டார்கள். ஆனால், திரு. பிட் இதை ஏற்கனவே தெரிந்து வைத்திருந்ததால் அவர்களால் வெற்றி பெறமுடியவில்லை.”

இந்தப் பதினான்காம் தேதிதான் தந்தை பெரியார் அவர்கள் அங்குப் போய்ச் சேர்கிறார்கள்.

பெரியாருக்கு மட்டும் ஏன் தனிச் சிறப்பு என்று இன்று வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொள்பவர்களுக்கு அந்தக் கடிதத்தின் இறுதிப் பாராக்கள் பதில் அளிக்கிறது.

“Mr. Ramasami Naicker arrived on that day from Erode to take charge of the campaign. If more determined attempts are made to push past the police picquets, Mr. Pitt has all arrangements in hand for the erection of barricades. His latest report suggests that satyagrahists are deliberately provoking the rank and file of the police to loose their tempers but have failed dismally. Mr. S. Srinivasa Iyengar arrived from Madras on the 17th and had an informal conference with the caste-Hindus which seems to have come to nothing, before proceeding to Trivadrum. The latest news is that Mr. Perumal Naidu has relieved Mr. Ramasami Naicker as O.C., Satyagraha Head-Quarters”.

இதன் தமிழாக்கம்:

“திரு. ராமசாமி நாயக்கர் போராட்டத்திற்குப் பொறுப்பேற்க ஈரோட்டிலிருந்து அன்றே வந்து சேர்ந்தார். போலீஸ் காவல் தடைகளை மீறி மேலும் ஏதேனும் திட்டமிட்ட முயற்சிகள் நடந்தால், அதைத் தடுக்க திரு. பிட் எல்லா ஏற்பாடுகளையும் கைவசம் வைத்திருக்கிறார். சத்தியாகிரகிகள் திட்டமிட்டு போலீசாரின் கட்டுப்பாட்டைத் தளரச் செய்ய முயற்சித்து தோல்விகண்டனர் என்று அவருடைய சமீபத்திய குறிப்புக் காட்டுகின்றது.

சென்னையிலிருந்து 17 ஆம் தேதி வந்து சேர்ந்த திரு. சீனிவாச அய்யங்கார் திருவனந்தபுரத்திற்குச் செல்லுமுன் ஜாதி இந்துக்களோடு

ஓர் அதிகாரபூர்வமில்லாத பேச்சு வார்த்தை மேற்கொண்டது எந்தவிதப் பயனுமற்றதாகக் காணப்படுகிறது.

சமீபத்திய செய்தி: திரு. பெருமாள் நாயுடு, திரு. ராமசாமி நாயக்கரை சத்தியாகிரகத் தலைமையகத்திற்குத் தளபதியாக (O.C.) பொறுப்பேற்கச் செய்திருக்கிறார்.''

போராட்டத்திற்குப் பொறுப்பேற்க பெரியாரவர்கள் ஈரோட்டிலிருந்து வருகிறார். தடைகளை உடைத்துத் தாண்டி சத்தியாகிரகிகள் அந்தத் தெருவுக்குள் சென்று விட்டால், மறுபடியும் தடைசெய்ய பிட் தயாராக இருக்கிறார். சீனிவாச அய்யங்கார் 17 ஆம் தேதி சென்று தெருவிலே நடக்கக் கூடாது என்று சொன்னவர்களோடு பேசி ஒருவிதமான பயனும் இல்லாமல் திரும்புகிறார் என்பதையும் இந்த சி.அய்.டி. ரிப்போர்டிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். சத்தியாகிரக தலைமையகத்திற்குத் தளபதி (O.C.) தந்தை பெரியார்தான் என்பதையும் எம்.பெருமாள் நாயுடு பெரியாரை விடுவித்தார் என்று சொல்லுவதிலிருந்து தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகிறது.

ஆறாவது பாராவில்:

6. "Of the nine leaders who are in the Central jail, Trivandrum, where they are treated with great consideration, five only are Travancoreans. In fact the movement would have collapsed long ago but for the support it has received from outside-Travancore, problem".

இதன் தமிழாக்கம்:

"திருவனந்தபுரம் சிறையில் அடைக்கப்பட்ட ஒன்பது தலைவர்களில் அய்வர் மட்டும் திருவனந்தபுரத்தைச் சார்ந்தவர்கள். சிறையில் அவர்கள் மிகவும் தன்மையுடன் கவனிக்கப்பட்டார்கள். நடைபாதையைத் திறந்துவிடுவது என்பது உள்ளூர்ப் பிரச்சினையான போதிலும் சத்தியாக்கிரக இயக்கத்திற்குத் திருவனந்தபுரத்திற்கு வெளியில் உள்ளவர்களின் உதவி கிடைக்காதிருந்தால் அது வெகு காலத்திற்கு முன்னேயே பிசுபிசுத்துப் போய் இருக்கும்'' என்று எழுதுகிறார்.

ஆகவே, திருவாங்கூருக்கு அப்பாற்பட்டவர்கள் வந்ததால் தான் இந்த போராட்டத்திற்கு வலிமையே வந்தது என்ற இந்த செய்தி

அரசாங்கக் குறிப்பிலேயே உள்ளதே! இது எவ்வளவு முக்கியமான செய்தி என்பதைக் கவனிக்க வேண்டும். இதுதானே உண்மை!

தந்தை பெரியாரவர்களுடைய முயற்சி எவ்வளவு சிறப்பாக இருந்தது என்பதையும், அதிலே திருப்பம் பெரியாரவர்களாலேதாம் வந்தது என்பதையும் ஆராய்ச்சியாளர் டாக்டர் டி.கே. ரவீந்திரன் இப்புத்தகத்தின் 88ஆம் பக்கத்தில் சொல்லுகிறார்:

"Some leaders also reached vaikkom and took charge of the satyagraha campaign. E.V. Ramasamy Naicker who arrived on 14th morning led the first two batches in the relay service for the northern and eastern roads".

இதன் தமிழாக்கம்:

"மற்றும் சில தலைவர்கள்கூட வைக்கம் வந்தடைந்து சத்தியாக்கிரக இயக்கத்தை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். ஈ.வெ. ராமசாமி நாயக்கர் 14ஆம் தேதி காலை வந்து சேர்ந்தார். தொடர் சத்தியாகிரக இயக்கத்திற்குத் தலைமை ஏற்று வடக்கிலும் கிழக்கிலும் உள்ள இரு சாலைகளில் நுழைய இரண்டு குழுக்களை அழைத்துச் சென்றார்."

அடுத்து 89ஆம் பக்கத்தில் சொல்லுகிறார்.

"But the support the Vaikkom Satyagrahis received from Madras, both in money and leadership, was very great and impressive. E.V. Ramasami Naicker's lead gave a new life to the movement. His stirring appeal on the eve of his journey to Kerala had made a deep impression on the mind of Tamil Nadu" என்கிறார் ரவீந்திரன்.

"ஆனால், வைக்கம் சத்தியாக்கிரகிகளுக்குச் சென்னையிலிருந்து கிடைத்த ஆதரவு அபரிமிதமாகவும், மனதைக் கவரக் கூடியதாகவும் இருந்தது. நிதியாகவும் கிடைத்தது. இயக்கத்தை நடத்துவதற்குத் தலைமையையும் தந்தது. சென்னை ஈ.வெ. ராமசாமி நாயக்கரின் தலைமை இயக்கத்திற்குப் புத்துயிர் ஊட்டியது. கேரளாவுக்குப் புறப்படுவதற்கு முன் தமிழக மக்களுக்கு அவர் விடுத்த உணர்ச்சி மிக்க வேண்டுகோள் தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களில் பசுமரத்தாணி போல் பதிந்தது."

இப்படி எழுதுவது ஆராய்ச்சியாளர் டி. கே. ரவீந்திரன். இவர் என்ன திராவிடர் கழகத்துக்காரரா? கருப்புச் சட்டைக்காரரா? அல்ல. ஓர் ஆராய்ச்சியாளருடைய கண்ணோட்டத்தோடு, நடுநிலையில் அய்யா அவர்கள் அந்தக் காலத்தில் செய்த பணியைப் பற்றிச் சொல்லுகின்றார்.

அடுத்து, அய்யா அறிக்கையாகச் சொன்னதையும் எடுத்துத் தருகிறார்:

He said, "the command from the neighbouring sister province of Kerala is irresistible. A grave situation has arisen repression is rampant. Satyagrahis and leaders including sriman Joseph in trying to remove untouchability the corner stone of our Mahatma's programme have been made the victims of it. These considerations far out-weigh in my mind and I have started. Perhaps I may also be arrested; but it is nothing I appeal to all sympathisers, be they leaders, propagandists, volunteers or persons of whatever creed, to flock to Kerala. Those that cannot do so, can at least give their financial aid. Many Volunteers in Tamil Nadu have often said and also written to me that they were only looking forward to a Satyagraha and still many others, that they would suffer in the cause of the removal of untouchability. Hark ye, all those such, here is a golden opportunity, Fail not to avail of it. Hasten up everyone of you and join the noble cause".

இதன் தமிழாக்கம்:

"அருகில் உள்ள கேரளாவில் அழைக்கிறார்கள் என்னும் போது அதை நாம் தவிர்க்க முடியாது. ஒரு மோசமான சூழ்நிலை அங்கு ஏற்பட்டு விட்டது. அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று நாம் நினைக்கிற நேரத்தில் காந்தியாரின் திட்டத்தில் ஒன்றான இதன் மூலக்கல்லை உடைக்கிற அளவிற்கு ஸ்ரீமான் ஜோசப் உள்பட சத்தியாகிரக தலைவர்கள் முயற்சித்துப் பலியாகியிருக்கிறார்கள். நாம் இப்போது ஆதரவு கொடுக்க வேண்டும். இதை ஒழிக்க வாய்ப்பு வந்துள்ளது என்கிறபோது நான் எதைப் பற்றியும் கவலைப்படாமல் புறப்பட்டுப் போகிறேன். நானும் கைது செய்யப்படலாம். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. பிரச்சாரகர்களாக இருந்தாலும், தலைவர்களாக இருந்தாலும், தொண்டர்களாக இருந்தாலும், அனுதாபிகளாக இருந்தாலும், அல்லது

எந்தக் கருத்துள்ளவர்களாக இருந்தாலும் இந்த அறிக்கையைப் பார்ப்பவர்கள் கேரளத்திற்கு விரைந்து வந்து சத்தியாகிரகத்தில் கலந்து கொள்ளுங்கள்.

வரமுடியாதவர்கள் பணம் அனுப்புங்கள். தமிழ் நாட்டிலிருந்து நிறைய பேர் "தீண்டாமையை ஒழிப்பதற்கு இதுதான் நல்ல வாய்ப்பு, வருகிறோம்" என்று எழுதியிருக்கிறார்கள். நல்ல வாய்ப்பு, நழுவ விட்டு விடாதீர்கள்; இந்தச் சிறப்பான இலட்சியத்திற்காக உங்கள் ஒவ்வொருவரையும் இணைத்துக் கொள்ளுங்கள்" - என்று அய்யா அறிக்கை மூலமாக விடுத்த வேண்டுகோளை ரவீந்திரன் சிறப்பாக எடுத்துக்காட்டி இருக்கிறார்.

அவர் தொடர்ந்து எழுதுகிறார்:

"His inspiring speeches in the villages around Vaikkom and other places in Travancore moved the people to the depth. His cold logic and incising arguments succeeded in attracting larger numbers of vacillating minds to the side of Satyagraha and converting many opponents too. After a few days of his leading the campaign he withdraw to the villages for propagating the ideal of Satyagraha and joined the congress deputation that visited different places".

இதன் தமிழாக்கம்:

"வைக்கத்தைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் மற்றும் திருவிதாங்கூரிலுள்ள மற்ற இடங்களிலும் அவர் பேசிய பேச்சுகள் மக்களை உணர்ச்சி வசப்பட வைத்தன.

அவர் பச்சையாகவும், ஆணித்தரமாகவும் அள்ளி வீசிய வாதங்கள் மனத்தடுமாற்றமுள்ளவர்களையும் பெருமளவில் சத்தியாகிரகிகள் பக்கம் இழுத்தது. எதிரிகள் மனத்தையும் மாற்றி சத்தியாகிரகத்திற்கு ஆதரவாளர்களாக ஆக்கிவிட்டது. சத்தியாகிரக நோக்கத்தை கிராமங்களில் எல்லாம் பிரச்சாரம் செய்தார். அவர் போராட்டத்தைப் பார்வையிட வந்த காங்கிரஸ் தூதுக்குழுவோடும் பல இடங்களுக்கும் போனார்."

கீழே அய்யா அவர்கள் பேசிய பேச்சைப் பற்றி மேலும் சொல்லுகிறார்:

"Ramasami Naicker's speeches were especially impressive and their savage force cut through the prestige of the Travancore Government. He was arrested and sent to jail several times".

இதன் தமிழாக்கம்:

"ராமசாமி நாயக்கருடைய பேச்சு மக்கள் மனத்தில் எளிதில் பதியக் கூடியதாகவும், காரசாரமாகவும் இருந்தது. அவருடைய பேச்சின் வேகம் திருவிதாங்கூர் அரசின் கவுரவத்தை சிதைக்கக் கூடியதாகவும் இருந்தது. எனவே, அவர் பலதடவை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்" என்று எழுதுகிறார்.

அப்போது, "அந்தக் கோயிலுக்கு அருகிலுள்ள தெரு தேவஸ்வம் போர்டுக்குச் சம்பந்தப்பட்டது; அதில் எப்படி எல்லோரும் போகலாம் என்று ராமசாமி நாயக்கர் சொல்கிறார்?" என்று வைதீகர்களும், பார்ப்பனர்களும் திருவிதாங்கூர் அரசின் சார்பில் கேள்வி எழுப்பினார்கள்.

இந்தப் பிரச்சினைக்கு விளக்கம் அளிக்க, கூட்டம் போட்டு தந்தை பெரியார் பதில் சொல்கிறார். அதையும் இந்த ஆராய்ச்சியாளர் எழுதுகிறார். பக்கம் 115இல்:

"E.V. Ramasamy Naicker of Madras in a public meeting at Vaikkom said, The Travancore Government have brought out the plea that the Vaikkom temple road belongs to the Devaswam. As the whole of Travancore is dedicated to Padmanabhaswami, neither the Travancore Maharaja nor his predecessor nor his grand-father has any right over it. By virtue of this, everything in Travancore has become the property of the Devaswam".

இதன் தமிழாக்கம்:

"சென்னையைச் சார்ந்த ஈ.வெ. ராமசாமி நாயக்கர் வைக்கத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பின் வருமாறு சொன்னார்: "வைக்கம் கோயில் தெரு தேவஸ்வத்திற்குச் சொந்தமானது" என்ற வாதத்தை திருவாங்கூர் அரசு கொண்டு வந்திருக்கிறது. திருவனந்தபுரம் முழுவதுமே பத்மநாபசாமிக்குக் காணிக்கை ஆக்கப்பட்டிருக்கிறது. அதில் திருவாங்கூர் மகாராஜாவுக்கோ, அவருடைய முன்னோர்களுக்கோ, அவருடைய தாத்தாவுக்கோ எவ்வித உரிமையும் இல்லை. அந்த

அடிப்படையில் பார்த்தால் திருவாங்கூரிலுள்ள அனைத்தும் தேவஸ்வத்தின் சொத்தாகி விடுகிறது'' என்று பதில் சொன்னார்.

அந்தக் காலத்தில், தமக்குத் தொடர்பில்லாத இன்னொரு மாநிலமான திருவனந்தபுரத்திலே போய் இப்படிப் பேசக்கூடிய துணிச்சல் அய்யாவைத் தவிர வேறு யாருக்காவது உண்டா?

இன்னொன்றையும் குறிப்பாக உங்களுக்குச் சொல்லியாக வேண்டும்.

போராட்டம் மிக உச்சக்கட்டத்தில் நடந்து வந்த நிலையில் காந்தியார், ஜார்ஜ் ஜோசப்பிடம், ``வேறு மதத்தவராகிய நீங்கள் இதில் சேரக்கூடாது; சேர்ந்து நடத்தினால் மதக் கலவரங்களெல்லாம் வரும்'' என்று சொல்லுகிறார்.

அதுமட்டுமல்ல; காந்தியாருடைய நாணயம் என்ன?

இது மிக முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு செய்தி.

1924இல் நடந்த சம்பவத்தைத் தந்தை பெரியார் 1959-லே பேசி 1961இல் வந்த புத்தகத்தை நான் உங்களுக்கு முதலில் படித்துக் காட்டினேன். அந்தப் பேச்சினுடைய ஒவ்வொரு சம்பவமும், உண்மை என்பதை மற்ற நூல்கள் மூலமாக, ஆய்வுகள் மூலமாக உங்களுக்கு எடுத்துத் தெளிவுபடுத்திச் சொல்லியிருக்கின்றோம்..

இந்த நிலையில், வைக்கம் போராட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது ஒரு தகவலைத் தலைகுப்புற எடுத்துச் சொன்னார் காந்தியார்.

காந்தியார் 1932இல் அதாவது வைக்கம் போராட்ட வெற்றிக்குப் பின் அய்ந்தாறு ஆண்டுகள் கழித்து - (ஜனவரி 30ஆம் தேதி) கோயில் நுழைவைப் பற்றி ``யங் இண்டியா''வில் எழுதுகின்றார். ``ஜார்ஜ் ஜோசப் கிறித்துவர். இது ``இந்து'' மதப்பிரச்சினை. ஆகவே அவர் இதில் ஈடுபடக்கூடாது என்று சொன்னேன்'' என்று எழுதுகின்றார்.

பக்கம் 154இல் டாக்டர் இரவீந்திரன் எழுதுகிறார்:

"The Whole trouble issued out from the belief of the opposers as well as the supporters of the Satyagraha that the agitation was for establishing a religious right. It was because Temple Entry was at the back of their mind;

Gandhi prevented George Joseph from taking part in the Satyagraha on the basis of this nation only, Gandhi wrote in young India "Temple entry is a religious right. Entry, therefore, by any other person cannot be called satyagraha. At the time of Vaikkom Satyagraha when Mr. George Joseph went to jail, I sent him word that he was wrong. He agreed with me, promptly apologised, and came out of jail. Temple entry Satyagraha is a Penance on the part of caste - Hindus".

இதன் தமிழாக்கம்:

"இந்தப் போராட்டம் மத உரிமையை நிலைநாட்டுவதற்கு என்று சத்தியாகிரக எதிர்ப்பாளர்கள் மட்டுமல்லாது, ஆதரவாளர்களும் நம்பியதே இப்பிரச்சினை முழு அளவில் வெளியானதற்குக் காரணமாகும். இதற்குக் காரணம் கோவில் நுழைவு என்பதே அவர்கள் மனதின் பின்னணியில் இருந்தது. இந்த எண்ணத்தின் அடிப்படையிலேதான் காந்தி ஜார்ஜ் ஜோசப்பைச் சத்தியாக்கிரகத்தில் பங்கு கொள்வதினின்றும் தடுத்தார். காந்தி "யங் இந்தியா"வில் பின்வருமாறு எழுதினார்:

"கோவில் நுழைவு என்பது மத உரிமை. ஆகையால், இதில் வேறு யாரும் (மற்ற மதக்காரர்கள்) நுழைவது சத்தியாகிரகம் என்று சொல்ல முடியாது. வைக்கம் சத்தியாகிரக காலத்தில், ஜார்ஜ் ஜோசப் சிறைக்குச் சென்ற பொழுது அவர் செய்தது தவறு என்று நான் சொல்லியனுப்பினேன். நான் சொன்னதை அவர் ஏற்றுக்கொண்டு உடனே மன்னிப்புக் கேட்டுக் கொண்டு ஜெயிலிலிருந்து வெளியே வந்தார். கோயில் நுழைவு சத்தியாகிரகம் என்பது ஜாதி இந்துக்களுக்கு ஒரு "தபசு" போன்றது."

இதை ஒரு மத உரிமையாகப் பார்த்ததுதான் அடிப்படைக் கோளாறு. காரணம் கோயில் நுழைவு என்பதே மனதின் பின்னணியில் நின்றது. எனவே, இது இந்து மதத்தினுடைய பிரச்சினை என்று நினைத்தார்கள். இதை மதக்கண்ணோட்டத்தோடு காந்தியார் பார்த்த காரணத்தினால்தான் ஜார்ஜ் ஜோசப்பைச் சத்தியாகிரகத்தில் கலந்து கொள்வதினின்றும் தடுத்தார் என்று காந்தி 'யங் இந்தியா'வில் எழுதினார். "கோயில் நுழைவு ஒரு மத உரிமை. எனவே, மற்ற மதக்காரர்கள் இதில்

நுழைந்தால் அதைச் சத்தியாக்கிரகம் என்று சொல்ல முடியாது, வைக்கம் சத்தியாக்கிரகத்தின் போது ஜார்ஜ் ஜோசப் ஜெயிலுக்குப் போனது தவறு என்று அவருக்குச் சொல்லியனுப்பினேன். அவர் நான் சொன்னதை ஏற்றுக்கொண்டு தக்க முறையில் மன்னிப்பும் கேட்டார்; ஜெயிலிலிருந்து வெளியேயும் வந்தார். ஜாதி இந்துக்களுக்குக் கோயில் நுழைவு சத்தியாக்கிரகம் தபசு இருப்பதைப்போல்'' என்று காந்தி எழுதியதை இப்பேராசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

அது கோயிலுக்குள் நுழைகிற போராட்டமல்ல என்று காந்திக்கு நன்றாகத் தெரியும். அந்தப் போராட்டம் நடந்தது கோயில் தெரு எல்லோரும் நடக்கும்படியாக திறந்து விடப்பட்டு எல்லாம் சுமுகமாகி பல ஆண்டுகள் கழித்து, முன்னர் நடந்த சம்பவங்களையே திரித்து எழுதுகிறார் காந்தி. அவர்களுக்கு 1925இல் வெற்றி கிடைத்துவிட்டது. ஆனால், அதை 1932இல் திரிபுவாதத்தோடு எழுதுகிறார்.

இது பேச்சு என்றால் கூட ஒருவேளை தவறு இருக்கும் என்று சொல்ல முடியும். ஆனால், இது அவருடைய பத்திரிகையான 'யங் இந்தியா'வில் எழுதி அச்சிடப்பட்டு வந்திருக்கிறது.

இது வந்தவுடன் (அப்போது ஜார்ஜ் ஜோசப்பும் உயிரோடு இருக்கிறார்) ஜார்ஜ் ஜோசப்புக்கு ரொம்பவும் ஆத்திரம் வந்துவிட்டது. கல்கத்தாவிலிருந்து வந்த "Indian Social Reformer" என்னும் பத்திரிகையில் காந்தியாருக்கு மறுப்பு எழுதினார். இதையும் இந்த ஆராய்ச்சியாளர் எடுத்துக் காண்பித்திருக்கிறார்.

நல்ல வாய்ப்பாக ஜார்ஜ் ஜோசப் அப்போது உயிரோடு இருந்தார். உயிரோடு இல்லாமலிருந்திருந்தால், காந்தியார் சொன்னதுதான் உண்மை என்று நிலைத்திருக்கும்.

காந்தி "யங் இந்தியா"வில் எழுதியதற்குப் பின்வருமாறு ஜார்ஜ் ஜோசப் பதில் எழுதுகிறார்:

பக்கம் 155இல் (டாக்டர் இரவீந்திரனின் நூல்):

"As against this George Joseph wrote: "Vaikkom Satyagraha had nothing to do with temple entry. The issue was whether untouchables should be prevented from going along a public road maintained by the state, merely

because the road was in the neighbourhood of a temple. In fact, if was made repeatedly and abundantly clear that we had nothing to do with temple entry. It was a purely civic question we fought. If went on for a long time, and in the end the untouchables won substantially. It is true that Gandhiji took the view that as a christian I had no business to go in to it, and he sent me word that I should apologise. But I did not agree with him."

காந்தியாரின் அவதூறுக்கு - ஜார்ஜ் ஜோசப் பதில் சொல்லுகிறார்: வைக்கம் சத்தியாக்கிரகத்துக்கும் கோயில் நுழைவுக்கும் சம்பந்தம் கிடையாது. பொதுப் பணத்தால் நிர்வகிக்க கூடிய ஒரு பொதுத் தெருவில் "தீண்டத்தகாத" மக்கள் நடப்பதற்கு உரிமையில்லை என்று சொல்வது எப்படிச் சரியாக இருக்கும் என்பது மட்டுமே அப் பிரச்சினை. அந்தத் தெரு கோயிலுக்கு அருகாமையில் இருந்தது என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. உண்மையில், அதிக அளவில் திரும்பத் திரும்ப நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம் - கோயிலுக்குள் செல்வதற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என்று. நாங்கள் போராடியது 'சிவிக்' உரிமைக்காக மட்டுமே! போராட்டம் நீண்டநாள் நீடித்தாலும் தீண்டப்படாதவர்களுக்குத் தான் இறுதி வெற்றி கிடைத்தது.

நான் ஒரு கிறித்துவன் என்பதால் அந்தப் போராட்டத்தில் ஈடுபடக்கூடாது என்று காந்தி சொன்னது உண்மை; நான் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று சொல்லியனுப்பியதும் உண்மை. ஆனால், நான் மன்னிப்புக் கேட்கவில்லை" என்று பதில் சொல்லியிருக்கிறார்.

இப்பொழுது பெரியாரிடம் நாணயம் இருக்கிறதா - காந்தியாரிடம் நாணயம் இருக்கிறதா என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். நமக்கு மாறுபட்டிருந்தாலும், வேறுபட்டிருந்தாலும் சரித்திரச் சம்பவத்தைச் சொல்லும் போது அதைத் திரித்துச் சொல்லக்கூடாது.

அதுவும் ஜார்ஜ் ஜோசப் உயிரோடு இருக்கும்போதே அவர் மன்னிப்புக் கேட்டார் என்று சொன்னால் எவ்வளவு பெரிய அவமானகரமான செய்தி, எவ்வளவு தவறான ஒரு செய்தி!

"யங் இந்தியா"வில் வைக்கம் சத்தியாக்கிரகம் பற்றி பிரசுரிக்கப்பட்டதையெல்லாம் "மகாத்மா காந்தி நூல்கள்" என்பதிலே தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

அதில், ஒரு சத்தியாகிரகி காந்தியாருக்குக் கடிதம் எழுதுகிறார்:

"ஒவ்வொன்றிற்கும் உங்களுடைய மதிப்பு வாய்ந்த யோசனையையும் உதவியையுமே நம்பியிருக்கிறோம். எங்களுக்குப் பண முடை ஏற்பட்டிருக்கிறது. இங்கே உங்களுடைய விஜயத்தை எல்லாச் சத்தியாகிரகிகளும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

நமது இயக்கத்திற்கு உங்களது விஜயம் மகத்தான உதவியாக இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை" - என்று ஒரு சத்தியாகிரகி எழுதிய கடிதத்தைக் காந்தியார் அப்படியே வெளியிட்டுவிட்டு அதற்கு "யங் இந்தியா"வில் பதில் எழுதுகிறார். என்ன பதில் அது?

"இது ஒரு நல்ல கடிதமாகும். அது மனம் விட்டும் எழுதப்பட்டிருக்கிறது. சத்தியாகிரகிகளை திருவாங்கூர் அரசாங்கம் கைவிட்டிருக்கலாம்! நானும் கைவிடலாம். ஆனால், அவர்களுக்குக் கடவுளிடம் நம்பிக்கை இருந்தால் - கடவுள் அவர்களை ஒருபோதும் கைவிட மாட்டார். அவர்கள் என்னை நம்பிக் கொண்டிருப்பார்களானால் ஒடிந்த நாணல் குச்சியின் மீது தாங்கள் சாய்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும். அவர்களிடமிருந்து நான் பத்திரமான தூரத்தில் வசித்து வருகிறேன்."

- இது யோக்கியப் பொறுப்பான பதிலா? என்னிடம் ஆதரவு எதிர்பார்க்காதீர்கள் என்று எவ்வளவு சாமர்த்தியம் பொங்கச் சொல்லியிருக்கிறார்! "I am at a safe distance" என்று சொன்னதன் மொழிபெயர்ப்புதான் நான் பத்திரமான தூரத்தில் வசித்து வருகிறேன் - என்பதும். என்னைத் தவறியும் கூட வைக்கம் சத்தியாகிரகத்திற்கு யாராலும் கொண்டு போய்விட முடியாது என்பதையும்தான் அப்படி சூசகமாகச் சொல்கிறார்:

அடுத்து, அதே கட்டுரையில் இன்னொரு பகுதியில் சொல்கிறார்.

"காங்கிரஸ் கமிட்டி அவர்களுக்கு எவ்வித உதவியும் அளிக்காமல் போகலாம். அவர்களுக்குப் பணஉதவி எதுவும் கிடைக்காமல் போகலாம்; அவர்கள் பட்டினி கிடக்கும்படியும் நேரலாம்."

- என்று சொல்லி இவ்வளவு இருந்தாலும் அவர்களுடைய போராட்டத்தை அவர்களே நடத்திக் கொள்ள வேண்டும்.

மற்றவர்களுடைய உதவியை நாடக் கூடாது என்று சொல்கிறார். அது மட்டுமல்ல; வெந்த புண்ணிலே வேல் என்பதைப்போல் இன்னொன்றும் சொல்கிறார்.

“சத்தியாகிரகிகளில் எல்லோரும் யோக்கியர்கள் என்று சொல்ல முடியாது. அதுபோலவே, எதிரிகளில் எல்லோரும் அயோக்கியர்கள் என்றும் சொல்ல முடியாது.”

- இது எவ்வளவு மோசமான வார்த்தை என்பதைப் பாருங்கள். அவர்கள் மிகவும் சிக்கலான நிலைமையில் போராடி ஜெயிலில் இருக்கிறார்கள். “நரி, இடமும் போகவேண்டாம், வலமும் போகவேண்டாம்; மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி” என்று பழமொழி சொல்வார்களே அதுபோல், ஆதரவு காட்டாவிட்டாலும் பரவாயில்லை; எதிரிகள் ரொம்பவும் யோக்கியர்கள் என்று வேறு சொல்கிறார்.

இதுமாதிரி ஒன்று இரண்டல்ல; ஏராளமாக இதில் வரிசையாக எழுதிக் கொண்டு வந்திருக்கிறார்.

இன்னொன்று 03.07.1924இல் ‘யங் இந்தியா’வில் எழுதுகின்றார்.

“இந்த இயக்கத்தை (சத்தியாகிரக இயக்கத்தை) ஆதரித்து காங்கிரசில் ஒரு தீர்மானம் நிறைவேற்றக் கூடாதா என்று கேரளப் பிரதிநிதிகள் என்னைக் கேட்டார்கள். அந்த யோசனை எனக்குப் பிடிக்கவில்லை” என்று நான் அவர்களிடம் கூறினேன்.

அவர்கள் விரும்பியது தார்மீக ஆதரவே (Moral support). அவர்கள் காங்கிரஸ் அக்ராசனருக்கு ஒரு தீர்மானத்தை அனுப்பியிருந்தால் காங்கிரஸ் கமிட்டி எவ்வித ஆட்சேபனையுமின்றி தார்மீக உறவு அளித்திருக்கும்.

எனவே, அவ்விதம் செய்ய வேண்டாம் என்று நான் அவர்களுக்கு யோசனை கூறுவதில் எனது பொறுப்பு மிகவும் அதிகமாகும். ஆங்காங்குள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் எல்லா இயக்கங்களும், தங்கள் சொந்த பலத்தையே நம்பியிருக்க வேண்டும். அசாதாரண சந்தர்ப்பங்களில் மாத்திரமே, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அதன் தார்மீக ஆதரவை அளிக்க வேண்டும்‘” என்று கையை அகல விரித்திருக்கிறார் காந்தியார்.

இந்தியாவிலே நடந்தவைகளுள் மிக முக்கியமான எவ்வளவு பெரிய போராட்டம் இது! அதில் எப்படிக் கருத்துச் சொல்கிறார் காந்தியார் என்பதை நீங்கள் கவனித்துப் பார்க்க வேண்டும்.

தோழர்களே! இதற்கப்புறம் சத்ரு சங்கார யாகம் போன்ற நிகழ்ச்சிகளுக்குப் பிறகு வெற்றி நெருங்கி வந்து விடுகிறது. அப்படி வெற்றி நெருங்கி வரக்கூடிய சூழ்நிலையில்தான் டிசம்பர் 1924இல் பெல்காம் காங்கிரஸ் நடக்கிறது.

“காங்கிரஸ் நூற்றாண்டு - தெரியாத தகவல்கள்” என்பதில் இதையும் நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

அந்த பெல்காம் காங்கிரசுக்குத்தான் மகாத்மா காந்தி தலைமை தாங்குகிறார். அவர் தலைமை தாங்கிய காங்கிரஸ் அதுதான். அதில்தான் முதல் முறையாகத் தீண்டாமையைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வரும்போது “வைக்கம்” என்ற வார்த்தையை அந்தக் காங்கிரசினுடைய தலைமைப் பேருரையில் காந்தியார் சொல்லுகிறார். “வைக்கம் போராட்டம் நடக்கிறது அதையும் நாம் வரவேற்கிறோம்” என்று வெற்றியை நோக்கி வந்தபிறகு அப்போது சொல்கிறார்.

உடனடியாக, கேரளப் பிரதிநிதிகளும் மற்றவர்களும் அகில இந்தியக் காங்கிரசானபடியால் அந்தக் காங்கிரஸ் அதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று சொல்லி ஒரு தீர்மானத்தைக் கொடுக்கிறார்கள். வைக்கம் போராட்டத்தை வரவேற்று ஒரு தீர்மானமும் 1924ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் தேதி நடந்த அந்தப் பெல்காம் காங்கிரஸில் வருகிறது.

ஏன் இதை எடுத்துச் சொல்கிறோமென்றால் - ‘காங்கிரஸில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்களே!’ என்று இந்த ‘உண்மைத் தகவல்கள்’ கூறக் கூடியவர்கள் சொல்வார்கள்.

எப்போது, எப்படி அதை நிறைவேற்றினார்கள்? அதற்கு என்ன பின்னணி? காந்தியாருடைய எண்ணம் என்ன?

காந்தியாருடைய எண்ணத்திற்கு மாறாகத்தான் அது நடந்தது. இப்படிக் காந்தியாரவர்கள் இதிலே நடந்து கொண்ட இந்தச் செய்தியை “யங் இந்தியா”விலே பலவிதமாக காந்தியார் எழுதியதையெல்லாம்

எதிர்த்து மிகத் தெளிவாக பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அவர் நடத்திய பத்திரிகையிலே பதில் எழுதியிருக்கின்றார்.

அதுவே ஒரு புத்தகமாக வந்திருக்கிறது.

பிறகு ஒரு நாடகம் நடக்கிறது.

1925இல் போராட்டம் முடியக்கூடிய தறுவாயில் மகாதேவ் தேசாய், ராஜகோபாலாச்சாரியார், சீனிவாசய்யங்கார் ஆகியோர் புடைசூழ காந்தியார் கேரளத்திற்கு விஜயம் செய்கிறார்.

ரவீந்திரன் புத்தகத்தில் 163ஆம் பக்கத்தில்:

"Gandhi, accompanied by his private secretary, Mahadev Desai, his son, Ramadas Gandhi, C. Rajagopalachari and others reached Vaikkom at 6 p.m. by motor-boat from Ernakulam."

இதன் தமிழாக்கம்:

"காந்தியோடு அவரது தனிச் செயலாளர் மகாதேவ் தேசாய், அவரது மகன் ராமதாஸ் காந்தி, சி. ராஜகோபாலாச்சாரியார் மற்றும் பலர் மாலை 6 மணிக்கு எர்ணாகுளத்திலிருந்து மோட்டார் படகு மூலம் வைக்கத்தை அடைந்தார்கள்.

அங்கே சென்றடைந்ததும், அரசாங்கம் தெருவைத் திறந்துவிட்டால் மட்டும் போதாது; எதிரிகளை நான் மனமாற்றம் செய்ய வேண்டுமென்று காந்தி ஒரு நாடகம் அரங்கேற்றுகிறார். வைதீகப் பார்ப்பனர்களையும், நம்பூதிரிகளையும் சந்தித்துப் பேசவேண்டும் என்கிறார்.

இவர்களுக்கும், போராட்ட வீரர்களுக்கும் நடந்ததல்ல அந்தப் போராட்டம். அது அரசாங்கத்திற்கும் போராட்ட வீரர்களுக்குமானது; ஆகவே அரசாங்கத்தோடு பேசினாலே முடிந்து போய்விடும்.

ஆனால், காந்தி அங்குள்ள பார்ப்பனர்களின் தயவையும், விளம்பரத்தையும், நல்லெண்ணத்தையும் திருப்ப வேண்டும் என்பதற்காக, "இந்து மதத்திற்கு இதனால் ஆபத்தில்லை; பாதுகாப்பு ஏற்பட்டிருக்கிறது" என்று சொல்லி சனாதனிகளான பார்ப்பனர்கள் மத்தியிலே ஒரு செல்வாக்கை உண்டாக்கிக் கொள்ளவேண்டுமென்று கருதுகிறார். ஆகவே, அவர்களிடம் பேசவேண்டுமென்று சொல்கிறார்.

உடனே, ஒரு குறிப்பிட்ட இடத்தில் எல்லோரும் சந்திக்கலாம் என்று அவர்களிடம் போய்க் காந்தியாரின் சார்பில் சொல்கிறார்கள். ஆனால், அங்குள்ள நம்பூதிரிப் பார்ப்பனர்கள் காந்தியாரைச் சந்திப்பதற்காக ஒரு பொது இடத்திற்கு வருவதற்குக் கூட சம்மதிக்கவில்லை.

“நாங்கள் ஒன்றும் குறிப்பிட்ட இடத்திற்கு வரவேண்டிய அவசியமில்லை; வேண்டுமானால் நாங்கள் இருக்கிற இடத்திற்குக் காந்தி வந்து எங்களிடம் பேசட்டும்” என்று சொன்னார்கள்.

அவர்கள் ரொம்பவும் ஆணவத்தோடு இருக்கிறார்கள் என்பதை காந்தியார் அப்போதே தெரிந்திருக்க வேண்டுமா! இல்லையா?

பொது இடத்திற்கு வரமாட்டேன் என்கிறார்கள். காந்தியாருக்குக் கேரளம் ஒன்றும் சொந்த வீடு அல்ல.

ஆனாலும், “அவர்கள் இங்கு வராவிட்டாலும் பரவாயில்லை; நானே சென்று பேசுகிறேன்” - என்று காந்தியார் வளைந்து கொடுக்கிறார்.

அங்கே நம்பூதிரி, நம்பியாத்திரி என்று இரண்டு மூன்று பிரிவினரோடு காந்தி பேசுகிறார்.

அதில் ஜாதி குறித்து ஒரு நம்பியாத்திரி காந்தியாரை மடக்குகிறார். ரவீந்திரன் தனது புத்தகம் பக்கம் 166இல் அதனைக் குறிப்பிட்டிருக்கின்றார்.

Mr. Nambiatiri: Does Mahatmaji belive in the Law of Karma?

Mr. M.K. Gandhi: Yes.

Mr. Nambiatiri : Does he belive in re-incarnation?

Mr. M.K. Gandhi:Yes.

Mr. Nambiatiri: According to our faith, according to our Achara, we belive that they are born in the unapporachable caste by thier bad Karma in their previous birth. We have been enjoined by our Kerala Achara to treat them in this manner; we consider, for that matter, that these people are worse than dacoits or robbers.

Mr. M.K. Gandhi: I would like to know the reason why you should treat them worse than dacoits and drunkards.

Mr. Nambiatiri: In the case of the robber and the drunkard there may be some means of getting rid of those people by the aid of law. But in the case of these people there is no such means.

Mr. M.K. Gandhi:They do not want to sit on these roads, they do not want to obstruct passage; they only want to pass over them.

Mr. Indanturuttil Nambiatiri: It is the passing that is more difficult to grant.

Mr.Vazhutanakat Raja: That is our faith. We belive that he is born in that caste according to his bad karma in his previous birth.

Mr.M.K. Gandhi: let us grant that, But I a sk who is to punish them - we animal beings?

Mr. Indanturuttil Nambiatiri: In wordly matters, it is man who punishes man for wrongs done by him. We belive it is the ordinance of god to have them punished by having them born in this caste.

Mr. M.K. Gandhi: True, true. Let divinity punish them; but how can human beings punish them?

Mr.Indanturuttil Nambiatiri: God acts through man. Similarly as a punishment these people are in the unapproachable caste.

இதன் தமிழாக்கம்:

**திரு. இன்டேன்துருத்தில் நம்பியாத்திரி:** மகாத்மாஜி; கர்மா தத்துவத்தை நீங்கள் நம்புகிறீர்களா?

**திரு. எம்.கே. காந்தி:** ஆம்.

**திரு. நம்பியாத்திரி:** மறு அவதாரத்திலும் தங்களுக்கு நம்பிக்கை உள்ளதா?

**திரு. எம்.கே. காந்தி:** ஆம்.

**திரு. நம்பியாத்திரி:** எங்கள் நம்பிக்கைப்படி எங்கள் ஆச்சாரப்படி - போன ஜென்மத்தில் ஒருவன் செய்த பாவத்தின்படி, இந்த ஜென்மத்தில் அவன் நெருங்கக் கூடாத ஜாதியில் பிறந்திருக்கிறான்

என்று நாங்கள் நம்புகிறோம். எங்கள் கேரள ஆச்சாரத்தின்படி கோயிலுக்கு அருகிலுள்ள தெருவில் நடக்கக் கூடாதபடி அவர்களை நடத்தி வருகிறோம். அதனால், இவர்களைத் திருடர்களைவிட, கொள்ளைக்காரர்களைவிடக் கேவலமாக நினைக்கிறோம்.

(காந்தியிடம் பச்சையாகச் சொல்கிறார்கள். காந்திக்குக் கோபம் வர வேண்டுமா, இல்லையா? பெரியாரை வைத்துக் கொண்டு ஒருவன் இப்படிச் சொல்லியிருந்தால் அவர் சும்மா விட்டு விடுவாரா? காந்தியின் பக்தர்களும், காங்கிரஸ் நூற்றாண்டு விழாக் கொண்டாடுபவர்களும் இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.)

**திரு.எம்.கே.காந்தி:** கொள்ளைக்காரர்களை விடவும், குடிகாரர்களை விடவும் கேவலமாக அவர்களை ஏன் நடத்துகிறீர்கள்; அதற்குரிய காரணத்தை அறிய விரும்புகிறேன்.

**திரு. நம்பியாத்திரி:** திருடனோ, குடிகாரனோ சட்டத்தின் உதவி கொண்டுகூட தப்பித்துப் போய்விடலாம். ஆனால், இந்த நெருங்கக் கூடாத ஜாதிக்காரனுக்குச் சட்டத்தில் அதுமாதிரி தப்பித்துக் கொள்ள இடமே கிடையாது.

**திரு.எம்.கே.காந்தி:** அவர்கள் அந்தச் சாலைகளில் உட்கார வேண்டுமென்றும் சொல்லவில்லை; அந்த இடத்தில் தங்க வேண்டுமென்று விரும்பவில்லை; அவர்கள் சும்மா அந்த வழியாகப் போக விரும்புகிறார்கள்.

**திரு. நம்பியாத்திரி:** அவர்கள் அப்படிப் போவதைத் தான் எங்களால் ஒப்புக்கொள்ள முடியாது.

(அடுத்து ஒரு ராஜா சொல்கிறான்)

**திரு. வழுடநாகட் ராஜா** : அது எங்கள் நம்பிக்கை. போன ஜென்மத்தில் அவன் செய்த கெட்ட கர்மத்தால் அந்த ஜாதியில் பிறந்திருக்கிறான் என்று நம்புகிறோம்.

**திரு. எம். கே. காந்தி:** அதை நான் ஒத்துக்கொள்கிறேன். (போன ஜென்மத்தில் செய்த பாவத்தால் தாழ்த்தப்பட்டவனாக, தீண்டத்தகாதவனாகப் பிறந்தான் என்பதை, கொள்கிறேன் என்கிறார்.)

ஆனால், நாம்தான் அதற்குத் தண்டனை கொடுப்பதா - நாம் மிருகங்களா?

**திரு. நம்பியாத்திரி:** உலகத்தில் தவறு செய்கிற மனிதனை மனிதன் தான் தண்டிக்க முடியும். அந்த ஜாதியில் பிறந்ததால் அவர்கள் தண்டிக்கப்படுவது கடவுளின் கட்டளை என்று நினைக்கிறோம்.

**திரு.எம். கே. காந்தி:** உண்மை, உண்மை. தெய்வம் தண்டிக்கட்டும்; மனிதர்கள் எப்படித் தண்டிக்க முடியும்? (காந்திக்கே உரிய வேஷத் தந்திரம் இது).

**திரு. நம்பியாத்திரி:** கடவுள் மனிதன் மூலமாக அதனைச் செயல்படுத்துகிறான். (கூட்டத்தினர் சிரிப்பு)

அதுபோன்றுதான் ஒரு தண்டனையாக இந்த மக்கள் நெருங்கக் கூடாத ஜாதியாக இருக்கிறார்கள்.

காந்தியாருக்கும் - நம்பூதிரி, நம்பியாத்திரிகளுக்கும் இடையில் நடந்த இந்த விவாதத்தில், காந்தியாரை அவர்கள் தங்கள் கேள்விகளால் மடக்குகிறார்கள்; திணறடிக்கிறார்கள். காந்தியார் அளித்த பதில்களும் அவரது சரணாகதிப் போக்கும் அவரைப் பெருஞ்சங்கடத்தில் ஆழ்த்துவனவாக அமைந்திருக்கிறது.

- காந்தி திணறுகிறார். காந்தி திணறுவது மட்டுமல்லாமல், கடவுளையும் கொண்டுவந்து சந்தியிலே வைத்துவிட்டார்.

நண்பர்களே! இப்படி ஒன்று, இரண்டல்ல; ஏராளமாக இருக்கின்றன, சொல்லிக் கொண்டே போகலாம். -

இந்த நிலையில், தீண்டாமையைப் பற்றி காந்தியின் யோக்கியதை என்ன என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தீண்டாமையை ஒழிக்க காந்தி அப்படிச் செய்தார், இப்படிச் செய்தார் என்று இந்தத் ‘துக்ளக்’ கட்டுரையாளர் சொல்கிறாரே - அது எந்த அளவுக்கு உண்மை என்பதைத் தெரிந்துகொள்ள இன்னொரு தகவலைச் சொல்ல விரும்புகிறேன்.

“தமிழ்நாட்டில் காந்தி” என்னும் நூலில் - காந்தி தமிழ்நாட்டுக்கு எவ்வப்போது வந்தாரோ அது பற்றியெல்லாம் இருக்கிறது. காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்பட்ட நூல் அது.

அந்த நூலில் ஒரு தகவல் இருக்கிறது.

காந்தியாரை சர் ஏ.டி. பன்னீர்செல்வமும், உமாமகேஸ்வரம் பிள்ளையும் தஞ்சாவூரில் தங்கியிருக்கும் போது சந்தித்து, "காந்தி அவர்களே! பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் பிரச்சினை மிகவும் உச்ச கட்டத்திற்குப் போயிருக்கிறது. பிராமணர்களுக்கு நெருக்கமாயிருக்கும் நீங்கள் நினைத்தால் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியுமே? பெரியாரும் நீங்கள் சொன்னால் கேட்கக் கூடியவர்தாமே?" என்று கேட்கிறார்கள். இது 1926க்குப் பிறகு.

சுயமரியாதை இயக்கம், 1925இல் அய்யா அவர்கள் காங்கிரசிலிருந்து விலகியவுடன் தொடங்கப்பட்டு 1926-இல் தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது.

"ஆகவே, நீங்கள் தலையிட்டால் இந்தப் பிரச்சினை முற்றாமல் தடுத்துவிடலாமே"- என்று கேட்கிறார்கள்.

அதற்கு காந்தி, "நான் அதில் ஈடுபடலாம் என்றுதான் நினைத்தேன். ஆனால், என்னுடைய நண்பர் வரதராஜுலு நாயுடு, முன்பைவிட இப்போது நிலைமைகளெல்லாம் மாறிப் போயிருக்கிறது. நீங்கள் தலையிட வேண்டாமென்று சொல்லி விட்டார். நானும் அப்படித்தான் நினைக்கிறேன். இந்தப் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் பிரச்சினை ரொம்பவும் உச்சக்கட்டத்திற்குப் போயிருக்கிறதென்று நீங்கள் நினைப்பது போல் நான் நினைக்கவில்லை. பார்ப்பனர்களே மிகவும் மாறியிருக்கிறார்கள், அதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன்:

"முன்பெல்லாம் (1925-க்கு முன்பு) நான் சென்னைக்கு வந்தால், சீனிவாச அய்யங்கார் வீட்டில் திண்ணையில்தான் உட்கார வைப்பது வழக்கம். இப்பொழுது என்னுடைய மனைவி அவருடைய வீட்டுச் சமையலறை வரையிலே செல்கிறாள்; நானும் செல்கிறேன்" என்று பதில் சொன்னார்.

அதனால், பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் பிரச்சினை தீர்ந்து போய்விட்டது" என்றார். தீர்ந்தது யாரைப் பொறுத்த வரையில்?

காந்தியாரைப் பொறுத்தவரையில் தீர்ந்துவிட்டது, அவ்வளவுதான்!

ஆனால், சீனிவாச அய்யங்கார் வீட்டுத் திண்ணைக்கு மட்டுமே சொந்தமாக இருந்த காந்தியார், அவர் வீட்டு சமையற்கூடம் வரையிலே செல்லுகின்ற உரிமை எப்படிக் கிடைத்ததென்றால் - அது சீனிவாச அய்யங்காரின் மன மாற்றத்தினால் அல்ல; பெரியார் சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்து அது உச்சக்கட்டத்திற்குப் போனதால்தான்.

காந்தியாரைப் பழையபடி திண்ணையில் உட்கார வைத்தால் தங்களைத் தோலை உரித்து அடையாளம் காட்டிவிடுவார்கள் என்கிற அச்சம் உலுக்கிய காரணத்தால்தான் - அவராலே அங்கு போக முடிந்தது.

எனவே, திண்ணையிலே உட்கார்ந்திருந்த காந்தியாரைச் சமையற் கூடத்திற்குக் கொண்டுபோனது சுயமரியாதை இயக்கம். ஆகவே, இப்படி ஒவ்வொன்றையும் எடுத்துக் கொண்டு பார்ப்போமேயானால் அய்யா அவர்கள் மனித உரிமைக்காக எவ்வளவு போராடியிருக்கிறார்கள் என்பது தெரியும்.

ஆரம்பத்திலிருந்தே காந்தியார் மனித உரிமைகள் பற்றிய பிரச்சினைகளில் உற்சாகமாக இல்லை. இந்த வெற்றிக்குப் பிறகும்கூட அப்படித்தான். இதிலே சம்பந்தப்பட்டிருந்தவர்கள் அனைவரும் பார்ப்பனர்கள் என்கிற காரணத்தினாலே இந்த வெற்றி காந்தியார் மூலம் வர வேண்டுமென்று செய்து விட்டார்கள்.

ஆகவே, இந்தக் கட்டுரையில் ("துக்ளக்" கட்டுரை) இவர்கள் சொல்லியிருக்கின்ற கருத்து ரொம்பவும் விஷமத்தனமான, உண்மைக்குத் துளியும் சம்பந்தமில்லாத ஒரு கருத்தாகும்.

இந்த நேரத்தில், இன்னொன்றையும் மிக முக்கியமாக உங்களுக்குச் சொல்லியாக வேண்டும். 61 ஆண்டுகளுக்கு முன்னால் 1924 ஏப்ரல் 13க்குப் பிறகு அய்யா அவர்கள் வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இந்தியாவில், 61 ஆண்டுகளுக்கு முன்னால் சட்டத்தை மீறிய ஒரு போராட்டம் என்று சொன்னால் - அந்தப் போராட்டத்தில் பெண்கள் எங்காவது கலந்து கொண்டார்கள் என்ற வரலாறு உண்டா? காந்தியாருடைய வீட்டுப் பெண்களாவது கலந்து

கொண்டிருக்கின்றார்களா? அல்லது - தேசியத் தலைவர்கள் என்று நீட்டி முழக்குகிறீர்களே.... அப்படி எந்தத் தேசியத் தலைவருடைய வீட்டு மனைவியோ, அவருடைய தங்கையோ ஏதாவது போராட்டத்தில் கலந்து கொண்டு ஜெயிலுக்குப் போனார்கள் என்று சரித்திரம் உண்டா?

61 ஆண்டுகளுக்கு முன்பே சரித்திரம் படைத்து - பிற்காலத்திய சுதந்திரப் போராட்ட வீராங்கனைகளுக்கு வழிகாட்டிய அந்தப் பெருமைக்குரிய ஒரே ஒரு குடும்பம் ஈரோட்டுக் குடும்பந்தான் - அது தந்தை பெரியாருடைய துணைவியார் அன்னை நாகம்மையாரும், அவருடைய தங்கை கண்ணம்மையாரும் ஆகும். அதைக் காந்தியாரே உணர்ந்திருந்தார்.

அந்தச் சரித்திரமே உங்களுக்குத் தெரியவில்லையே! கொச்சைப் படுத்தலாமென்று நினைக்கிறீர்களே!

உள்ளபடியே காங்கிரஸ்காரர்கள் காங்கிரஸ் நூற்றாண்டு விழாவைப் பெருமையாகச் செய்வதாயிருந்தால் வைக்கம் வரலாற்றை அவர்கள் அல்லவா கொண்டுவர வேண்டும்?

நீங்கள் சும்மா இருந்திருந்தாலாவது வைக்கம் போராட்டத்தில் காந்திக்கும் சம்பந்தம் உண்டு என்றாவது நினைத்துக் கொண்டிருந்திருப்பார்கள். அரைவேக்காட்டுத்தனமாக அற்ப புத்திக்காரர்கள் எழுதிய கட்டுரையால் இப்பொழுது இவ்வளவு விஷயம் வெளியே வந்துவிட்டதே!

அது மட்டுமல்ல; இது 'who's who in Madras' என்று 1933இல் வெளியிடப்பட்ட ஒரு நூல். இதை வெளியிட்டவர்கள் "The pearl Press - Cochin" இதில், சென்னையிலுள்ள முக்கியத் தலைவர்கள், பொதுத்தொண்டர்கள், பிரபலமானவர்களைப் பற்றி யார், யார் என்று எழுதியிருக்கிறார்கள். இதிலே ஈ.வெ.ரா. நாகம்மையாரைப் பற்றி ஒரு குறிப்பு இருக்கிறது. அன்னை நாகம்மையார் தலைவர்கள் பட்டியலில் இருக்கின்றார்கள். பெரியாரவர்களைப் பற்றி இருந்தால் அது அதிசயமில்லை. ஏனென்றால், அய்யா அவர்கள் சுயமரியாதை இயக்கத்தினைத் தோற்றுவித்த தலைவர், மிகப்பெரிய சமுதாயப் புரட்சியாளர்.

ஆனால், நாகம்மையார் அவர்களைப் பற்றி கொச்சினில் வெளியிட்டிருக்கிறார்கள் - தமிழ்நாட்டிலோ, ஈரோட்டில் நமக்குத் தெரிந்தவர்களோ வெளியிட்டது அல்ல.

இப்புத்தகத்தின் 60ஆம் பக்கத்தில்:

"Nagammal. E.V.R., age 45, is the wife of Mr.E.V. Ramasamy of Erode, Editor of "Kudiarasu" and founder of the Self-Respect Movement. She was all along with him when her husband was an active Non-Co-operator. She was a member of the All-India Congress Committee. After her husband was arrested and imprisoned for disobeying Sec.144, she organised a band of lady volunteers and carried on picketing even disobeying 144. The Government did not take any action against them. When the All Parties' Conference met on 19th January 1922, under the Presidentship of Sir Sankaran Nair, Mr. Gandhi, in his speech regarding the calling off of the Civil Disobedience Movement said, "If Civil Disobedience is to be called off, the two ladies at Erode must be consulted". In the year 1924, when Mr. Ramasamy was arrested and imprisoned during his campaign of Satyagrahaa, at Vaikkom in Travancore, to establish the preliminary right of walking along the streets by the so-called Adi-Dravida's, she unflinchingly carried on propaganda from one corner to the other of the Travancore State, and thus roused the public consciousness."

இதன் தமிழாக்கம்:

"சுயமரியாதை இயக்கத்தின் நிறுவனரும், "குடிஅரசின்" ஆசிரியருமான ஈரோடு திரு. ஈ.வெ. ராமசாமி அவர்களின் மனைவி நாகம்மாள், வயது 45. ஒத்துழையாமை இயக்கத்தில் தன் கணவர் மிகவும் தீவிரமாக இருந்தபோது இந்த அம்மையார் அவரோடு உறுதுணையாக இருந்தவர். அவர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய ஓர் உறுப்பினர். (இந்தச் செய்தி 'துக்ளக்'கில்

எழுதுகிற அனாமதேயங்களுக்காவது தெரியுமா?) அவருடைய கணவர் 144-தடையை மீறினார் என்பதற்காக கைது செய்யப்பட்ட போது - பெண்களையெல்லாம் ஒன்று திரட்டி 144 அய் மீறுவதற்காக அழைத்துப்போன பெருமை இந்த அம்மையாருக்கு உண்டு. அரசாங்கம் அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

1922, ஜனவரி 19இல் அனைத்துக்கட்சி மாநாடு சர். சங்கரன் நாயர் தலைமையில் நடந்தபோது, காந்தியார் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்துவது குறித்துத் தன்பேச்சில் குறிப்பிடும் போது, “ஒத்துழையாமை நிறுத்தப்பட வேண்டுமானால், ஈரோட்டிலுள்ள இரண்டு பெண்மணிகளைக் கலந்தாலோசிக்க வேண்டும்” என்று குறிப்பிட்டார். 1924ஆம் ஆண்டு ஆதி திராவிடர்கள் என்று அழைக்கப்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள் தெருக்களில் நடக்கும் உரிமையை நிலைநாட்டுவதற்காக திருவாங்கூரிலுள்ள வைக்கத்தில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் திரு. ராமசாமி ஈடுபட்டு, கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டபோது - அந்த அம்மையார் திருவாங்கூர் மாநிலத்தின் எல்லா இடங்களிலும் சோர்வில்லாமல் பிரச்சாரத்தை நடத்தினார். இப்படிப் பொதுமக்களின் மனஉணர்வைத் தட்டியெழுப்பினார்” என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

அது மட்டுமல்ல. வைக்கம் போராட்டம் பற்றி 50 ஆண்டு நினைவாக ஒரு “பொன்விழா” மலரை மலையாளத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். அதில், நாகம்மையார், கண்ணம்மையார் ஆகியோர் மறியல் செய்யும்போது அவர்களைக் கைது செய்யாமல் சாலையில் இருந்து அப்படியே அப்புறப்படுத்திக் கொண்டு போய் விட்டு விடுகிறார் பிட் - என்ற செய்தி உள்ளது. அவர்கள் இருவரும் “ஏன் எங்களைக் கைது செய்யவில்லை” - என்று கேட்கிறார்கள் - அதற்கு “மேலிடத்திலிருந்து உத்தரவில்லை; போய்விடுங்கள்” - என்று பதில் சொல்கிறார்கள். இதை அந்த மலையாளத்தில் வெளியிட்டிருக்கின்ற மலரில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

எந்த அளவுக்குக் கேரளத்திலிருப்பவர்கள் நன்றியுணர்ச்சியோடு இருக்கிறார்கள் என்பதற்கு அடையாளம்தான் கேரள அரசு பெரியாருக்கு நினைவுச் சின்னம் எழுப்ப நிலம் கொடுத்தது.

அய்யா அவர்கள் மறைந்து போனது அவர்களுக்கெல்லாம் ஒரு . பெரிய சங்கடம். அந்தப் “பொன்விழா”வின்போது அய்யாவை அழைத்துப் பெருமைப்படுத்த வேண்டுமென்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால், அய்யா அவர்கள் இல்லையானாலும் துவக்க விழாவிற்கு இந்திரா காந்தியையும், முடித்து வைப்பதற்கு அன்னை மணியம்மையாரையும் வைக்கத்திற்கு அழைத்து நடத்தினார்கள். அப்போது அம்மா அவர்களோடு செல்லக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

ஒவ்வொருவரும் அய்யா அவர்களைப் பற்றிப் பேசியதைக் கேட்டபோது, எங்களுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. ரொம்ப நன்றியுணர்ச்சியோடு அவர்கள் எல்லோரும் பேசினார்கள்.

அந்த வைக்கம் பொன்விழா கொண்டாட்டத்தின்போது போராட்டத்தில் கலந்துகொண்ட ஒவ்வொரு தலைவர் பெயராலும் வளைவுகள் அமைத்திருக்கிறார்கள். கே.பி. கேசவமேனன், ஜார்ஜ் ஜோசப், டி.கே. மாதவன், நீலகண்டன், நம்பூதிரி - இப்படி வரிசையாக தலைவர்கள் பெயரால் வளைவுகள் அமைத்திருந்தார்கள்.

அப்படி வளைவுகள் போட்டிருந்தபோது அந்த ஊருக்குள் நுழையக் கூடிய முதல் வளைவு ‘ஈ.வெ. ராமசாமி நாயக்கர் கேட்’ என்று தான் போட்டிருந்தார்கள்.

“நாயக்கர்” என்றாலே எல்லோரும் மரியாதையோடு எழுந்து நிற்கிறார்கள்.

ஆனால் இங்கே, “தமிழக அரசும், கேரள அரசும் இணைந்து கேரள மாநிலத்திலுள்ள வைக்கத்தில் ஈ.வெ.ரா பெரியாருக்கு நினைவுச் சின்னம் எழுப்பப் போகிறார்களாம்” - என்று “துக்ளக்”கில் வயிற்றெரிச்சலோடு எழுதுகிறார்கள்.

கேரளத்தில் வசிக்காத, கேரளத்திற்குச் சம்பந்தமில்லாத ஒருவருக்குக் கேரள அரசு இடங்கொடுத்து அவருக்கு நினைவுச் சின்னத்தைக் கேரளத்திலே அமைக்க முன்வருகிறது என்றாலே - பெரியாருடைய பங்கை கேரளாக்காரர்கள் உணராமல் இருந்திருப்பார்களானால் அதற்கு ஒப்புக் கொண்டிருக்குமா அந்த அரசாங்கம்?

இது பொது அறிவு உள்ளவர்கள் சிந்திக்க வேண்டிய ஒன்று; இதற்கு ஒன்றும் வரலாற்று அறிவு தேவையில்லை.

அதற்கு உரிய சம்பந்தம் இருக்கிறது என்று நினைத்தாலொழிய, கேரளாக்காரர்கள் அவ்வளவு சுலபமாக அய்யா அவர்களை அங்கீகரித்திருப்பார்களா? தந்தை பெரியார் “வைக்கம் வீரர்” என்பது இன்னும் பழைய தலைமுறைக்குக் குருதி ஓட்டத்திலே இருக்கிறது.

திரு.வி.க.வினுடைய “வாழ்க்கைக் குறிப்புகள்” என்னும் நூலிலே தந்தை பெரியார் “வைக்கம் வீரர்” என்பது பற்றியும், தெளிவாக அவருடைய பங்கு - பணி என்ன என்பதையும் எழுதியிருக்கின்றார். அதனோடு, எஸ்.எஸ்.மாரிசாமி அவர்கள் நடத்திய “காண்டீபம்” என்னும் பத்திரிகையில் காமராஜர் அவர்கள் கொடுத்த ஒரு பேட்டியில் அய்யா அவர்கள்தான் வைக்கம் போராட்டத்தை மிகச் சிறப்பாக நடத்தினார் என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

இந்தக் கட்டுரையாளர் காமராஜரின் சீடர் என்று சொல்லிக் கொள்கிறார். எனினும் காமராஜர் நேரில் கண்ட ஒரு போராட்டம் பற்றி - அவரே ஒப்புக் கொண்ட உண்மையை மறுக்க முன்வந்து - குருவுக்கு மிஞ்சிய சீடர் ஆகப் பார்க்கிறார்.

இன்னுங் கேட்டால், காமராஜருக்கு நேரடியாகவே வைக்கத்தைப் பற்றித் தெரியும். காரணம், திருவனந்தபுரத்தில் அவருடைய மாமா கடையில் வேலை செய்ய அனுப்பப்பட்ட போது காமராஜர் வைக்கத்தை வேடிக்கை பார்க்க அங்கே சென்றுவிட்டார்.

“பெரியார் அங்கே தலைமை தாங்கும்போது நான் கூட்டத்திலிருந்த சாதாரண தொண்டன்” என்று அவரே சொல்லியிருக்கிறார். இச் செய்தி “காமராஜ் ஒரு சரித்திரம்” என்னும் நூலிலே அவருடைய நண்பர் முருக தனுஷ்கோடி எழுதியிருக்கிறார். இதுமாதிரி ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன.

இவ்வளவு ஆதாரங்கள் இருக்கிற செய்தியையே நீங்கள் நினைத்தால் குழப்பலாம், திரிக்கலாம், மாற்றலாம் என்று நினைத்தால் அது கடைசிக் கருப்புச் சட்டைக்காரன் இருக்கிற வரையிலே நடக்காது.

என்னே, காங்கிரஸ் நூற்றாண்டு விழா என்று கொண்டாடும் போது தயவுசெய்து வைக்கத்தை இருட்டடிக்காதீர்கள்.

மோதிலால் நேருவினுடைய படத்தைப் போட்டு நூற்றாண்டு தொடங்குகிறது என்று சொன்னால், என்ன பொருள்? அதுவே சரியில்லை.

அதுமட்டுமல்ல; காமராஜர் படத்திற்குப் பதிலாக பட்டாபி சீத்தாரமய்யா படத்தைப் போட்டு "இவர்தான் காமராஜர்" என்று போடுகிறார்கள். சரித்திரம் அவ்வளவு தெரிந்த நண்பர்கள் (!) காரணம், "பிளாக்" இல்லை என்கிறார்கள். காமராஜர் படத்தையே தேடும் நிலை.

காங்கிரசுக்குத் தலைவராக இருந்தவர் மட்டுமல்ல - இந்த நாட்டிலே மிக அமைதியாக இரண்டு பிரதமர்களைக் கொண்டு வரக்கூடிய வாய்ப்பை உருவாக்கிய ஒரு தமிழர் என்று சொன்னால் அது பெருந்தலைவர் காமராஜரையே சாரும். அவர் செய்தது சரியா - தப்பா என்பது வேறு விஷயம். அதனால்தான் சரித்திரம் சந்ததி பிரகாரம் வந்து விட்டதா என்பது வேறு செய்தி.

தாம் அந்த இடத்திற்குப் போக வேண்டுமென்று காமராஜர் நினைக்கவில்லை. விரும்பியிருந்தால் அன்றைக்குக் காமராஜர் பிரதமராக வந்திருக்க முடியும். எனவே, அப்படிப்பட்ட தலைவர்களையெல்லாம் சிறுமைப்படுத்துவது என்று வந்தால் - அவர்கள் தமிழனாகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்திற்காக இப்படியெல்லாம் சிறுமைப்படுத்தப்படவேண்டுமா?

விமர்சனம் செய்யும்போது என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள் - அது உங்களுக்கு உரிமை. ஆனால், செய்திகளைச் சொல்லும்போது, உண்மைகளைச் சொல்லும் வரலாற்றைச் சொல்லும்போது நிச்சயமாக நீங்கள் உண்மையைத் தவிர வேறு எதுவும் சொல்லக்கூடாது என்கிற உணர்ச்சியைப் பெறவேண்டுமென்றே இந்த விளக்கங்களை எடுத்துச் சொல்ல முன்வந்தேன்.....

வைக்கம் போராட்டம் பற்றிய செய்திகள் மிகப்பெரிய அளவில் எவ்வளவோ - இருக்கின்றன. சேகரிக்கச் சேகரிக்க பலவண்ணங்களிலேயிருந்து கிடைக்கின்றன. வைக்கத்தைப் பற்றி ஒரு நண்பர் ஓர் அற்புதமான செய்தியை எனக்குக் கொடுத்தார்.

வைக்கம் போராட்டத்தைத் தொடங்கிய தலைவர் கேரளக் காங்கிரஸ் தலைவராக இருந்த பாரிஸ்டர் கே.பி. கேசவமேனன்தான். அவர்

பின்னாளில் இலங்கையில் இந்திய ஹைகமிஷனராகக்கூட பதவி வகித்திருக்கிறார். “மாத்ரு பூமி”யின் ஆசிரியராகவும் பணியாற்றி இருக்கிறார்.

கே.பி. கேசவமேனன் மலையாளத்தில் தம்முடைய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளை எழுதியிருக்கிறார். அவருடைய மொழியான “மலையாளத்”தில் மட்டுமே அந்த வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் வெளிவந்திருக்கிறது. அது ஆங்கிலத்திலே வரவில்லை. அது ஆங்கிலத்திலே வந்திருக்குமானால், நமக்கெல்லாம் கூட இந்தச் செய்திகள் எட்டியிருக்கும்.

என்றாலும், அங்கே சென்ற நண்பர் ஒருவர் இந்தக் குறிப்பை எனக்குக் கொண்டுவந்து கொடுத்தார்.

மிக அற்புதமான குறிப்பு இது. கே.பி. கேசவமேனன் அவர்கள் வைக்கத்தைப் பற்றி எழுதிக்கொண்டு வருகின்ற நிலையிலே தந்தை பெரியாருடைய பங்கும், பணியும் அவருடைய உணர்வும், உத்வேகமும் எப்படியிருந்தது என்பது பற்றி எழுதியிருக்கிறார். அய்யா அவர்கள், தாம் கொண்ட இலட்சியத்திற்காக எப்படி தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள், சிறைச்சாலையிலே எப்படி இருந்தார்கள் என்பது பற்றியெல்லாம் குறிப்பிடுகிறார்.

“இப்படித் தமிழ்நாட்டிலிருந்து ஒருவர் இலட்சிய உணர்வோடு நமக்காக வந்திருக்கிறார். அதுவும் ஜாதியால் அவர் “ஜாதி - இந்து”. ஆனால், தீண்டப்படாத - நெருங்கக்கூடாதவர் என்று சொல்லப்படுகிற மக்களுடைய உரிமைக்காக - அதுவும் அவருடைய மாநிலத்திலே கூட அல்ல, இன்னொரு மாநிலத்திலே வந்து அந்த உணர்வோடு நம்மையெல்லாம் தட்டியெழுப்பியிருக்கிறார். அதற்காக ஒருமுறை அல்ல இரண்டாவது முறையும் அவர் சிறைச்சாலையை ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறாரே” என்று கே.பி. கேசவமேனன் சுட்டிக் காட்டுகின்றார்.

பாரிஸ்டர் திரு. கே.பி. கேசவமேனன் மலையாள மொழியிலே எழுதிய தம் வரலாற்றிலே (சுய சரிதை) குறிப்பிட்டிருப்பதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தந்தார் நண்பர். அது வருமாறு:

(தந்தை பெரியாரவர்கள் வைக்கத்திலே தண்டிக்கப்பட்டு சிறைச்சாலையிலே இருக்கின்ற காட்சி)

"With fetters on his legs, a Convict's cap on his head, a lion cloth reaching down his knee and a wooerden number plate around his neck, E.V. Ramasamy is working with murder and dacoits. He is doing double the work that is generally done by a convict. This sacrifice of a caste Hindu for the freedom of the untouchables of Kerala gave us new life. The noble mission of this great movement has prompted him to sacrifice his all.

Is there not anybody here with the maturity, magnanimity, experience, enthusiasm and patriotism that E.V.R. has? Are they not ashamed of themselves when they see this great leader who has come to suffer for the sake of the people of this state? Is if not time for the elderly and experienced people of Kerala to rise from their easy chairs?"


**-K.P. Kesavamenon,**
**In Auto-biographical Account**
**in Malayalam - Page No. 108.**

இதன் தமிழாக்கம்:

"கால்களில் விலங்குச் சங்கிலி, தலையிலே கைதிகள் அணியும் ஒரு குல்லாய், முழங்காலுக்குக் கீழே தொங்குகின்ற ஒரு வேட்டி, கழுத்தில் கைதி எண் குறிக்கப்பட்ட ஒரு மரப்பட்டை. இவற்றோடு ஈ.வெ. ராமசாமி கொலைகாரர்களோடும், கொள்ளைக்காரர் களோடும் வேலை செய்து கொண்டிருக்கின்றார். தண்டனை அடைந்த ஒரு சாதாரணக் கைதி ஒரு நாளைக்கு எவ்வளவு வேலை செய்வானோ, அது போல் இருமடங்கு வேலை செய்கிறார்.

ஒரு "ஜாதி இந்து" என்று சொல்லக்கூடிய நிலையிலே உள்ள ஒருவர் கேரளத்திலுள்ள தீண்டத்தகாத மக்களுக்கு உரிமை வாங்கிக் கொடுப்பதற்காக செய்த தியாகம் நமக்குப் புதுவாழ்வு தந்திருக்கிறது. இந்தப் பெரிய உன்னத இலட்சியத்திற்காக அவர் அனைத்தையும் இழக்கத் தயாராக இருக்கிறார்.

ஈ.வெ.ரா. அவர்களுக்கு இருக்கக்கூடிய நாட்டுப்பற்று, உற்சாகம், அனுபவம், பெருந்தன்மை, பெரும் பக்குவம் இவைகளெல்லாம்



வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டு திருவனந்தபுரம் சிறையில்தந்தை பெரியார் இருந்த கோலத்தை இந்த படம் சித்தரிக்கிறது

உடைய இன்னொருவரை இந்த நாட்டிலே அந்த அளவுக்குக் காணமுடியுமா? இந்த மாநிலத்து மக்கள் அனுபவிக்கிற கொடுமையை நீக்க வேண்டும் என்பதற்காகத்தான் எவ்வளவு கஷ்ட நஷ்டங்களை வேண்டுமானாலும் ஏற்கலாம் என்று சொல்லி ஒரு தலைவர் வந்தாரே - அதைப் பார்த்து இந்த மாநில மக்களாக இருக்கிற யாருக்குமே வெட்கமேற்படவில்லையா? கேரளத்தின் முதிர்ந்த அனுபவமிக்க தலைவர்கள் தங்கள் சாய்வு நாற்காலியைத் தூக்கியெறிந்துவிட்டு தங்கள் பங்கைச் செலுத்த இப்போதாவது வரவேண்டாமா?"

-கே.பி. கேசவமேனன் மலையாளத்தில், தன்வரலாறு, பக்கம் 108

நன்றியுணர்ச்சி நிறைந்த பேருள்ளத்திலிருந்து வெளிவந்த அற்புதமான கட்டுரைக் குறிப்பு இது; இதைக் கொடுத்த நண்பருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, திரு. வல்லுத்தரா கோவிந்தன் என்கிற நண்பர் "வைக்கம் சத்தியாக்கிரகம்" என்னும் பெயரால் மலையாளத்தில் ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதிலே ஒரு சுவையான செய்தி இருக்கிறது, அது வருமாறு:

"அன்பர்களே!
கனதனவான்களே!

இன்றைய தினம் சாயங்காலம் வைக்கம் போட் ஜெட்டிக்கு (Boat Jetty) அருகில் ஈரோடு ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் அவர்களும், ஸ்ரீ ஏ.கே. பிள்ளை அவர்களும், ஸ்ரீ சி.வி. குஞ்சுராமன் அவர்களும் இன்னும் சிலரும் பேசுவார்கள்.

யாவரும் வாருங்கள்!
வாங்கோ! வாங்கோ!..

- இவ்வாறு தமிழ் நாட்டிலிருந்து சென்றிருந்த தியாகி முத்துசாமி வைக்கம் போராட்டம் பற்றிய விளக்கப் பொதுக்கூட்டத்துக்கு வருமாறு பொதுமக்களுக்குத் தண்டோரா போட்டு அறிவித்துச் சென்றார்.

முதன் முறையாக அவர் இப்படி தண்டோரா போட்டுச் சென்றபோது போராட்டத்தை எதிர்த்தவர்கள் அவரை அடித்து அவரது தண்டோராவைப் பிய்த்தெறிந்தார்கள்.

மறுமுறை ஒரு தகர டப்பாவை வைத்து அடித்துக் கொண்டு போனார். அதையும் உடைத்து நொறுக்கினார்கள்.

மறுமுறை ஒரு பாக்குமர மட்டையை வைத்துக் கொண்டு அதைத் தட்டி ஓசை எழுப்பி செய்தியைச் சொல்லிக் கொண்டு போனார்.

என்று திரு. வல்லுத்தரா கோவிந்தன் தமது ‘வைக்கம் சத்தியாக்கிரகம்’ என்னும் மலையாள நூலிலிருந்து குறிப்பிட்டிருக்கிறார்.

- இச் செய்தியையும் நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். நல்ல நெஞ்சங்கள் அங்கே - சின்னஞ்சிறு முயற்சிகள் - சம்பவங்களையெல்லாம் நெஞ்சு கொள்ளாத நன்றியோடு எடுத்துச் சொல்லி மகிழ்ச்சிக் கூத்தாடுகின்றன!

ஆனால், தமிழகத்திலே சில நச்சு உள்ளங்கள் பெரியாரின் பெரும் சாதனையையே தங்களது பொய்ப் பித்தலாட்டத் திரை மூலம் மூடிவிடலாம் என்று மனப்பால் குடிக்கின்றன! நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கவே இந்த இரு உதாரணங்களையும் தந்தேன்.

■

### வைக்கம் போராட்டம் :

# காங்கிரசார் குற்றச்சாட்டும் தந்தை பெரியாரின் பதிலும்!

வைக்கம் போராட்ட நாயகராகிய தந்தை பெரியார் - காங்கிரசை விட்டு வெளியேறிய பின் அவர்மீது வேண்டுமென்றே காங்கிரசார் கிளப்பிய குற்றச்சாட்டுக்கு தந்தை பெரியார் கைப்பட எழுதிய கடிதம் - தந்தை பெரியார் அவர்கள் நாணயத்தின் தூய்மையை வெளிப்படுத்தும்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் அவர்களுக்கு ஈரோடு ஈ.வெ. ராமசாமி நமஸ்காரம். தாங்கள் 18.03.1927இல் எழுதியனுப்பிய ரிஜிஸ்டர் கடிதம் கிடைத்தது. ஏறக்குறைய இது போலவே 02.09.1926 தேதியிலும் ஒரு கடிதம் கிடைத்தது. அதற்குப் பதில் எழுதி இருக்கிறேன். அப்படி இருந்தும் மறுபடியும் நான் சரியான கணக்கு அனுப்பவில்லை என்றும் இதைப் பற்றி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் என்றும், நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்றும் பயமுறுத்தும் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. ஒரு நாளும் தங்கள் கமிட்டி என்னைப் பற்றி பிரசுரிப்பதையும், என் பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்வதையும் எனக்காக நிறுத்தி விடாதீர்கள். இனியும் நீங்கள் எத்தனை தடவை சமாதானம், போக்குவரத்துச் செலவு விஷயத்திற்கு மாத்திரம் வவுச்சர் கொடுக்க வேண்டியதுதான். ஆனால், அவ்வகையில் செலவினங்கள் எல்லாம் கணக்கு குறித்து வைத்திருந்தாலும், அதில் எது எது இத்தொகையில் கழித்துக் கொள்ள வேண்டியது என்கிற விவரம் தெரியவில்லை.

2 வருடங்களாகி விட்டபடியால் கணக்குத் தயார் செய்யவும் ஞாபகக் குறிப்புகளும் தற்சமயம் கைவசமிருக்கும் குறிப்புகளும் போதுமான

இடம் கொடுக்கவில்லை. ஆனாலும் செலவுத் தொகையும் ரூ.100க்கு மேல் இருக்கும் என்று எழுதி இருக்கிறேன். இவ்வளவுதான் பதில் எழுதக்கூடும்.

இதை பல தடவை எழுதி இருக்கிறேன். அபிப்பிராய பேதத்தால் என் பேரில் உங்கள் கமிட்டியாருக்கு ஆத்திரம் வரும் போதெல்லாம் ஏதாவது விஷயத்தை கண்டுபிடிக்கும் தன்மையில் தேடிப் பார்ப்பதும், அப்படித் தேடிப் பார்க்கும் போதெல்லாம் இந்த ஒரு விஷயம் தான் தங்கள் கமிட்டியின் கண்களுக்குக் கிடைப்பதும், அதை வைத்துக் கொண்டு என்னை மிரட்டுவதுமாய் நடந்து வந்திருக்கிறது என்கிற முடிவின் பேரில் இதை முடிக்கின்றேன். வேணும் நமஸ்காரம்.

**அன்புடன்,**

**ஈ.வெ.ராமசாமி**


**'குடி அரசு' தலையங்கம்**

24.11.1935 நாளிட்ட 'குடிஅரசு' தலையங்கத்தில் (பக்கம் 11,12) இது பற்றி குறிப்பிட்டு இருப்பதாவது:

தோழர் ஈ.வெ.ரா. வைக்கம் சத்தியாகிரக நிதி விஷயத்தில் கேட்டாலும் முன் எழுதிய சமாதானம் தானே ஒழிய, புதியதாய் எழுத ஒன்றும் இல்லை.

தவிர, நான் சத்தியாக்கிரக ஆஸ்ரமத்திற்குக் கொடுத்திருப்பதாய்ச் சொல்லும் தொகைக்கும் சத்தியாகிரக ஆஸ்ரமத்தார் பெற்றுக் கொண்டிருப்பதாய் சொல்லும் தொகைக்கும் வித்தியாசமேற்படுகிறது என்கிறீர்கள். இதற்கு நான் கட்டுப்பட வேண்டியவன்தான். அதோடு அதில் வித்தியாசம் இருந்தால், அந்தக் குற்றத்திற்கும் நான் கட்டுப்பட வேண்டியவன்தான். ஆதலால் அதிலுள்ள ஆட்சேபனையைத் தயவு செய்து தெரிவியுங்கள். அதைத் தங்களுக்குத் திருப்தி செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன். அது விஷயத்தில் ஏற்படும் செலவை கமிட்டி பொறுத்துக் கொள்வதானால் நாளையே தங்களுக்கு திருப்பிச் செய்யப் பிரியப்படுகிறேன். திருப்பிச் செய்யாவிட்டால் அந்தச் செலவையும் நஷ்டத்தையும் குற்றத்தையும் நான் பொறுத்துக் கொள்கிறேன். அது சம்பந்தமான மீதி ஒன்றும் இல்லை என்று முன்னமே எழுதி இருக்கிறேன். சத்தியாக்கிரக கமிட்டிக்குக் கொடுத்தது போகவும் நான் போய் வந்த,

# தந்தை பெரியார் கைப்பட எழுதிய பதில்



[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஆள் போய் வந்த முதலிய செலவுகள் போகவும் மீதி உள்ள ரூபாயைச் சுசீந்திரம் சத்தியாக்கிரகக் கமிட்டிக்கு உதவியதாய் அப்பொழுதே எழுதியுமிருக்கிறேன். சுசீந்திரம் சத்தியாகிரக கமிட்டிக்குத் தாங்களும் எழுதிக் கேட்டு, அதைத் தெரிந்து கொண்டுமிருக்கிறீர்கள்.

அதிலும் வித்தியாசமிருந்தாலும் நான் உங்களுக்குத் திருப்தி செய்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்றப்படி மேலே காட்டிய போக்குவரத்துச் செலவினமாய் வாங்கிய பணத்துக்குக் கணக்கு கொடுக்கவில்லை என்பதற்கு சமாதானம் சொல்லி. ஆக வேண்டுமல்லவா? குச்சிக்காரி மாதிரி "நீ மாத்திரம் யோக்கியனா" என்று சொன்னால் போதுமா? அல்லது "பெரிய காரியத்தில் இதெல்லாம் கவனிக்கக் கூடாது" என்று சொல்லி தப்பித்துக் கொள்ளலாமா? அல்லது "சகலத்தையுந் துறந்த தேசபக்த தியாகிகள்தானே கையாடினார்கள்" என்று சொல்லலாமா? கணக்கு சொல்லித்தானே ஆக வேண்டும்? எனவே, வைக்கம் சத்தியாக்கிரகத்துக்கு அட்வான்சாக ரூபாய் ஆயிரம் (19,000 அல்ல) ஈ.வெ.ரா. பேருக்கு வைக்கத்துக்கு அனுப்பியது உண்மை . அப்பணத்துக்கு ஈ.வெ.ரா.வால் 2 தடவை கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரம் கூறுகிறோம்.

முதலில் 2 தடவை ஏன் கணக்கு கொடுக்கப்பட்டது என்பது ஒரு கிளைக் கேள்வி ஆகலாம். ரசீதுகளுடன் முதல் தடவை கொடுத்த கணக்கு காங்கிரசு ஆபீசில் கை தவறிவிட்டது. இரண்டாம் தடவை கணக்கு கேட்டதற்கு ஈ.வெ.ரா. முதலிலேயே வவுச்சருடன் கணக்கு அனுப்பி ஆய்விட்டது என்று பதிலெழுதினார். பிறகு தோழர் முத்துரங்க முதலியார் ஆபீசுக்கு அதிகாரியாக வந்தார். அந்த சமயம் ஈ.வெ.ரா. காங்கிரசைப் பலமாகத் தாக்கிக் கொண்டிருந்த சமயம். ஆதலால், முத்துரங்கத்தைப் பிடித்து அவர் மூலமாக ஈ.வெ.ரா. மீது ஏதாவது குற்றச்சாட்டு தயாரிக்க சூழ்ச்சி செய்து அதற்காக எவ்வளவோ தூரம் பழங்கணக்குகளை எல்லாம் பூதக்கண்ணாடி வைத்து ஆபீசில் பரிசீலிக்கப்பட்டு, இந்த ஒரு விஷயம் அதாவது 1000க்கு கணக்கு அனுப்பாமல் இருக்கும் விஷயத்தைக் கண்டு பிடித்து கணக்கு அனுப்பும்படி ஈ.வெ.ரா.வுக்கு ரிஜிஸ்டர் நோட்டீசு அனுப்பி கணக்கு கேட்கப்பட்டது. கணக்கு அனுப்பாவிட்டால் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் என்று அதில் எழுதி இருந்தது.

அதற்குப் பதிலாக மறுபடியும் ஒரு தடவை கணக்குகள் ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பப்பட்டது.

இந்தக் கணக்கின் பேரில் அக்கணக்கில் கண்ட நபர் ஒவ்வொருவருக்கும் எழுதி அதில் கண்ட பணம் உங்களுக்குக் கொடுக்கப்பட்டதா என்று காங்கிரஸ் ஆபீசிலிருந்து எழுதிக் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கு அவர்கள் பெற்றுக் கொண்டதாக ஆபீசுக்குத் தகவல் எழுதியும் இருக்கிறார்கள்.

அதாவது 1000 ரூபாயில் 700 ரூபாய் வைக்கம் சத்தியாக்கிரக காரியதரிசிக்குக் கொடுக்கப்பட்டதும், பாக்கி 300இல் பாலக்காடு சவுரி ஆசிரமத்து கதருக்குப் பஞ்சு வாங்கி அனுப்பியதும், மீதி நூத்திச்சில்லரை ரூபாய் கோட்டார் சத்தியாக்கிரகத்துக்குக் கொடுக்கப்பட்டதும் ஆகிய கணக்குகள் மேல் கண்டபடி இரண்டு தடவை அனுப்பப்பட்டிருக்கிறது.

■

## “விடுதலை வீரர்கள்” என்ற வரிசையில் தந்தை பெரியார் அவர்களால் வழங்கப்பட்டு 18.10.1973 அன்று இரவு 8:00 மணிக்கு திருச்சி வானொலியில் ஒலிபரப்பப்பட்ட பேட்டியின் ஒரு பகுதி வருமாறு:

**செய்தியாளர் :** அய்யா, வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டீர்களே! அதைப்பற்றிக் கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்கள்.

**பெரியார் :** அது தீண்டாமையைப்பற்றியது. இதில் நானே முக்கியஸ்தனாகப் போய்விட்டேன். வைக்கம் போராட்டம் 1920இல் நடைபெற்றது. அப்பொழுது எனக்கு வயது 40. தமிழ்நாட்டில் நான் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தேன். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு நான் செயலாளராக இருந்தேன். பிறகு நானே தலைவரானேன். பிரச்சாரம் பெரிய அளவுக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்த நிலையிலே மலையாள மாநிலத்தில் திருவனந்தபுரத்திற்கு அருகில் வைக்கம் என்னும் ஓர் இடம் இருந்தது. திருவனந்தபுரம் என்பது ராஜாவுடைய மாநிலம். அங்கு ஈழவர் என்ற ஒரு கம்யூனிட்டியினர் இருந்தனர். அவர்கள் இங்கிருக்கின்ற நாடார்களைப் போன்றவர்கள்தான் அவர்கள். நாடாரைவிட கடினமாக இழிவுபடுத்தினார்கள்.

ஈழவர்களுடைய நிழல்கூட படக்கூடாது என்று இழிவுபடுத்தினார்கள். அதையும் அவர்கள் சகித்துக் கொண்டு இருந்தார்கள். இந்தச் செய்திகளைப் பற்றி பெரிய அளவில் விளம்பரம் ஆனது.

ஈழவ சமுதாயத்தினருக்கு ஓர் எண்ணம் வந்தது. வேண்டும் என்று வரவில்லை. இயற்கையாகவே வந்தது.

திருவனந்தபுரத்தில் - ராஜாவுடைய பிறந்தநாள் வருடம் தோறும் கொண்டாடுவார்கள். ராஜாவுடைய பிறந்தநாள் கொண்டாடும் இடத்தில் ஒரு கொட்டாரம் இருக்கும். கோர்ட்டெல்லாம் அங்குதான் இருக்கும்.

அந்த இடத்தில் தான் ராஜாவினுடைய பிறந்த நாள் கொண்டாடுவது வழக்கம். இதுவரைக்கும் கொண்டாடிக் கொண்டுதான் வந்தார்கள். அந்த வருடம் கொண்டாடினார்கள். அப்படி ராஜாவினுடைய பிறந்தநாள் கொண்டாடுகின்ற காலத்திலே ஈழவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் யாரும் அங்கு நடக்கக்கூடாது.

அந்த வருடம் நடந்த பொழுது, அங்கே இருக்கின்ற கோர்ட்டிலே ஈழவ சமுதாயத்தைச் சார்ந்த ஒரு சுமாரான குடும்பத்தைச் சேர்ந்த வக்கீல் உள்ளே வரக்கூடாது என்று பகிஷ்காரம் பண்ணிவிட்டார்கள். இதற்கு முன்பு அதற்கு இணங்கியவர்கள் தான். அந்த தடவை அப்படி செய்ததினாலே அவருக்கு உணர்ச்சி ஏற்பட்டதினாலே அதை குறைவாக நினைத்து சிலபேரோடு சேர்ந்து யோசனை பண்ண ஆரம்பித்தார். காங்கிரசில் அவர் பிரபலமாக இருந்தார். அவர் சட்டென்று என்ன பண்ணினார்? தெருவில் வரக்கூடாது என்று சொன்னதை மீறுவது என்று முடிவு பண்ணி விட்டார்.

ஜார்ஜ் ஜோசப் என்று ஒருவர் இருந்தார். அவர் தமிழ்நாட்டில் செல்வாக்காக இருந்தார். ஈழவ சமுதாயத்தைச் சார்ந்த வக்கீலும், ஜோசப்பும் என்ன செய்வது என்று ஆலோசனை பண்ணினார்கள். மீறிவிடுவது என்று முடிவெடுத்தார்கள்.

கொட்டாரத்திற்குள் போகக் கூடாது. ஊர் ஜனங்களுக்குப்படுகிற மாதிரி வைக்கத்தை செலக்ட் பண்ணினார்கள்.

வைக்கத்தினுடைய யோக்கியதை என்ன? ஏன் செலக்ட் பண்ணினார்கள் என்றால் அங்கு வைக்கத்தப்பன் கோயில் இருக்கிறது. வைக்கத்தப்பன் கோவிலைச் சுற்றி நான்கு மதில் இருக்கிறது. இந்த நான்கு மதிலைச் சுற்றி, ஒரு மைலுக்கு ஒன்றரை மைலுக்கு 4 பர்லாங்குக்கு 5 பர்லாங்குக்கு வீதி இருக்கிறது. அந்த வீதியில் ஜனங்கள் இருக்கிறார்கள். சவணர்கள் என்று பெயர். சவணர்கள் என்றால் நல்ல ஜாதிக்காரர்கள் என்று பெயர்.

அந்த சந்தர்ப்பத்திலே இந்தக் காரணத்தை அடிப்படையாக வைத்து இந்த ஈழவர்களைப் போகக் கூடாது என்று சொன்னார்கள். ஆனால் சாய்பு போகலாம். கிறிஸ்துவன் போகலாம். ஈழவர்கள்

மாத்திரம் போகக்கூடாது. அங்கு இருக்கின்ற கோர்ட்டில் ஈழவ சமுதாயத்தைச் சார்ந்தவர்களை அதிகாரிகளாகவும் - போடமாட்டார்கள். குமாஸ்தாக்களாகவும் போடமாட்டார்கள். அதற்கு அவர்களும் வருத்தப்பட மாட்டார்கள்.

அப்படி இருந்த ஓர் இடத்தை தேர்ந்தெடுத்து மீறுவது என்று முடிவெடுத்தார்கள்; புறப்பட்டார்கள். அதில் ஒரு பத்து, பதினேழுபேர் சேர்ந்தார்கள். எல்லாம் பெரிய ஆள்களாக தினம் ஒன்றிரண்டு பேராக போராட்டத்தில் ஈடுபட்டார்கள். பதினேழு பேரையும் பிடித்து உள்ளே போட்டுவிட்டார்கள்.

பதினெட்டாவதாக போராட்டத்தில் ஈடுபட ஆள் இல்லை. அப்பொழுது ஜோசப் அவர்கள் எனக்கு கூட்டு உதவியாக இருந்தவர். அவர் ஜெயிலில் இருந்து எனக்கு ஒரு கடுதாசி எழுதினார்.

ஈ.வெ.ரா.! இங்கு வந்தோம். இப்படி நிலைமை ஆகிப்போய் விட்டது. பட்டுக்கொண்டோம். நீ வந்து எங்களை விடுதலை பண்ணினால் உண்டு. இல்லாவிட்டால் நாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வர வேண்டியது தான்.. இல்லாவிட்டால் அந்த போராட்டத்தை நிறுத்த வேண்டும். கடினமாக இருக்கிறது என்று ஒரு கடுதாசி இரகசியமாக எழுதினார்.

அந்தக் கடுதாசி வந்த நேரத்திலே **மதுரை ஜில்லாவிலே ‘பண்ணைபுரம்’** என்கிற ஊரிலே நான் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கின்றேன். அப்பொழுது காங்கிரஸ் கமிட்டி பிரசிடெண்டாக இருக்கின்றேன். கடுதாசி கையில் கொடுத்தார்கள்.

அவ்வளவுதான் உடனே நேராக ஊருக்கு வந்தேன். ராஜாஜிக்கு ஒரு கடுதாசி எழுதினேன். இந்த மாதிரி இடத்திற்கு நான் புறப்பட்டுப் போகிறேன் என்று - ‘விர்’ரென்று புறப்பட்டு போய்விட்டேன். எங்கே போனேன்? வைக்கத்திற்கு. அங்கு டெபுடி கலெக்டரும் போலீஸ் கமிஷனர் பிட்டு என்பவரும் என்னை வரவேற்று டி.பி.யில் உட்கார வைத்தார்கள். எனக்கு ஓர் ஆளைப் போட்டார்கள். உங்களுக்கு என்னென்ன வேண்டுமோ அதை எல்லாம் இவர்கள் செய்வார்கள் என்று சொன்னார்கள்.

அந்த மாதிரி திருவாங்கூர் ராஜா செய்வதற்கு என்ன காரணம் என்றால் அதற்கு ஒரு பதினைந்து, இருபது நாள்களுக்கு முன்புதான் திருவாங்கூர் மகாராஜா நமது பங்களாவில் இறங்கி குளித்து, சாப்பிட்டுவிட்டு மதறாஸ் வருகிறார். திருவாங்கூரிலிருந்து நேராக மதறாஸ் வருவதற்கு வண்டி இல்லை. ஈரோட்டில்தான் இறங்கி ஆக வேண்டும். நமது பங்களா ரயில்வே ஸ்டேசன் ஓரத்தில் இருந்தது. அதில் தங்கி இருந்தார். அங்கு எங்களிடம் பேசி இருந்துவிட்டு புறப்படும் பொழுது எங்களுக்கு ஆளுக்கு ஒரு சால்வை இனாமாகக் கொடுத்துவிட்டுப் போனார். பதினைந்து, இருபது நாள்களுக்குள் நான் வைக்கம் சென்றதால் ரொம்ப மரியாதையாக வைத்திருந்து அனுப்ப வேண்டும் என்று நினைத்திருக்கிறார்.

நான் போனேன். இப்படி ஆகும் என்று நினைக்கவில்லை. நான் போனவுடனே அதே மாதிரி கூட்டத்தில் பேசினேன். என்னை அரஸ்ட் பண்ணுவார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். அரஸ்ட் பண்ணவில்லை. நான் ராஜாவுடைய ஆள் என்று நினைத்தார்கள். ராஜாவே இவருக்கு சப்போர்ட் பண்ணுகிறார் போலிருக்கிறது என்று நினைத்தார்கள். கூட்டம் அதிகமாகப் போய் வலுத்துவிட்டது.

பதினாயிரம் பேர் என்று சொன்னால் ஜாஸ்தி இல்லை. அந்தமாதிரி கூட்டம் இருந்தது. ராஜா பொறுக்கிறவரைக்கும் பொறுத்துப் பார்த்தார். அப்புறம் முடியவில்லை. ராஜா சொல்லி அனுப்பினார். வேண்டாம் என்று சொல்லுங்கள். கேட்கவிட்டால் அரஸ்ட் பண்ணிவிடுங்கள் என்று சொல்லிவிட்டார்.

என்னை அரெஸ்ட் செய்து அழைத்துக்கொண்டு போனார்கள். ஒரு மாதம் என்னை தண்டித்தார்கள். அந்த ஒரு மாதமும் **அருவிக்குத்தி** என்ற இடத்தில் அங்குள்ள போலீஸ் ஸ்டேசனில் என்னை வைத்திருந்தார்கள். சிறைக்காவலில் வைக்கவில்லை. தினமும் ஓட்டலில் இருந்து சாப்பாடு வரவழைத்துப் போட்டார்கள். ஒரு மாதம் முடிந்து வெளியே வந்தேன்.

மறுபடியும் அந்தக் காரியத்தில் ஈடுபட்டேன். உடனே **ஒரு வாரத்திற்குள் மறுபடியும் அரெஸ்ட் பண்ணிவிட்டார்கள்.** ஆறுமாதம் எனக்கு தண்டனை கொடுத்து விட்டார்கள். வைக்கத்திலிருந்து என்னை

**திருவனந்தபுரம் சென்ட்ரல்** ஜெயிலுக்குக் கொண்டு வந்து அங்கே வைத்து விட்டார்கள். நான் அங்கு இருந்ததினாலே, இரண்டு மூன்று காரணத்தினாலே செல்வாக்கு ஏற்பட்டுவிட்டது.

வைக்கத்தில் ‘சத்ரு சம்கார யாகம்’ என்று ஒன்று நடத்தினார்கள். ராஜா இதை ஒத்துக்கொள்ளவே மாட்டேன் என்றாராம். அங்குள்ளவர்களில் நம்பூதிரிகளில் ஒருவர் தலைமை ஏற்று அந்த யாகத்தை நடத்தினார்கள். ஜெயிலில் நாங்கள் சிரித்துக் கொண்டிருக்கின்றோம்.

இப்படி இருக்கிற பொழுது இரண்டு நாள்தான் வித்தியாசம் இருக்கும். சிறை வார்டன் ஒருவர் ராஜாவுக்கு உடல்நிலை சரியில்லை என்று ஒரு சின்ன வார்த்தை சொன்னார். அதை நாங்கள் முக்கியமாக எடுத்துக் கொள்ளவில்லை.

ஒருநாள் நடு ஜாமத்திலே வேட்டு விடுகின்ற சத்தம் கேட்டது. நடுராத்திரியில் எதற்கு வேட்டுவிடுகிறார்கள் என்று நாங்கள் கேட்டோம்.

ஜெயில் வார்டன் ‘**ராஜா திருநாடு அடைந்துவிட்டார்**’ என்று சொன்னார். திருநாடு அடைந்துவிட்டார் என்றால் செத்துப் போய் விட்டார் என்று அர்த்தம்.

ராஜா செத்ததை முன்னிட்டு இராணி பொறுப்பேற்றார். கைதிகளை எல்லாம் விடுதலை செய்துவிடுங்கள் என்று சொன்னார். அந்த விடுதலையில் நாங்களும் இருந்தோம், மொத்தம் 17 அல்லது 18 பேர் இருக்கும். நாங்கள் வெளியில் வந்தோம்.

**செய்தியாளர் :** தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் வேறு யாராவது உங்களுடன் இருந்தார்களா?

**பெரியார் :** இரண்டு மூன்று பேர் இருந்தார்கள். ஒருவர் அய்யங்கார் இருந்தார். கால்கூட கொஞ்சம் ஊனமாக இருக்கும். பெயர் தெரியவில்லை. இன்னொருவர் பொள்ளாச்சிக்காரர். மொத்தத்தில் மூன்றுபேர். இரண்டாவது ஆளாக நான் இருந்தேன்.

**செய்தியாளர் :** வைக்கம் போராட்டத்தில் நீங்கள் பங்கெடுத்ததற்காக உங்களை காந்திஜி ‘வைக்கம் வீரர்’ என்று சொன்னாரா?

**பெரியார் :** மன்னிக்கணும்ங்க. அவர் சொல்லவுமில்லை, ஒன்றுமில்லை. எங்களை ரிலீஸ் செய்தார்கள். ஒரு எல்லையைக் எங்களுக்குக் காட்டி, இதற்குள் வரக்கூடாது என்று தடை உத்தரவு போட்டார்கள். நாங்களும் அந்த எல்லையைவிட்டுவிட்டு மற்ற இடத்தில் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கின்றோம்.

அப்பொழுது அங்கு **திவானாக இருந்தவர் ஓர் ஆந்திராகாரர்.**

நாங்கள் தொடர்ந்து வேலை செய்து கொண்டுதானிருந்தோம். பிரச்சாரம் நடக்கும் பொழுது ரொம்ப வேடிக்கை எல்லாம் நடந்தது. காந்தி இதற்கு நேர் விரோதமாக இருந்தார். பஞ்சாபில் உள்ள சீக்கியர் சங்கம் நமக்கு உதவி செய்ய வந்தார்கள். பணம் கொடுத்தார்கள். அரிசி, பருப்பு எல்லாம் வாங்கினோம். இதற்கு இடையில் 100 அடி நீளத்திற்கு ஒரு பெரிய கொட்டகையைப் போட்டு தினமும் 200, 300 பேர் சாப்பிடுகிற மாதிரி செய்தோம். அது பண்டிகை மாதிரி தடபுடலாக வளர்ந்து விட்டது.

இந்தப் போராட்டத்தைப் பற்றி காந்தியிடம் சொன்னார்கள். காந்தி சொன்னார். சீக்கியர்களுக்கு இங்கு வேலை இல்லை போய்விட வேண்டும். முஸ்லிம்கள் இதில் கலக்கக் கூடாது. கிறித்துவர்கள் இதில் கலக்கக்கூடாது. இது இந்து மக்களுக்குரிய விசயம் என்று இப்படி, அப்படிச் சொல்லி மட்டம் தட்டுவதற்கு எவ்வளவு பண்ணனுமோ அவ்வளவையும் பண்ணினார்.

இராஜாஜிக்கு இஷ்டமில்லை. நீ வந்துவிடு வேறு ஆளைப் போட்டுப் பார்த்துக் கொள்ளலாம். நீ அங்கு இருப்பது சரியல்ல. எனக்குத் திருப்தி இல்லை. வந்துவிடு என்று சொன்னார். எனக்கு இங்கு செல்வாக்காக இருக்கிறது. காரியம் நடந்து கொண்டிருக்கின்றது. சீனிவாச அய்யங்கார் வந்து கூப்பிட்டார். அங்கு வந்து விடு இங்கு வேண்டாம் என்று இருந்தாலும் நாங்கள் அதைக் கேட்கவில்லை. இதை நடத்திக் கொண்டுதான் இருந்தோம். நான் துணிந்து தான் இருந்தேன்.

**கடைசியாக இராணியாருக்கு இதை அனுமதித்திட வேண்டும் என்ற எண்ணம் வந்து விட்டது. இராகவய்யா என்பவர் இராஜாஜிக்கு ஒரு கடுதாசி எழுதினார். அரசாங்கத்தில் சம்மதித்து விட்டார்கள்.**

**இதை ஒழித்துக் கட்டிவிடலாம். நீங்கள் பேச்சுவார்த்தையின் பொழுது வரவேண்டும் என்று எழுதியிருந்தார்கள்.**

இராஜாஜி என்ன செய்தார். நமக்கு ஏதாவது இதில் பிசகு வந்துவிடும் என்று நினைத்து காந்தியிடம் தான் இதைப்பற்றி எழுதிக் கேட்க வேண்டும் என்று பதில் எழுதிவிட்டார்.

காந்திதான் இதைச் செய்ய வேண்டாம் என்று சொன்னவர். காந்திக்கு இதில் சம்பந்தமே இல்லை. அரசாங்கம்தான் இதை முடிவு செய்தது. இராஜாஜி காந்திக்கு கடிதம் எழுதினார். காந்தி உடனே புறப்பட்டு வந்தார்.

அரசாங்கம் இந்த மாதிரி சம்மதிக்கிறார்கள் என்று தெரிந்தவுடனே காந்தி என்ன சொன்னார் என்றால் இராமசாமிதானே அதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்? அவரை கேட்காமல் சம்மதம் கொடுத்து அவர் பாட்டுக்கு காரியம் செய்தால் என்ன செய்வது? அதனாலே அவரைக் கேட்டுக் கொண்டால் தேவலாம் என்று சொன்னார். அதன் பிறகு இந்த விசயத்தில் என்னை கலக்க ஆரம்பித்தார்கள். காந்தி அங்கே தானே இருக்கிறார். அவரை போய் நான் பார்த்தேன். என்ன இராமசாமி? இந்த மாதிரி சொல்கிறார்களே!. ஒத்துக் கொண்டு போகவேண்டியதுதானே - என்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்.

எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை என்று நான் சொன்னேன்.

அந்தம்மா காந்தியையும், இராஜாஜியையும் அழைத்தார். என்னை அழைக்கவில்லை. காந்தி எனக்கு சம்மதம் இருக்கிறதாகக் காட்டிக் கொள்ள வேண்டும் என்பதற்காக என்னை அழைத்துக் கேட்டார். போகும் பொழுது நான் ஓர் இடத்தில் இறங்கி நின்றேன். அவர் ஓர் இடத்தில் இறங்கினார்.

**திருவனந்தபுரத்தில் கொட்டாரம் என்று இருக்கிற இடம். அது சமுத்திர கரையோரமாக இருக்கின்ற இடம்.. அங்கு என்னை அழைத்து காந்தி கேட்டார்.**

**"எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லிங்க" என்று சொன்னேன். "நான் போய் பேசலாமா" என்று கேட்டார். "போய் பேசுங்களேன்" என்று நான் சொன்னேன்.**

காந்தியார் போனார். இராணியாரிடம் பேசினார். அந்தம்மா சொன்னார்களாம், "கோயிலுக்குள் அடுத்ததாக நுழைவதாக அவர் பேசிக்கொண்டிருக்கின்றார். அவர் அதை செய்யக்கூடாது என்று சொன்னார். கோவில் பிரவேசத்தைப் பற்றி கிளர்ச்சி பண்ணவில்லை என்று சொன்னால் இப்பொழுதே நான் விதித்துள்ள தடையை நீக்கி விடுகின்றேன்" என்று சொன்னார்.

காந்தியாரும் சரி என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நேராக நான் இருக்கின்ற இடத்திற்கே வந்தார். இந்த மாதிரி அந்த அம்மா சொல்கிறார் கோவில் பிரவேசத்துக்குப் போகக் கூடாது என்று, அதற்கு என்ன சொல்லுவது நாம் என்று சாதாரணமாகக் கேட்கிற மாதிரி கேட்டார்.

நான் சொன்னேன், நம்முடைய இலட்சியம் கோயில் வரைக்கும் தானே, தெருவிலே போவதால் என்ன ஆகும்? இந்த **பேதம் ஒழிய வேண்டும்** என்பதற்காகத்தான் இந்த கிளர்ச்சியை செய்கின்றோம்.

ஆனால், இப்பொழுது நாம் அதைப்பற்றி பிரஸ் பண்ணுவதில்லை. மக்களை அதற்குப் பக்குவப்படுத்திக் கொண்டுதான் செய்ய வேண்டும் என்று சொன்னேன். அப்படியே சொல்லிவிடலாமா என்று காந்தி கேட்டார். நன்றாகச் சொல்லிவிடுங்கள் என்று சொன்னேன்.

காந்தி போனார். கோவில் பிரவேசம் இப்பொழுது இல்லை என்று சொன்னார். அந்த அம்மா அப்பொழுதே அனுமதித்துவிட்டார்.

ஓர் இடத்தில் கொஞ்சம் தகராறு இருக்கிறது. அந்த இடத்தில் வேலி போடுகிறவரைக்கும் சும்மா இருக்க வேண்டும் என்றார். ஓர் இடத்தில் என்ன தகராறு என்றால் கோயில் சம்பந்தமான குளம் அந்த ரோட்டிலே இருக்கிறது. அந்தக் குளம் தீட்டாகிப் போய்விட்டால் கோயிலுக்குள் போனது போல் ஆகிவிடும்.

அந்தக் குளம் இருக்கிற பகுதியோடு கோயில் இருக்கிற இடத்திற்கு வேலி போட்டு விடுகின்றோம். அதற்கு மூன்று, நான்கு நாள் ஆகும். வாய்தா கேட்டார்கள். அவசரமாகவும் வேலி போட்டுவிட்டார்கள். அப்புறம் போகலாம் என்றார்கள். எல்லோரும் அந்த ரோட்டில் நடந்தார்கள். அந்த காரியம் முடிந்து போய்விட்டது. இது முடிந்தவுடனே

அங்கே, இங்கே பிரச்சாரம் செய்தோம். அப்பொழுது என்ன கோளாறு ஏற்பட்டதென்றால் சி.பி. இராமசாமி அய்யர் திவானாக இருந்தார். அவர் ஏதோ தந்திரமாக நடந்தார். அவர்களுக்குள்ளேயே கோளாறு நடந்தது.

இவர்கள் போட்ட உத்தரவில் கோவில் தவிர, மற்றபடி உள்ள இடங்களில் பேதமில்லை. சகலஸ்தர்களுக்கும் உரிமை உண்டு என்று உத்தரவு போட்டு விட்டார்கள்.

இந்த உத்தரவு வந்தவுடனே ஆதிதிராவிடர்கள், மற்றவர்கள் எல்லோரும் செல்ல ஆரம்பித்துவிட்டார்கள். ஆதிதிராவிடர்கள் போக ஆரம்பித்தவுடனே நாயர்மார்களுக்கு ஆத்திரம் பொறுக்க முடியவில்லை. ஆதிதிராவிடர்கள் எல்லாம் எதற்கு இங்கு வந்தீர்கள் என்று அடித்தார்கள். இவர்கள் திருப்பி அவர்களை அடித்தார்கள். ஓர் ஆள் ஒழிந்து போனான். அவன் யார் என்றால் ஈழவனாக இருந்து முஸ்லிம் ஆனவன். உடனே கலகமாகிவிட்டது.

சர்.சி.பி. இராமசாமி அய்யர் தந்திரமாக என்ன செய்தார் என்றால் இதை ஜாதிக்கலவரம் என்று சொல்லாதீர்கள். தொழிலாளர் கலகம் என்று சொல்லுங்கள் என்று சொல்லி பேப்பரிலே செய்தியாக வெளிவந்து விட்டது. தொழிலாளர்களுடைய சண்டையால் ஒருவருக்கு ஒருவர் அடித்துக் கொண்டார்கள் என்று வந்தது.

உடனே அந்த அம்மா அவர்கள் கோவில் பிரவேசத்துக்கு அனுமதி கொடுத்து விட்டார்கள்.

கோவிலில் கர்ப்பக் கிரகம் ஒன்றைத் தவிர சத்திரம், சாவடி சகலமும் எல்லா இந்து ஜாதியாருக்கும் அனுமதி உண்டு என்று அந்த அம்மா சட்டம் போட்டு விட்டார்கள்.

■


ஜார்ஜ் ஜோசப்


நீலகண்ட நம்பூதிரிபாட்


கே.கேளப்பன்


மஸ்ஜித் செரீப்



கோவிந்தன்



சாமி சத்யபிரதன்



கே.எம்.பனிக்கர்



திருமதி. ஜார்ஜ் ஜோசப்

# ஜாதி ஒழிப்பு - ஆதி சரித்திரம் வைக்கம் சத்தியாக்கிரகம்

- தந்தை பெரியார்

(1958 ஆம் ஆண்டு ஆறுமாத சிறைத் தண்டனை அடைந்து சிறையில் இருந்தபோது, தந்தை பெரியார் அவர்களால் எழுதப்பட்ட வரலாற்றின் ஒரு பகுதி இங்கே தரப்படுகிறது. வேறு ஒருவர் எழுதுவது போன்ற முறையில் காணப்பட்டாலும், தந்தை பெரியார் அவர்களால் எழுதப்பட்டதேயாகும்.)

மலையாளத்தில் குருவாயூர் கோவில் பிரவேசக் கிளர்ச்சி திரு. கேளப்பன் நாயரால் சத்தியாக்கிரகம் முதலியவை நடத்தப்பட்டது. அதை காந்தியார் தடுத்து நிறுத்தி விட்டார். அதனால் கேளப்பன் அவர்கள் காங்கிரசிலிருந்து கூட சில நாள் விலகி கிளர்ச்சி செய்தார் என்பது ஞாபகம்.

இதற்குள் பெரியார் காங்கிரசிலிருந்து விலகிவிட நேர்ந்தது. பிறகு கோவில் பிரவேசக் கிளர்ச்சி பலமாக நடந்தது.

வைக்கம் சத்தியாக்கிரகப் பிரசாரத்தின் பயனாயும் பெரியார் மீது பார்ப்பனர்களுக்குப் பலமான அதிருப்தியும் துவேஷமும் ஏற்படலாயிற்று, இது ஓர் அளவுக்கு உட்பகையை உண்டாக்கிற்று.

**குருகுலப் போர் : ஆரிய - திராவிடர் போராட்டம்**

மற்றும் வி.வி.எஸ். அய்யரால் ஏற்படுத்தப்பட்ட வர்ணாசிரமப் பிரச்சார பித்தலாட்ட ஸ்தாபனமான ‘குரு குல’ விஷயம் தமிழ்நாடு காங்கிரசிற்குள் வெளிப்படையாகவே பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் பிளவை உண்டாக்கிவிட்டது.

அதன் பலனாய் முடிவில் ஜாதி ஒழிப்பு என்பதைப் பற்றிப் பேசினால் அதற்குப் பேர் பிராமண துவேஷம் - ஒரு வகுப்பார் மீது 'துவேஷப் பிரசாரம்' என்பதாக அரசியல் பிழைப்புகாரர்களுக்கும் பல பார்ப்பனப் பத்திரிகைகளுக்கும் மந்திரமாக ஆக்கப்பட்டுவிட்டது. இதன் பயனாக பெரியாருக்கு காங்கிரசில் இருக்க இஷ்டமில்லாமல் போய்விட்டது. பெரியார் காங்கிரசிலிருந்து விலகியவுடன் கடைசியாக காங்கிரசின் நிலையானது ஜாதிப் பிரிவைப் பற்றி பேசினால் அது பிராமண துவேஷம் என்றும், ஜாதியால் ஜாதி அணியில் பிற்பட்டு பின்னணியில் இருப்பவர்களுக்கு உரிமை கேட்டால் அது வகுப்புவாதம் என்றும் காங்கிரஸ் கொள்கையாக ஆக்கப்பட்டுவிட்டது.

இதை எதிர்பார்த்தே இந்த இரண்டு காரியங்களும் காங்கிரசில் இருந்தால் நம் காரியம் எதுவும் நடவாது என்று கருதி இந்த இரண்டு பிரச்சினை மீதே பெரியார் காங்கிரசிலிருந்து (காஞ்சி மாநாட்டில்) தாமாகவே வெளியேறிவிட்டார்.

இதன் பயனாய் தமிழ் நாட்டில் அரசியலிலும் சமுதாயத்துறையிலும் ஒரு பெரிய திருப்பத்தை உண்டாக்கிவிட்டது.

**பெரியாருக்குப் பின் காங்கிரஸ்**

பெரியார் காங்கிரசிலிருந்து விலகுகிறவரையில் காங்கிரசில் பெரிய மனிதர்கள், நாட்டில் செல்வாக்குள்ளவர்கள், செல்வவான்கள், மதிப்புள்ளவர்கள் முதலியவர்களுக்குதான் தலைமைப் பதவியும் முக்கியத்துவமும் இருந்து வந்தது.

பெரியார் காங்கிரசை விட்டு விலகியவுடன் காங்கிரசுப் பார்ப்பனரல்லாதவர்களில் தக்க ஆள் இல்லாமற்போய் (தமிழர்களில்) பச்சகானாக்கள் (சின்ன பையன்கள்) அன்னக் காவடிகள் (அதாவது 'நாளைய' சாப்பாட்டுக்கு வழியில்லாதிருந்தவர்கள்) மக்களால் சமுதாய விலக்கம் செய்து விளம்பரம் பெற்ற காலிகள், கூலிக்கு ஆக எதுவும் செய்பவர்கள், கொள்கையோ, நாணயமோ ஒழுக்கமோ இல்லாமல் பதவி எலும்புத் துண்டுகளுக்காக எதுவும் செய்யத் தயாராயிருந்தவர்கள் இருப்பவர்கள் முதலியவர்களே காங்கிரசுக்குப் பிரமுகர்' களாக 'தலைவர்'களாக - 'காரிய தரிசி'களாக - ஆக்கப்பட

வேண்டிய அவசியம் நம் பார்ப்பனர்களுக்கு வந்து விட்டது. அது மாத்திரமல்லாமல் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து நாணயக் குறைவுக்காகவும், துரோகத்துக்காகவும், நீக்கப்பட்டவர்கள் அங்கிருந்து சுயநல ஏமாற்றமடைந்தவர்கள் முதலியோர்கள் காங்கிரஸ் பார்ப்பனர்களால் வலைபோட்டுப் பிடிக்கப்பட்டு காங்கிரசினால் பதவிகொடுக்கப்பட்டு அடிமைகளாக்கிக் கொள்ளப்பட்டார்கள்.

இந்த மாதிரி ஆள்களுக்குக் ‘காங்கிரஸ் திட்ட’மென்னவென்றால், ‘தமிழருக்கு’ என்றுஉரிமைகேட்கக்கூடாது.தனதுஅடிமைத்தனத்தையும் கூலித் தனத்தையும் சொல்லித்தான் கூலி கேட்கவேண்டும்‘ ஜாதி வகுப்புபற்றிப்பேசவே கூடாது; பேசியதாக செய்தியே வெளியில் வரக்கூடாது. பெரியாரையும் பெரியார் இயக்கத்தையும் காலித்தனமாய், லண்டத்தனமாய் வைவதிலும் தாக்குவதிலும் சிறிதும் பின்வாங்கக்கூடாது என்பதான இப்படிப்பட்ட காரியங்களுக்குத் தயாராய் இருக்கும் நிபந்தனை இல்லாத அடிமைகளையே சேர்த்துக் கொள்வதுமாக ஆகிவிட்டது.

**பெரியார் தொண்டால் வீழ்ந்து விட்ட ஆரிய ஆதிக்கம்**

‘இந்த நிலை பெரியாருக்கு உணர்ச்சியையும் ஊக்கத்தையும் கொடுத்தது. இந்தக் காரணங்களே பெரியாரை ஜாதி, மதம், பார்ப்பனர் நடத்தை ஆகியவைபற்றிய வண்டவாளங்களைத் தாராளமாய் பிரச்சாரம் செய்ய வசதி அளித்தது. பெரியார் காங்கிரசைவிட்டு விலகின இந்த 33 வருடங்களில் தமிழ்நாடு மாத்திரமல்லாமல் தென் இந்தியா முழுவதிலும் திராவிட நாடு முழுவதிலும் பார்ப்பனர்களின் அவர்களது மத,ஜாதி ஆணவத்திற்கும் மதிப்பில்லாமற் போனதுடன், பார்ப்பன ஆதிக்கம் உத்தியோகத்துறையிலும், படிப்புத் துறையிலும், மத ஆதிக்கத் துறையிலும் உள்ள ஏகபோகம் மணல்வீடு சரிவது போல் சரிய ஆரம்பித்துவிட்டது.

இதன் காரணமாகவே பார்ப்பனர்கள் இந்தத் தன்மைகளைக் காந்தியாரின் துரோகத் தன்மையைக் கொண்டு இவைகளுக்குப் பாதுகாப்பு செய்ய முன்வந்து அரசியல் சட்டத்தின் மூலம் இவைகளுக்குப் பாதுகாப்பு செய்து கொண்டார்கள்.

நிற்க,

## கோவில் பிரவேசக் கிளர்ச்சி

வைக்கம் சத்தியாக்கிரக வெற்றிக்குப் பிறகு பெரியார் காங்கிரசிலிருந்து விலகி வந்து விட்டபோதிலும், அந்த சத்தியாக்கிரக வெற்றியை அனுசரித்து கோவில் பிரவேசக் கிளர்ச்சியைத் தொடர்ந்து பலமாகச் செய்து வந்து கோவில் பிரவேச பிரச்சினையை வைத்தே திருவாங்கூர் கொச்சி இராஜ்யத்தில் நாத்திகப் பிரச்சாரமும் மத ஒழிப்புப் பிரச்சாரமும் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து செய்து இதற்காக கொச்சியில் மகாநாடு கூட்டி “ஈழவ சமுதாய மக்களும் மற்றும் உடனடியாக இந்து மதத்தை விட்டு விலகி இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்து விட வேண்டியது” என்பதான தீர்மானம் ஒன்றை பெரியார் தலைமையில் நடந்த அந்த மாநாட்டில் இந்த தீர்மானம் வருகிறது என்று தெரிந்து ஆரிய சமாஜம், சீக்கிய மதம், கிறித்துவ மதம் இஸ்லாம் மதம், ஆகிய மதங்களின் தலைவர்களும் பஞ்சாப், டில்லி, முதலிய இடங்களில் இருந்த பிரதிநிதிகளும் வந்து ஈழவ சமுதாயத்தில் உள்ள பல செல்வாக்குள்ள ஆள்களைப் பலவழிகளில் பிடித்துத் தங்கள் தங்கள் மதத்தில் சேரவேண்டியது என்பதாக திருத்தங்கள் கொண்டுவரச் செய்து விட்டார்கள். ஒவ்வொரு மதக்காரர்களும் தங்கள் தங்கள் ‘மதத்தில் ஜாதி இல்லை’ என்று எடுத்துக் காட்டிப் பேசினார்கள்.

என்றாலும் அந்த மாநாட்டில் இஸ்லாம் மதத்திற்கே பெரிய ஆதரவு இருந்தது.

இதைப் பார்த்த கிறிஸ்துவ பாதிரிகள் செல்வாக்குள்ள ஈழவ சமுதாயப் பத்திராதி மக்கள் இரண்டொருவரைத் தங்கள் வசமாக்கிக் கொண்டு கலவரத்திற்கு இடம் உண்டாக்கி விட்டார்கள்.

இதன் மீது மாநாட்டுத் தலைமை வகித்த பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் மாநாடு கலையக் கூடாதே என்று கருதி அத்தீர்மானத்தை ஒரு வகையாய் திருத்தி ஏககருத்தாக நிறைவேறச் செய்தார்.

## இந்து மதத்தை விட்டு விலகுங்கள்!

அத்தீர்மானமாவது : “ஈழவ சமுதாய மக்கள் இந்து மதத்தைவிட்டு விலகிவிடுவது என்பதாக இம்மாநாடு ஏகமனதாய் முடிவு செய்கிறது.

விலகிய பின்பு எந்த மதத்தில் சேருவது என்பது அவரவர்களுடைய சொந்த இஷ்டத்தைப் பொறுத்ததாகும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

என்கின்ற தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறிற்று.

இத்தீர்மானத்தை ஆமோதித்த ஒரு பெண் ‘தன் சொந்தக் கருத்து கடவுள் மதம் வேண்டாம் என்பதாகும். ஆனால், சமுதாய ஒற்றுமையை முன்னிட்டு இதை ஆமோதிக்கிறேன்’ என்று கூறினார்.

இத்தீர்மானம் நிறைவேறிய உடன் அந்த இடத்திலேயே சுமார் 50 பேர்கள் வரை இஸ்லாமியத்தில் சேர்ந்து துருக்கித் தொப்பியைப் போட்டுக் கூட்டத்திற்கு வந்து பேச ஆரம்பித்துவிட்டார்கள். அப்போது அவர்களது தலைவர் டாக்டர் கமால்பாட்சா என்ற பெயரை வைத்துக் கொண்ட ஒரு ஹோமியோபதி டாக்டர், அவர் கொச்சி சுயமரியாதை இயக்கத் தலைவர், அங்கு ஒரு டிஸ்பென்சரி வைத்து நடத்துபவர், சுமார் 30 வயதுள்ள வாலிபர். அதோடு மாத்திரமல்லாமல் அவர் உடனே இஸ்லாம் மதப்பிரச்சாரம் செய்து, மக்களை மதமாற்றம் செய்ய ஆரம்பித்துவிட்டார். அவர் ஒரு நல்ல பேச்சுக்காரர்.

**இஸ்லாம் ஆனார்கள்**

இஸ்லாம் என்றால் “அல்லாவே கடவுள், முகமது நபியே கடவுள் - தூதர், ஜாதி இல்லை, கடவுளுக்கு உருவம் இல்லை”.

ஆகிய இந்த நான்கு விஷயங்களை ஒப்புக் கொள்வதுதான் என்பதாக இஸ்லாம் குருமார்களால் அக்கூட்டத்தில் சொல்லச் செய்து அதையே மந்திரமாகக் கொண்டு கிராமம் கிராமமாய்ச் சுற்றி தினம் 10 பேரையாவது இஸ்லாத்தில் சேர்க்காமல் சாப்பிடுவதில்லை என்கின்ற சபதம் எடுத்து கொண்டார்.

இவரைக் கூப்பிட திருவாங்கூரில் இருந்து ஆள்கள் வந்து அழைத்துப்போய் அங்கு ஆலப்புழையில் 200, 300 பேர்கள் மதம் மாற்றப்பட்டார்கள்.

அப்படி மாற்றமடைந்தவர்களில் சிலர் ஆலப்புழையில் ஒரு நாயர் கடையில் போய் மேல்படியில் ஏறி நின்று சாமான் வாங்க ஆரம்பித்தனர். அந்தக் கடைக்கார நாயர் இவன் கீழ்ஜாதியான் என்பதை அறிந்து உடனே ஒரு தடியை எடுத்து அவன் மண்டையில் ஓங்கி அடித்து

கீழே விழும் படிச் செய்து விட்டான். உடனே அங்குள்ள முஸ்லிம்கள் அடிப்பட்டவன் முஸ்லிம் என்பதாக உணர்ந்து கூட்டமாகவந்து அந்த நாயரை அடித்து உயிர் போகும்படிச் செய்து விட்டார்கள்.

இது பிறகு இந்து - முஸ்லிம் கலகமாகி 2,3 பேர் சாகடிக்கப்பட்டுவிட்டார்கள். அப்போது சர் சி.பி.இராமசாமி அய்யர் திருவாங்கூர் திவானாக இருந்தார். அவருக்கு இந்த சங்கதி எட்டினது. அவர் அந்தக் கலகத்தை 'தொழிலாளர் கலகம்' என்று பெயர் கொடுத்து பத்திரிகையில் போடச் செய்து விட்டு உடனடியாக அங்கு நடந்து கொண்டிருந்த இராஜாவின் பிறந்த நாள் விழா அறிக்கையாக ஓர் அறிக்கையைத் தயார் செய்து, அதன் மூலம் திருவாங்கூர் இராஜ்யத்திலுள்ள கோவில், குளம், மடம், சத்திரம் முதலிய எல்லா இந்துக்களின் பொதுஸ்தாபன இடங்களிலும் திருவாங்கூர் இராஜ்யத்தில் உள்ள எல்லா இந்துக்களுக்கும் சம உரிமை உண்டு' என்ற அரசு விளம்பரம் செய்து கலவரத்தையும் மதம் மாறுதலையும் நிறுத்திவிட்டார்.

**இருட்டடிப்புகள்**

ஆகவே, திருவாங்கூர் தெருப் பிரவேசத்திற்கும் கோவில் பிரவேசத்திற்கும் காரணம் அடிப்படை முயற்சி இதுவேயாகும். ஆனால் இந்த விஷயங்கள் எப்படி ஏற்பட்டன என்பது 'குடிஅரசு' 'திராவிடன்' மற்றும் திருவாங்கூர் கொச்சியில் நடந்த சில பத்திரிகைகள்! அல்லாமல் மற்றும் திருவாங்கூர் சட்டசபை நடவடிக்கை மூலம் ஓர் அளவு அல்லாமல் மற்றவர்கள் இன்று அறிந்து இருக்கவோ அறிந்து கொள்ளவோ முடியாமலே போய்விடும்படி பார்ப்பனர்கள் செய்து மறைத்துவிட்டார்கள்.

அவ்வளவு தூரம் போவானேன்? வைக்கம் சத்தியாக்கிரக சரித்திரம் என்பதில் அதற்குப் பலவழிகளிலும் கேடு செய்த காந்தி பேர்தான் இருக்குமே ஒழிய, பெரியாரைப் பற்றியோ மற்றும் தமிழ்நாட்டு தொண்டர்கள் தாய்மார்களைப் பற்றியோ ஒரு சொல் கூட அதில் காணப்பட முடியாதபடி செய்திருக்கிறார்கள் இந்தப் பார்ப்பனர்கள்!

**தமிழ்நாட்டில் தீண்டாமை ஒழிய காரணம்**

மற்றும் திருவாங்கூரில் இவ்வளவு துணிச்சலான காரியங்கள் நடந்ததற்குக் காரணம் அங்கு பார்ப்பன ஆதிக்கம் பார்ப்பனர் எதிர்ப்பு

இல்லை என்பதுதான். இங்கு நடவாமல் இருப்பதற்குக் காரணம் பார்ப்பனர்களும் பார்ப்பன ஆதிக்கமும் வெள்ளையன் ஆட்சி ஒழிந்ததும் மத்திய ஆட்சி ஏற்பட்டதும் அதற்கும் பார்ப்பனர்களே மந்திரியாகவும் தலைவராகவும் ஏற்பட்டதுந்தானே ஒழிய, வேறில்லை.

இன்னும் ஒன்று சொல்லுவோம். அதாவது தமிழ்நாட்டில் தீண்டாமை என்பது ஒழிக்கப்பட்டது' என்பதும், கோவில் பிரவேசம் 'அனுமதிக்கப்பட்டது' என்பதும் மத்திய ஆட்சி ஏற்பட்ட பிறகோ, ஜனநாயகம் ஏற்பட்டபிறகோ அல்ல என்பதை கல்லில் எழுதிவைப்போம்.

வெள்ளையன் ஆட்சியில், அதுவும் சைமன் கமிஷனுக்கு சுயமரியாதை இயக்கத்தார் கொடுத்த வரவேற்புப் பத்திரத்தாலும், சமர்ப்பித்த விண்ணப்பத்தாலும், அதைப் பார்த்து, 'இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்தால் இந்தப் பார்ப்பனர் அட்டூழியத்திற்கும், கீழ் ஜாதி ஆக்கப்பட்ட மக்களின் பரிதாபகரமான நிலைக்கும் என்ன பரிகாரம்' என்று பார்லிமெண்டில் நம்மிடம் அனுதாபமுள்ள சில வெள்ளையர் கேட்டு விளக்கம் பெற்றதாலும், அதைப் பார்த்து இங்கு மதத்திற்குக் கேடில்லாமல், செய்த சில முயற்சிகளாலும் ஏற்பட்டது என்பதைத் தவிர, வேறு காரணம் எதை யார் சொல்லமுடியும்?

இதற்குப் பிறகும் கூட காந்தியார் கோவில் பிரவேசத்தைப் பற்றிப் பேசும்போது அதுவும் சுயமரியாதைப் பிரச்சார நிர்ப்பந்தம் காரணமாய் கோவில் பிரவேசத்தை அனுமதிக்க வேண்டி வந்தபோது,

"கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் செல்வதில் எந்தக் கோவிலிலும் சூத்திரர்கள் எதுவரையில் செல்ல முடியுமோ அந்த அளவுவரையில்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் (அரிஜனங்கள்) செல்லலாம்."

என்று சொல்லி அனுமதித்ததால் அந்த அளவுக்குத்தான் நாடார் சமுதாயம் உள்பட கோவில் பிரவேசமில்லாத எல்லா மக்களுக்கும் அனுமதி கிடைத்தது.

**காந்தியாரின் தந்திரம்**

அதன்மீது பெரியார் ஆத்திரப்பட்டு, "தீண்டாமை விலக்கு என்பதும், கோவில் பிரவேசம் என்பதும் சூத்திரனைப் பறையனோடு

சேர்ப்பதுதானா? பறையன் கீழ்ஜாதி என்பது மாற்றப்படவில்லையானால் அதற்காக சூத்திரனைப் பறையனோடு சேர்ப்பதா? இந்த அனுமதியானது இதுவரை நடுஜாதியாக இருந்த சூத்திரர் என்பவர்கள் இப்போது கீழ்ஜாதியாகவே ஆக்கப்பட்டுவிட்டார்கள். ஆனதால் இதை நாம் அனுமதிக்கக்கூடாது'' என்று வேகமாகப் பிரச்சாரம் செய்து வந்தார். இதன்மீது காந்தியார் மக்களை ஏமாற்ற வேறு ஒரு தந்திரம் செய்தார்.

அதாவது,

‘‘இதுவரையில் இதற்கு முன் பிராமணர்களுக்கு என்று மாத்திரம் எந்த இடம் இருந்து வந்ததோ அந்த இடத்திற்குப் பிராமணர்களும் செல்லக் கூடாது; மற்ற எல்லா ஜாதியாருக்கும் அனுமதிக்கப்பட்டிருந்த இடம் வரையிலுமேதான் பிராமணனும் செல்லலாம்'' என்று அபிப்பிராயம் கூறி அந்தப்படியே பல கோவில்களில் மூங்கில் கழியைக் கொண்டு தடுப்புகட்டி தடை செய்யப்பட்டது.

## பார்ப்பானுக்கு மட்டுமுள்ள தனி உரிமையா?

இதுபற்றி மதுரைக் கோவிலுக்குள் பெரியார் சில தோழர்களுடன் சென்று தடுக்கப்பட்ட இடத்தில் பல பார்ப்பனர்களும் பார்ப்பனத்திகளும் நிற்பதைக் கண்டு அங்கேயே அது பற்றிக் கிளர்ச்சி செய்தார்; பத்திரிகையில் எழுதினார். என்றாலும், அர்ச்சகர் என்ற பெயரில் இன்றும் பார்ப்பனர்கள் பார்ப்பனத்திகளும் உள் மண்டபத்தில் இருந்துதான் வணங்குகிறார்கள். இது எப்படியோ இருந்தாலும் பார்ப்பனன்தான் கர்ப்பக கிரகத்திற்குள் சிலை இருக்கும் இடத்திற்குள் போகலாம்; மற்றபடி சூத்திரனோ, பஞ்சமனோ என்பவர்கள் கர்ப்பக கிரகத்திற்குள் போகக்கூடாது என்கின்ற ஜாதிமுறை, ஜாதிபேத முறை இன்றும்தான் இருந்து வருகிறது.

இது விஷயத்தில் காந்தியாருடையவும் பார்ப்பனர்களுடையவும் சூழ்ச்சி எல்லாம்.

## பார்ப்பனர்களின் கவலை!

ஜாதி ஒழிக்கப்படுவதால், பார்ப்பனர்களுடைய தூய்மை கெட்டுவிடுகிறது என்பதோ, தங்கள் நிலைமை அசுத்தமாக்கப்பட்டு

விடுகிறது என்பதோ அல்லவே அல்ல. மற்றென்னவென்றால், தங்களுக்கு பார்ப்பனர்களுக்கு இருந்துவரும் உயர்வும் தனி உரிமைகளும், பாடுபடாமல் ஊரார் உழைப்பில் அனுபவிக்கும் சுகபோகமும், உயர்வாழ்வும், ஏகபோகமும் அழிந்துபோகுமே என்கின்ற கவலைதான்.

இதை உத்தேசித்தேதான் ஜாதி என்பதில் எவ்வித தனிக்கடமையும் இல்லாமல் உயர்வு என்கின்ற உரிமையை மாத்திரம் அனுபவிக்கும்படி சட்டத்தால் பாதுகாப்பு ஏற்படுத்திக் கொண்டார்கள் இதற்குக் காரணம் காந்தியார் செய்த மோசடியும் சூழ்ச்சியும் ஆன மாபெரும் துரோகம் தான்.

**சட்டம் இடம் கொடுக்க வில்லையாம்**

இல்லாவிட்டால் ஜாதி ஒழிய வேண்டும் என்று நாம் இவ்வளவு தீவிரமான கிளர்ச்சி செய்து 4000 பேர் சிறை சென்று கொடுமையை அனுமதித்துக் கொண்டிருக்கும் போதும் தினம் ஒருவராகச் சாகும் நிலையில் இருக்கும்போதும்

“ஜாதி ஒழிக்கச் சட்டம் இடம் கொடுக்கவில்லையே என்று அரசாங்கம் சொல்ல முடியுமா?

அது மாத்திரமா?

சட்டம் செய்வதால் ஜாதியை ஒழிக்கமுடியாது என்றால் மற்றப்படி எப்படி ஜாதியை ஒழிக்கலாம் என்பதற்கு ஒரு கமிட்டி ஏற்படுத்துங்கள் என்று பார்லிமெண்டில் எல்லா மெம்பர்களும் ஏகோபித்து கேட்கிற காலத்தில் கமிட்டி போடுவதால் ஜாதி ஒழிக்க வழி கண்டுபிடித்துவிட முடியாது; அதற்கு வேண்டியதை நாங்களே -சர்க்காரே செய்து கொள்கிறோம்‘ என்று சொல்லி ஏமாற்ற முடியுமா?

**‘பிராமணரின்‘ மூலாதார உரிமையா?**

மற்றும், ‘சர்க்கார் ஆதாரப்பத்திரங்களில், வேலைக்கு, பள்ளிக்கூடத்தில் சேர்வதற்குப் போடும் விண்ணப்பத்தில் ஜாதிப்பெயர் போடக்கூடாது’ என்று உத்தரவு போடுவது மாத்திரம் அரசியல் சுதந்திரத்தில் மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் மூலாதார உரிமைக்கு விரோதமல்ல. ஆனால், மக்கள் மடமையை சுயமரியாதைக்

கேட்டை அதிகரித்து வளர்க்கும்படியாக அதாவது ஒருவனை மேல்ஜாதியான் என்று எண்ணியே அவ்வுணவுச் சாலைக்குள் நுழையும்படி செய்வதற்காகவே பயன்பட வலியுறுத்தும் உண்டி சாலை பெயர்ப்பலகையில் 'பிராமணன்' என்று போடுவதை அதுவும் அரசாங்கத்தார் அனுமதிக்கும் சீட்டில் குறிப்பிடுவதை நிறுத்தினால் அது மூலாதார உரிமைக்குக் கேடு செய்ததாகும்' என்றால் இதன் கருத்து என்ன? வெள்ளையன் ஆட்சி இருந்தால் இந்த நேர்மை வியாக்கியானம் எவராலாவது செய்ய முடியுமா?

வெள்ளையன் ஆட்சி காலத்தில் சர்க்கார் லைசென்சு, கண்டிராக்ட் கொடுத்து நடத்திய ரயில்வே ஓட்டல்களில் 'பிராமணன்' என்கின்ற ஜாதிப் பெயர் பெரியார் சொன்னார் உடனே சென்னை அரசாங்க கவர்னர் பெரியாரை ஒரு மாத வாய்தா கேட்டுக் கொண்டு அதற்குள்ளாக அவருக்கு அதிகாரமில்லாத அந்தக் காரியத்தைச் செய்து முடித்துவிட்டார். அப்படிப்பட்ட அந்த வெள்ளையனை வெளியே போ என்று சொன்ன சமூகத் துரோகிகள் இன்று 'தேச பக்தர்கள்' ஆகிவிட்டார்கள். இப்படிப்பட்ட கொடுங்கோல் கொடுமையாளர்களான இன்றைய அந்நியனை வெளியேறு என்று சொல்லுகிறவர்கள்தான் இன்று துரோகிகளாக இந்தப் பச்சைத் துரோகிகளுக்குக் காணப்படுகிறார்கள். இதற்கு ஒப்பு எதைச் சொல்வது? பார்ப்பனர்களை ஒழிக்கப்பாடுபட்ட இரணியனும் இராவணனும் இராட்சதர்கள் ஆகிவிட்டார்கள்? இவர்களை காட்டிக் கொடுத்து சூழ்ச்சி செய்து கொன்ற பிரகலாதனும் விபீஷணனும் ஆழ்வார்கள் - சிரஞ்சீவிகளாக ஆகிவிட்டார்கள்' என்கின்ற கதையைத் தானே சொல்ல வேண்டும்?

நிற்க, அறிவும் யோக்கியப் பொறுப்பும் உள்ளவர்கள் ஒரு காரியம் செய்ய வேண்டியது அவசியம்தானா? யோக்கியமானதுதானா? இதைப் பெருவாரியான மக்கள் விரும்புகிறார்களா - இல்லையா என்பவைகளைத்தானே ஜனநாயக முறைக்காரர்கள்' சிந்திக்க வேண்டும்? அதைவிட்டு விட்டு இது சட்டப்படி செய்ய முடியாதது என்று சொல்லுவது பொறுப்புள்ளவர்களோ அல்லது அறிவுள்ள மக்களின் ஜனப்பிரதிநிதிகளோ சொல்லும் சமாதானமாகுமா?

ஆட்சி என்பது அவரவர்கள் சொந்த அப்பன் வீட்டுச் சொத்து உரிமையா? அவசியமான யோக்கியமான பெருவாரி மக்களுடைய சுயமரியாதைக்குக் கேடான, ஒரு தன்மையை திருத்த வேண்டியதான ஒரு காரியத்தைச் செய்வதற்கு சட்டம் குறுக்கே இருந்தால் உடனே சட்டத்தைச் செய்வதற்கு சட்டம் குறுக்கே இருந்தால் உடனே சட்டத்தைத் திருத்த வேண்டியது தானே நேர்மையும் யோக்கியமான கடமையும் ஆகும்.

அதைவிட்டு விட்டு விஷயத்தின் முக்கியத்துவம் தெரிந்தும் விஷயத்தின் பயனாய் தாங்களும் கீழ் மக்களாய் இருந்து இழிவை அனுபவித்துக் கொண்டும் இருக்கிற ஆட்சியாளர்கள் சட்டம் இடங்கொடுக்கவில்லை செய்ய முடியாது' என்றால் பிறகு இதற்கு நிவர்த்திதான் என்ன இருக்கிறது? எங்கே இருக்கிறது?

எந்தச் சட்டம் ஜாதி ஒழிப்புக்கு குறுக்கே எருமை மாடு மாதிரி படுத்து இருக்கிறதோ அந்தச் சட்டத்தை எரித்தால் 3 வருடம் கடினகாவல், ரூ.1000 அபராதம் என்று புது சட்டம் செய்ய வேண்டிய அவசரம் 8 நாளில் ஏற்பட்டுவிட்ட போது இந்திய தேசத்து 25 கோடி மக்களின் பிரதி நிதிகளான 500 பார்லிமெண்டு மெம்பர்களும்! ஜாதி ஒழிக்க சட்டம் செய்ய வேண்டும் என்று ஏகமனதாக விரும்பிய பிறகும், 3கோடி தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய 197 இந்நாட்டு சட்ட சபை மெம்பர்களும் ஏகமனதாய் விரும்பிய காரியத்திற்கும் சட்டம் செய்வதால் பயனில்லை, சட்டம் செய்யவும் முடியாது'.

என்று அதுவும் சட்டம் செய்ய வேண்டும் என்று கிளர்ச்சி செய்ததற்கு ஆகவே 4000 மக்களை சிறையில் அடைத்துக் கொடுமை செய்து கொண்டு தினம் ஒருவராக சிலரைச் சாகடித்துக் கொண்டும் இருக்கிற சமயத்தில் சொல்லுவது என்றால் சட்டசபை மெம்பர்கள் எல்லோரும் மனிதர்கள் பிரதிநிதிகள் என்கின்ற எண்ணமா? என்று கேட்க மனம் துடிக்கிறது.

இதிலிருந்து சட்டசபையும் மந்திரி சபையும், நாட்டு துரோகிகளுக்கு மனித சமுதாய துரோகிகளுக்கு என்று ஒதுக்கிவைத்திருக்கும்' ஸ்தானங்களாகவும் பதவிகளாகவும் தானே கருத வேண்டி இருக்கிறது?

இந்த ‘தேசபக்தர்கள்’ வெள்ளையன் ஆட்சியை எந்த விதத்தில் குற்றம் சொல்ல முடியும்? அந்த ஆட்சி போய் விட்டதைப்பற்றி எந்த விதத்தில் மகிழ்ச்சி அடைய முடியும்?

அந்த ஆட்சி இன்று இருந்தால் இந்த நாட்டில் இன்று பறையர்களும் (அரிஜனங்களும்), சூத்திரர்களும், - இருக்க முடியுமா? இந்தப் பார்ப்பனர்களாவது இருக்க முடியுமா? நாடுதான் ஆகட்டும் ‘இந்த கைராட்டினம்’, ‘கை குத்தல் அரிசி’ ‘ஆதாரக் கல்வி’ வளர்க்கும் நிலையில் இருந்து வர முடியுமா?

அவ்வளவுக்கு ஏன்? ஜாதி ஒழிக்கப்பட வேண்டும், ஜாதி காப்பாற்றப்படும் சட்டம் அழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதற்காக நாலாயிரம் பேர் சிறையில் கொடுமைக்கு ஆளாகி, தினம் ஒருவரைச் சாகடித்துக் கொண்டு இருக்கும் சர்க்கார் உயிரோடு வாழ முடியுமா? வெள்ளையன் ஆட்சி போனதால்,

கொடுமை! கொடுமை!!

கொள்ளை! கொள்ளை!!

என்று தானே சொல்ல முடிகிறது?

■

# “வைக்கம் பொன் விழா”

முதன் முதலாக தீண்டாமையை எதிர்த்து தந்தை பெரியார் அவர்கள் நடத்திய வைக்கம் போராட்டத்தின் பொன் விழா நிகழ்ச்சி நேற்று வைக்கத்தில் துவங்கியது. பிரதமர் இந்திரா காந்தி துவக்கி வைத்து உரை நிகழ்த்தினார். 20.04.1975ஆம் தேதி வரை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

**அன்னையார்**

ஏப்ரல் 26ஆம் தேதி நடக்க இருக்கும் பெண்கள் மாநாட்டை கழகத் தலைவர் அன்னை மணியம்மையார் துவக்கி வைத்து உரைநிகழ்த்துகிறார்கள். கேரள மாநிலம் கொச்சியிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் வைக்கம் ஊர் இருக்கிறது. பொன் விழாவை யொட்டி மலர் ஒன்று வெளியிடப்படுகிறது. பொன் விழா நினைவாக ரூ. 10 லட்சம் செலவில் ஆடிட்டோரியம், மியூசியம் ஆகியவை அமைக்கப்பட இருக்கின்றன. இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வைக்கம் போராட்ட பொன் விழாக் கமிட்டி செய்துள்ளது. கேரள உள்துறை அமைச்சர் கருணாகரன் இந்தக் கமிட்டியின் தலைவராவார், வைக்கம் நகராட்சித் தலைவர் நரசிம்ம நாயக் நிருவாகத் தலைவராவார்.

**தந்தைக்குச் சிறப்பு**

வைக்கம் போராட்டத்தை முன்னின்று நடத்திய வைக்கம் வீரர் தந்தை பெரியாருக்கு இந்த விழாவில் சிறப்பு செய்யப்படுகிறது. மற்றும் கே.பி. கேசவமேனன் குரூர் என். நம்பூதிரிபாத், ராஜ கோபாலாச்சாரியார், மாஸ்டர் தாராசிங் ஆகியோருக்கும் சிறப்பு செய்யப்படுகிறது. வைக்கம் போரில் ஈடுபட்ட கே. பி. கேசவமேனன் தமது 89ஆவது வயதில்

கோழிக் கோட்டில் நோய்வாய்ப்பட்டு இருக்கிறார். பொன் விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்க அவரால் செல்ல முடியவில்லை.

### அய்யாவை நினைவு கூர்ந்தார்

யு.என்.அய். நிருபர் அவரைப் பேட்டி காணச் சென்ற போது தந்தை பெரியார் அவர்களைப் பற்றி - குறிப்பாக தந்தை பெரியார் அவர்களுடன் திருவனந்தபுரம் சிறையில் தான் இருந்தது பற்றி அவர் நினைவு கூர்ந்து குறிப்பிட்டு, பெருமிதம் அடைந்தார். கேசவ மேனன் முன்பு கேரளத்தில் அமைச்சராக இருந்தவர் 'மாத்ருபூமி' ஏட்டின் ஆசிரியராகவும் விளங்கினார்.

### கேரள அரசு முடிவு


வைக்கம் போராட்டத்தின் நினைவுச் சின்னத்தை அமைக்க 80 சென்ட் நிலத்தையும், ரூ. 2 லட்சம் பணத்தையும் அளிக்க கேரள அரசு முடிவு செய்துள்ளது.

**21.04.1975 'விடுதலை'யின் செய்தி**

### பிரதமரின் இரட்டை வேடம்

கேரளத்தில், வைக்கத்தில் 20.04.1975 அன்று நடந்த, வைக்கம் போராட்ட பொன்விழாவைத் துவக்கி வைத்துப் பேசிய பிரதமர் திருமதி இந்திராகாந்தி ''நமது நாட்டில் மூட நம்பிக்கைகளும் காட்டுமிராண்டித் தனமான நடத்தைகளும் சமூகத்தில் பல பகுதிகளில் இன்னமும் இருக்கின்றன " அவைகளை எதிர்த்து வைக்கத்தில் பலர் போராடினர் என்று பொதுவில்தான் பேசியிருக்கின்றாரே தவிர, வைக்கம் போராட்டத்தின் பிரதான தலைவரான தந்தை பெரியார் அவர்களது தொண்டினைப்பற்றி ஒருவார்த்தைக்கூடக் கூறியதாகத் தெரியவில்லை.

அவரது பேச்சு வெளிவந்துள்ளது எந்த இங்கிலீஷ் தினசரியிலும் அதுபற்றி ஒரு வார்த்தைகூட காணப்படவில்லை. வரலாற்றை பார்ப்பனர் எப்படியெல்லாம் இருட்டடிக்கின்றனர் என்பதற்கு இது ஒரு முக்கியமான எடுத்துக்காட்டாகும். டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இம்முறையை அருமையான ஓர் இங்கிலீஷ் சொற்றொடர் மூலம் விளக்கினார் "Conspiracy of silence" மவுனத்தின் மூலம் இருட்டடிக்கும் சதித் திட்டம் என்பதே இது.




வைக்கம் பொன்விழா மாநாட்டில் பிரதமர் இந்திரா காந்தி (20.04.1975)






கே.பி.கேசவ மேனன்



நாராயண குரு



ம.கே.மாசுவன்

தந்தை பெரியார் அவர்களது தொண்டு இல்லாவிட்டால் வைக்கம் தெருக்களில் "கீழ்ஜாதி" மனிதர்கள் நடமாட முடியுமா? -

"சில மனிதர்களது நிழல் பட்டாலே தீட்டாகி விடுவார்கள் என்று மனிதர்களில் ஒரு பிரிவினரை ஒதுக்கிவிடுவதைவிட கொடுமை வாய்ந்த காட்டுமிராண்டித்தனம் எதுவும் இருக்கவே முடியாது" - இவ்வாறு பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அங்கே "முழங்கியிருக்கிறார்".

இதைக் கேட்கும் எவருக்கும் இவர் பெரிய புரட்சிக்காரர் என்று எண்ணிடத் தோன்றும்!

ஆனால், நடைமுறையில் இவரோ, இவரது ஆதிக்கத்தின் கீழ் உள்ள ஆட்சியோ, ஜாதியை ஒழிக்க, தீண்டாமையை ஒழிக்க - அவரது மொழியில் குறிப்பிட வேண்டுமானால் கடுமையான காட்டுமிராண்டித்தனத்தை ஒழிக்க-இதுவரை எடுத்துள்ள தீவிர நடவடிக்கைதான் என்ன?

எடுத்துக்காட்டாக அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்என்று தமிழக சட்டமன்றம் ஒருமனதாக, கட்சி வேறுபாடு இன்றி நிறைவேற்றிய சட்டத்தை எதிர்த்து, 12 பார்ப்பனர்கள் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குப் போட்டு, தங்களுக்குச் சாதகமான ஒரு தீர்ப்பைப் பெற்றுவிட்டதன் மூலம், ஜாதி ஒழிப்புக்கு வழிவகை செய்யக்கூடிய அந்தச் சட்டம் முடமாக்கப்பட்டிருக்கிறதே அதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்தக் கோரி, தமிழ்நாடு அரசு ஒரு முறைக்கு பலமுறை தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது. தமிழக முதல்வர் பல முறை டில்லிக்குத் தனி வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார்.

திராவிடர் கழகம் தமிழ்ப் பெருமக்களின் ஏகோபித்த ஆதரவைத் திரட்டி, மத்திய அரசின் கவனத்தை ஈர்க்க மத்திய அரசு அலுவலகங்கள் முன்னால் மறியல் கிளர்ச்சி, நடத்தி மத்திய அமைச்சர்கள் சென்னை வந்தபோது கருப்புக்கொடி காட்டும் கிளர்ச்சி நடத்தியதிலிருந்தும், நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்கப்பட்டும் தனியார் மசோதா கொடுக்கப்பட்டும் உள்ளதே!

### பிரதமர் இதில் காட்டிய அக்கறை என்ன?

சில நூறு ராஜாக்களுக்குத் தந்த ராஜ மான்ய ரத்து செல்லாது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு தந்தவுடன் அதிலிருந்து காப்பாற்ற

அரசியல் சட்டம் திருத்தப்படவில்லையா? அதற்குப் பிறகு பல விஷயங்களுக்காக அரசியல் சட்டம் திருத்தப்படவில்லையா? சிந்திக்க வேண்டும்.

கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய் கிடைக்கவில்லையே என்று ஏங்குவதா? ஆட்சி, அதிகாரம் இவரிடம் உள்ள போது ஏன் ஜாதி ஒழிப்புக்காக அரசியல் சட்டத்தைத் திருத்தக் கூடாது?

மனிதனின் நிழல் மற்றொரு மனிதன் மீது பட்டால் தீட்டாகிவிடும் என்று கூறுவது காட்டுமிராண்டித் தனம் என்று பிரதமர் அவர்களால் வர்ணிக்கப்படுகிறது, சரி. கீழ்ஜாதி மனிதனின் நிழல் அல்லது கை கற்சிலைமீது பட்டால் ‘சாமி தீட்டாகி விடும்‘ என்று கூறுவது மேற்கூறியதைவிட எத்தனை மடங்கு கடுமையான கொடுமையான காட்டுமிராண்டித்தனம்?

நமது நாட்டில் அரசியல்வாதிகள் அந்தந்த விழாக்களில் சென்று ஆங்காங்கே ஏற்கக்கூடிய கைத்தட்டல் கிடைக்கக்கூடிய தீவிரப் பேச்சு பேசுவதும், காரியத்தில் அதற்கு நேர்மாறாக நடப்பதும் வாடிக்கையாகிவிட்ட ஒன்றாகும்!

பிரதமரின் வைக்கம் பேச்சும்; வாய்வீரப் பேச்சும் பேச்சே தவிர, நடைமுறையில் அதனால் காதொடிந்த ஊசியளவுகூட பயனும் ஏற்படாது! ஏற்படவே ஏற்படாது! காரணம் மூடநம்பிக்கைகளை வளர்க்க முன்னோடியாக பிரதமர் போன்றவர்களே நடந்து கொள்ளுகின்றனர்!

புதுவையில் அரவிந்த ஆசிரமம் சென்றது மட்டுமல்ல; யாரோ ஒரு சாமியாராம் - பாரிஜாதக் கண்ண னாம்!” அவரை நள்ளிரவில் தரிசித்து ஆசி பெற்றாராம்!

இது மூடநம்பிக்கை அல்லாமல் வேறு அறிவு நம்பிக்கையா? விஞ்ஞான சாதனையா? வெட்கம்! மகா வெட்கம் நல்ல இரட்டை வேடம்.

**(22.04.1975 ‘விடுதலை’ ஏட்டின் தலையங்கம்)**

## வைக்கம் போராட்ட வரலாற்றைத் திரிப்பதா?

நிகழ்ச்சி செய்தி ஆகிறது. செய்திகளின் கோர்வை வரலாறு ஆகிறது. நம் நாட்டின் வரலாற்றை எழுதினவர்கள் - எழுதுகிறவர்கள்

- ஒன்று, ஆரியர்கள் அல்லது அவர்கள் தந்த செய்திகளை வைத்து எழுதியவர்களாகத்தான் மிகப் பலர் அமைத்துள்ளனர். அதனால்தான் தமிழ் நாட்டின், தமிழ் இனத்தின் உண்மையான வரலாற்றினை இன்னும் உலகத்திற்கு உணர்த்த முடியவில்லை.

நமது வாழ்நாளில் நடைபெறும் நிகழ்ச்சிகளையே திருத்திக்கூறும் வரலாற்று ஆசிரியர்களும்; பத்திரிகை ஆசிரியர்களும் நிரம்பிய நமது நாட்டில், அண்மையில் 50 ஆண்டுகளுக்கு முன்னால் கேரள நாட்டின் வைக்கம் என்னும் ஊரில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோரின் போராட்டத்தைப் பற்றி இன்று எழுதுகிறவர்கள், பேசுகிறவர்கள், அப்போராட்டத்தின் உண்மை நிலையினை எழுதுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

## தோல்வி அடையும் நேரத்தில்...

அப்போராட்டம் தோல்வியை அணைத்துக் கொண்டிருந்த நேரத்தில் கேரளத்தின் அழைப்பினை ஏற்று அங்கு சென்று, செத்துக் கொண்டிருந்த அந்த இயக்கத்திற்கு உயிரூட்டி, உணர்ச்சியூட்டி, உத்வேகத்தை உண்டாக்கி, மகத்தான மக்கள் இயக்கமாக ஆக்கி, சிறையேகி, திருவாங்கூர் சமஸ்தான அரசர், அப்போராட்டத்தின் கருப்பொருளாக, கதாநாயகராக, தளபதியாக விளங்கிய, தந்தை பெரியார் அவர்களுக்கு, நியாயமாகக் கொடுக்க வேண்டிய அளவுக்கு முக்கியத்துவத்தை, வைக்கம் போராட்ட இயக்கத்தின் பொன் விழாவினை நடத்துபவர்கள் தராதது உண்மையை உணர்ந்தவர்களாலும், தந்தையின் வரலாற்றினை வாசித்தவர்களாலும் வருந்தாமலிருக்க முடியவில்லை.

ஆனாலும், அந்த உண்மையினைச் சொல்லுபவர்கள் ஒரு சிலராவது இருக்கிறார்கள் என்று எண்ணுகையில் கொஞ்சம் மன நிறைவு உண்டாகிறது. அந்த வகையில் திரு. காமராசர் அவர்களும் திரு. கே.கே. ஷா அவர்களும் வைக்கம் போராட்டம் பற்றிக் கூறியிருப்பன கவனத்தில் இருக்க வேண்டியனவாகும்.

## காமராசர் கூறுகிறார்

தந்தை பெரியார் அவர்கள் மறைந்ததும், தமிழ்நாடு காங்கிரஸ் இயக்கத்தின் மூத்த தலைவரான திரு. காமராசர் அவர்கள், தந்தை பெரியார் அவர்களைப் பற்றிய அவரது எண்ணத்தை, ஒரு

பத்திரிகைக்குத் தந்த பேட்டியின் மூலம் தெரிவித்தார். அப்பேட்டியில் வைக்கம் போராட்டம் பற்றி கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது அனைவரின் கவனத்திலும் - குறிப்பாக பொன் விழா நடத்துபவர்கள் கவனத்திலும் - இருக்க வேண்டிய ஒன்றாகும்.

**திரு. காமராசர் அவர்கள் கூறியதாவது:**

திருவாங்கூர் சமஸ்தானத்தில் வைக்கம் என்றொரு இடம். இங்கு தாழ்த்தப்பட்ட மக்களை, ஜாதி இந்துக்கள் கொடுமைக்கு உள்ளாக்கியிருந்தார்கள். இதை எதிர்த்து திரு. டி.கே. மாதவன், கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப் கிளர்ச்சி செய்தார்கள். இக்கிளர்ச்சி அவ்வளவாகச் சூடு பிடிக்கவில்லை.

அவர்கள் பெரியாருக்குக் கடிதம் எழுதி, வரச்சொன்னார்கள், உடனே பெரியார், தொண்டர்களை அழைத்துக்கொண்டு சென்று விட்டார். வைக்கத்தில் அக்கிரமம் நடக்கிறது என்று, சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்து பல கூட்டங்களில் பேசினார். ஒவ்வொரு கூட்டத்திலும் அவர் பேசிய பேச்சுகளுக்கு நல்ல பலன் இருந்தது. இதைப் பார்த்த சமஸ்தான அதிகாரிகள் அவரை பேசவிடாதபடி 144 தடை உத்தரவைப் போட்டார்கள்.

பெரியார் இதை மீறி கோட்டயத்தில் பேசி கைதானார். ஒருமாத சிறைதண்டனை அவருக்கு வழங்கப்பட்டது. 30 நாள்கள் எப்போது கழியுமென சிறையில் காத்திருந்தார்.

சிறையிலிருந்து வெளிவந்ததுதான் தாமதம், மீண்டும் கூட்டம் போட்டு பேசினார். உடனே சமஸ்தான அதிகாரிகள் இவரை திருவாங்கூர் எல்லைக்குள் வரக்கூடாது என்று வெளியேற்றினார்கள்.

இதையும் மீறி உள்ளே நுழைந்து பொதுக் கூட்டத்திலும் பேசிவிட்டார். திரும்பவும் கைது செய்து ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை கொடுத்தார்கள்.

இதற்குள் பெரியாரது தடை மீறல்களும்- கைதான செய்திகளும் அகில இந்திய முக்கியத்துவம் பெற்றுவிட்டன. மகாத்மா, சமஸ்தானத்தின் அடக்குமுறைப் போக்கை வன்மையாக கண்டித்து, பெரியாரது செயலை வெகுவாகப் பாராட்டி எழுதினார். தாழ்த்தப்பட்டவர்களுக்குள்ள

தடையை பெரியார் கோரிக்கைப்படி நீக்காவிட்டால் பெரும் போராட்டம் துவங்கும் என்று மகாத்மா எச்சரிக்கை செய்தார்.

சமஸ்தான அதிகாரிகள் பயந்து போய், பெரியார் சொன்ன தடைகளை எடுத்தெறிந்து அவர்களையும் விடுதலை செய்தார்கள். இந்தப் போராட்டம், இவருக்கு "வைக்கம் வீரர்" என்னும் பட்டத்தைப் பெற்றுத்தந்துள்ளது. இதில் மகாத்மாவுக்கு பெரியார் மீது மதிப்பும் உயர்ந்தது.

- இவ்வாறு திரு. காமராசர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

**கவர்னர் ஷா கூறுகிறார்:**

பெரியார் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்க சென்னை ஷெரிப் அவர்கள் 12.01.1974இல் கூடிய கூட்டத்தில் தமிழ்நாடு கவர்னர் திரு. கே.கே. ஷா அவர்கள், தந்தை பெரியார் அவர்களின் வைக்கம் போராட்டம் பற்றி குறிப்பிடும்போது கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.

"His satyagraha at Vaikom in Kerala against untouchability gave formidable expression to his thirst for social reforms and deep concern for the downtradden and the under - privileged"

-என்று தந்தை அவர்களின் வைக்கம் போராட்டத்தின் உறுதிப்பாட்டினைக் குறிப்பிட்டுள்ளார்.

வைக்கம் போராட்டத்தின் வெற்றிக்குப் பெரிதும் பாடுபட்டவர். தந்தை பெரியார் அவர்கள்தான் என்கிற உண்மையினை உலகத்தார் கண்களுக்கு நீண்ட நாள்களுக்கு மறைத்துவைக்க முடிவதில்லை. காலம் கழிந்ததும், மேகங்கள் விலகுகிறது அல்லது மறைகிறது, நிலா பளிச்சென்று வெளிப்பட்டு வருகிறது.

ஆகவே, வரலாற்றில் உண்மையினை நீண்ட நாட்களுக்கு மறைத்து வைக்கமுடியாது. ஒரு நாளைக்கு அது நிச்சயம் வெளிப்படும்.

**('விடுதலை' 27.04.1975)**

**வைக்கம் பொன்விழாவில் அன்னை மணியம்மையார்:**

இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றில் முதன்முதலில் தென்னாட்டில் நடைபெற்ற மனித உரிமைப் போராட்டமாகிய வைக்கம்

போராட்டம் வரலாற்றில் மிக முக்கியமான போராட்டம் அல்லவா? 1924ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் தேதியன்று, கேரளம் கோட்டயம் மாவட்டத்தைச் சார்ந்த வைக்கம் என்னும் அழகிய சிற்றூரில் துவக்கப்பட்ட அப்போராட்டத்தில் ஈடுபட்ட அந்த வீரர்களைப் பிடித்து சிறைக்குள்ளே தள்ளியதன் மூலம் அதனை அடக்கிவிடலாம் என்று நினைத்தது அந்நாளைய திருவாங்கூர் அரசு! அந்தப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர்களில் முக்கியமானவர்களாகிய பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப், கே.பி. கேசவமேனன், டி.கே. மாதவன், சகோதரர் கேளப்பன், போன்றவர்கள் சிறையிலே கலந்து, முடிவு எடுத்து தமிழ் நாட்டில் ஜாதி ஒழிப்புச் சரித்திரத்தின் கர்த்தாவாகிய தந்தை பெரியார்தான் இதற்கொரு முடிவு காணுவார் என்று கருதி கடிதம் எழுதினர். அய்யா அவர்களும், இந்தக் கொடுமை எங்கோ ஒரு மூலையில்தானே, தமிழ் நாட்டில் உள்ள நமக்கேன் இந்தக் கவலை என்று பாராமுகமாக இல்லாமல், உடனே அப்போராட்டத்தில் குதிக்கவும், அதனைத் தலைமை தாங்கி நடத்தவும், உயிருக்கே ஆபத்து வரும் என்கிற மிரட்டலுக்குச் சிறிதும் அஞ்சாமல் காரியமாற்றவும் முனைந்து, 6 மாதம் சிறைத் தண்டனையையும் ஏற்று, 'சிறைப்பறவை'யாகி, அப்போராட்டம் வெற்றி வாகை சூடும் வரை ஓயாமல் நடத்தி இன்று 50 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன!

### மனித உரிமைப் போரின் பொன் விழா!

சென்ற தலைமுறையில் நடைபெற்ற இந்த வரலாற்றுப் புகழ்வாய்ந்த மனித உரிமைப் போராட்டத்திற்கு பொன்விழா கொண்டாடும் வகையில் அதற்கு முக்கிய முன்னோடியாய்த் திகழ்ந்த 'வைக்கம் வீரர்' தந்தை பெரியாரை மறக்காமல் அய்யா அவர்களுக்குச் சிறப்புச் செய்வதுதான் நன்றி உணர்வு, லட்சியப் பிடிப்பு என்று கேரளத்துச் சகோதரர்கள் நினைத்தார்கள்!

### தந்தை இருந்திருந்தால்...

தந்தை அவர்கள் மாத்திரம் இன்று இருந்திருப்பாரானால், எப்படிப்பட்ட நிலை - எழுச்சி உற்சாகம் இருக்கும்? அடடா! நினைக்கவே நம் நெஞ்சம் குமுறுகிறதே!

தந்தை இன்று இல்லையென்றாலும் அவர் தந்த கழகம் - சமுதாயப் புரட்சி இயக்கம் - இருக்கிறது; அதனை தந்தைக்குப் பின்னால் சிறப்பாக நடத்திச் செல்லும் தலைவராக நமது தலைவர் அன்னையார்

இருக்கிறார்கள் என்று அறிந்து, அவர்களை வற்புறுத்தி அழைத்து பெண்கள் மாநாட்டினைத் துவக்கி வைக்கும்படி கேட்டுக் கொண்டனர்!

## தளர்ந்த உடல் நிலையிலும் அன்னையார் பயணம்

அய்யாவின் பணிகளைத் தொடருவதைத் தம் பணியாகக் கொண்ட நமது அன்னையார் அவர்கள், தனது தளர்ந்த உடல் நிலையைப் பற்றிக்கூடக் கவலைப் படாது, அங்கு சென்று கொள்கை முழுக்கம் செய்யப் புறப்பட்டார்!

26ஆம் தேதிதான் அவர்களுக்குரிய நிகழ்ச்சி என்றாலும் 25ஆம் தேதி பிற்பகலே வைக்கம் சென்றடைந்தார்கள்.

## உடன் சென்றவர்கள்

கழகத்தலைவர் அவர்களுடன் கழகப்பொதுச் செயலாளர் கி.வீரமணி அவர்களும் உடன் சென்றிருந்தார்கள்

மற்றும் கழகத்தோழர்கள், நெல்லை மாவட்டச் செயலாளர் தி.ஆ. தியாக அரசன், நாஞ்சில் தமிழ்மறை, தஞ்சை மாவட்ட திராவிடர் கழகத் துணைத் தலைவர் நீடாமங்கலம் அ. ஆறுமுகம். நீடாமங்கலம் சுப்ரமணியம், மதுரை மாவட்ட திராவிடர் கழகச் செயலாளர் பெரியகுளம் ச.வெ. அழகிரி, திருவனந்தபுரம் தோழர் நயினார், செல்லம் ஆகியோரும் வைக்கம் சிறப்பு நிகழ்ச்சி காண வந்திருந்தனர்.

தமிழ்நாட்டிலிருந்து வைக்கம் வீரரின் தொண்டர்கள் வந்துள்ளனர் என்பதை அறிய மிகுந்த மகிழ்ச்சியுற்று வைக்கம் போராட்ட பொன்விழா வரவேற்புக்குழுவின் தலைவர்களான வைக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் கேரள போக்குவரத்துத் துறை அமைச்சரும் வலது கம்யூனிஸ்ட் கட்சி முக்கியஸ்தருமான திரு. சீனுவாசன், வைக்கம் நகராட்சித் தலைவர் திரு. நரசிம்மநாயக் அவர்களும், வரவேற்புக்குழு செயலாளர்களில் ஒருவரான திரு. பிரபு அவர்களும் கழகத் தலைவரை மிகுந்த அன்போடு வரவேற்றார்கள்.

25ஆம் தேதி 26ஆம் தேதி ஆகிய 2 நாள்களில் வைக்கம் நகர மக்களில் பல்வேறு கட்சி, அமைப்புகளைச் சார்ந்த இளைஞர்களும் நண்பர்களும், தாய்மார்களும் ஓய்வு விடுதியில் தங்கியிருந்த தலைவர் அன்னையார் அவர்களைக்கண்டு மிகுந்த அன்போடு உரையாடி,

தந்தையின் பெருமையை மிகுந்த நன்றி உணர்வோடு நினைவு கூர்ந்தனர்.

பெண்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த ஜார்ஜ் ஜோசப் அவர்களது மகளார் திருமதி மாயா தாமஸ் அவர்களும், கேரள வீட்டு வசதி வாரியத்தலைவரும் வலது கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகருமான திருமதி ரோசம்மா பொன்னூஸ் அவர்களும், பிரபல சமூக சேவகியான திருமதி ரோசம்மா சாக்கோ ஆகியோரும் கழகத் தலைவரைக்கண்டு மரியாதை தெரிவித்து மகிழ்ச்சியுடன் உரையாடிக் கொண்டிருந்து விட்டு நிகழ்ச்சிக்குச் சென்றனர்.

## வைக்கத்தில் விழா

வைக்கம் ஊரெங்கும், வைக்கம் சத்யாகிரகத்தின் பிரதான தலைவராகவும், தளபதிகளாய் இருந்தவர்களை நினைவு கூரும் தன்மையில், முக்கிய வீதிகள் எங்கும் அவரவர்கள் பெயரில் வரவேற்பு வளைவுகள் போடப்பட்டிருந்தன.

வைக்கம் சத்தியாகிரகம் நினைவாக, கேரள எஸ்.என்.டி.பி. யோகத்தினரால் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தப்பட்டுவரும் வைக்கம் சத்தியாகிரக ஆசிரமப்பள்ளி மைதானத்தில் போடப்பட்டுள்ள பெரிய பந்தலில் விழா நிகழ்ச்சி 20ஆம் தேதி முதல் தொடங்கி நடந்து வந்தன.

வைக்கத்திற்கு பிரதமர் ஹெலிக்காப்டர் விமானத்தில் வந்திருந்து பொன்விழா நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து, நிகழ்த்திய ஒரு சம்பிரதாய உரையில், தந்தை பெரியார் பெயரைக் கூட குறிப்பிடாமல் பொதுப்படையாகப் பேசிச்சென்றதோடு, பொருளாதார சுதந்திரம் வந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்றே பேசினார். பிறகு தொடர்ந்து ஒவ்வொருநாளும் பல்வேறு கட்சித் தலைவர்களையும் அழைத்து கருத்தரங்குகள் சிறப்புரைகள் எல்லாம் நடத்தப்பெற்றன! பல்வேறு கேரள அமைச்சர்களும் பிரபல கேரளமாநில அரசியல் தலைவர்களும் அவற்றில் பங்கு கொண்டனர்!

## பெண்கள் மாநாடு

26ஆம் தேதி மாலை 6:00 மணிக்கு வைக்கம் சத்தியாக்கிரகப் பொன் விழா கொண்டாட்டத்தையொட்டி பெண்கள் மாநாடும் சிறப்பாக நடைபெற்றது!

தமிழ் நாட்டிலிருந்து தந்தை பெரியார் இயக்கத்தின் தலைவர் அன்னையார் வந்து இந்த பெண்கள் மாநாட்டினைத் துவக்குகிறார்கள் என்பதால் பெருமக்கள் - பொதுமக்கள் தாய்மார்கள் இளைஞர்கள் ஏராளமாக கலந்து கொண்டனர்!

திருமதி மேரி ஜார்ஜ் அம்மையார் வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். அவர் தம் வரவேற்புரையில்:

மனித உரிமைப்போரை முதன் முதலில் நடத்திய இந்த வைக்கம் சத்தியாக்கிரகத்தின் பொன் விழாக் கொண்டாட்டத்தின்போது, ("வனிதா சம்மேளனம்") பெண்கள் மாநாடு ஒன்று நடப்பது மிகவும் பொருத்தம்.

ஜாதியால் 'கீழ்' என்று சிலரை நடத்துவதைப் போலவே, ஆண்களும், பெண்களுக்கு சம உரிமை கொடுக்காமல் நடத்துவதால் இந்த மாநாடு நடத்துவது அவசியமாகிறது.

வீரத் தலைவராக தமிழ்நாட்டிலிருந்து வந்து, வைக்கம் சத்தியாகிரகத்தை நடத்திய பெரியார் அவர்களது துணைவியார் மணியம்மை அவர்கள் இங்கே இன்று வந்தது நமக்குப் பெருமை, பேறு எல்லாம் என்று அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார். அப்போதைய தளபதியாக நின்று நடத்தியவர் ஜோசப் ஜார்ஜ் ஆவார். அவரது குமாரத்தி திருமதி மாயாதாமஸ் தலைமை தாங்க வந்திருப்பது பாராட்டத்தக்கது, மற்றும் வந்துள்ள அனைவரையும் வரவேற்பது எங்கள் கடமை என்று குறிப்பிட்டு கழகத்தலைவர் அவர்களை மாநாட்டினைத் துவக்கி வைக்கும்படிக் கேட்டுக் கொண்டார்.

அன்னையார் அவர்கள், மாநாட்டின் வரவேற்புக் குழுவினருக்கு நன்றி தெரிவித்துவிட்டு, துவக்கி வைத்து, இறுதியில் தாம் உரையாற்றுவதாகத் தெரிவித்தார்.

**மாயா தாமஸ்**

இதைத் தொடர்ந்து மாநாட்டுத் தலைவர் திருமதி மாயா தாமஸ், சிறிது நேரம் உரையாற்றினார்.

பிறகு, கேரள வீட்டு வசதி வாரியத் தலைவர் திருமதி ரோசம்மா பொன்னூஸ், கேரளப் பிரதேச ஸ்தாபன காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திருவாளர் சங்கரநாராயணன், திருமதி ரோசம்மா சாக்கோ ஆகியோர் உரையாற்றினர்.

அவர்களுக்குப் பின்னர் கழகத்தலைவர், மாநாட்டின் சிறப்புரையை நிகழ்த்தினார். அதன் பின்னர் இறுதியாக கழகப்பொதுச் செயலாளர் கி. வீரமணி பேசினார்.

## மக்களின் ஆர்வம்

கழகத் தலைவர் அன்னையார் அவர்களது பேச்சை மிகவும் உன்னிப்பாகக் கூடி இருந்த மக்கள் ஆர்வத்துடன் கேட்டனர். தந்தை பெரியார் அவர்களது பெயரை பேச்சாளர்கள் குறிப்பிட்ட போது * இடையிடையே ஆரவாரத்துடன் மகிழ்ச்சி பொங்க கைதட்டி வரவேற்றது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இறுதியில் திருமதி சி.எஸ். விஜயலட்சுமி நன்றி கூற இரவு 9:00 மணிக்கு மாநாடு முடிவுற்றது.

**('விடுதலை ' 30.4.1975)**

■

வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்ட
தேசிய சுயமரியாதை வீரர் கோவை சி.அய்யாமுத்து
அவர்கள் ‘தனது வரலாறு’ நூலில் வைக்கம் பற்றி
எழுதியுள்ள அத்தியாயம்.

# வைக்கம் சத்தியாக்கிரகம்

திருவிதாங்கூர் ராஜ்யத்திலே வைக்கம் என்பது ஒரு புண்ணிய ஸ்தலம்.

அங்குள்ள கோவிலைச் சுற்றி நான்கு பாதைகள். அப்பாதைகள் வழியே தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்த இந்துக்கள் போகக்கூடாதென்று அக்காலத்திய சம்பிரதாயம்.

அதையெதிர்த்து அங்கே ஒரு சாத்வீகப் போராட்டம் நடந்தது.

டி.கே. மாதவன் என்பவர் ஈழவ சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவரும், மதுரை பாரிஸ்டர் ஜியார்ஜ் ஜோசப், கே.பி. கேசவமேனன், கேளப்பன் நாயர், குரூர் நீலகண்டன் நம்பூதிரிபாடு, போன்றவர்கள் கூடி ஆலோசித்து, வைக்கத்திலே முகாம் அமைத்து தெருப் பிரவேச சத்யாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தார்கள்.

ஒன்றே குலம், ஒருவனே தெய்வம் எனும் சீரிய நெறியைப் பரப்பிவந்த வரகலை ஸ்ரீ நாராயண குரு சுவாமிகள் எனும் ஈழவ சமுதாயத் தலைவரின் ஆசியும், மகாத்மா காந்தியின் பேராதரவும் அந்தச் சாத்வீக சமருக்குக் கிடைத்தது.

உள்ளூர் வாசிகளைக் கொண்டே அப்போராட்டம் நடத்தப்படல் வேண்டுமென மகாத்மா காந்தி விரும்பினார்.

எனினும் தமிழ்நாட்டிலிருந்து ஈ.வெ. ராமசாமி பெரியாரும், நானும், எஸ். ராமநாதனும் மற்றுஞ் சிலரும் வைக்கம் சென்று அதில் கலந்து கொண்டோம்.

நாகர்கோவிலையடுத்த கோட்டார் டாக்டர் இ.எம். எம்பெருமாள் நாயுடு தம்முடைய காரில் என்னையும் , நாயக்கரையும், சிட்டேடத்தில் சங்குபிள்ளை என்பவரையும் ஏற்றிக்கொண்டு திருவாங்கூர் ராஜ்யம் முழுவதும் பிரச்சாரம் செய்ய அவரே காரோட்டிச் சென்றார்.

கன்னியாகுமரியை நாங்கள் போய்ச் சேருவதற்குள் ஒவ்வொரு ஜில்லாவின் எல்லையிலும் போலீசார் எங்களை எதிர் கொண்டு பொதுக்கூட்டங்களில் நாங்கள் நால்வரும்பேசக்கூடாதென்ற தடையுத்தரவை வழங்கி எங்களை கவுரவித்தார்கள்.

எனினும் நாங்கள் ஒவ்வொரு ஊரிலும் தங்கி அங்குள்ள பிரமுகர்களைச் சந்தித்து வைக்கத்துப் போருக்குப் பொருளும், தொண்டர்களும், பொதுமக்களின் ஆதரவும் திரட்டிக் கொண்டே சென்றோம். திரும்பும் மார்க்கத்தில் திருவனந்தபுரத்தில் நாங்கள் தங்கியிருந்த பொழுது செரயிங்கீழ் எனும் ஊர்வாசிகள் எங்களைச் சந்தித்து அவ்வூருக்கும் வரும்படி அழைத்தார்கள். அவ்வூரில் நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்தில் எங்களில் ஒருவர், தடையுத்தரவை மீறி சிறை செல்வதென்று முடிவு செய்தோம்.

நால்வரில் யார் அக்காரியத்தைச் செய்வதென "திருவுளச் சீட்டுப்" போட்டதில் எனக்கு முதல் பிரைஸ் கிடைத்தது.

செரயிங்கீழ் பொதுக்கூட்டத்தில் நான் பேசிக் கொண்டிருக்கையில் கைது செய்யப்பட்டேன்.

அங்கிருந்து அட்டிங்கீழ் என்ற போலீஸ் ஸ்டேசனுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அதே இரவில் திருவனந்தபுரத்தில் உள்ள கோட்டை போலீஸ் ஸ்டேஷனில் நான் வைக்கப்பட்டேன்.

பொதுக்கூட்டங்களில் திருவனந்தபுரம் மகாராஜாவைப் புகழலாமேயன்றி அந்தப் "பொன்னு திருமேனியை"யாரும் பழிக்கக் கூடாதென்பது திருவாங்கூர் ராஜ்யத்தின் சம்பிரதாயம்.

ஆனால் நானோ, "மதுவை அருந்துபவன், சண்டாளன் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மதுவை அருந்தி அதன் மூலம் தனது புனிதத்தன்மையை இழந்தவன் தேவாலயங்களினுள் நுழையக் கூடாதென்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன். மதுவைக் குடிப்பவனைப்

போன்றே மதுவை உற்பத்திச் செய்பவனும், விற்பவனும் சண்டாளர்கள் ஆவார்கள் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், இம்மதுபானக் "கச்சவடத்தை" அனுமதித்து அதிலொரு ஆதாயத்தையும் பெற்றுவரும் திருவாங்கூர் மகாராஜா மட்டும் பொன்னுத் திருமேனியாக இருக்க முடியுமா?" என்றொரு பெரிய கேள்விக் குறியைப் பல பொதுக்கூட்டங்களில் போட்டேன்.

அடடா! இந்தச் சம்பிரதாயத்தை மீறிய சொற்பொழிவைக் கேட்ட பொதுமக்கள் அடைந்த உற்சாக ஆரவாரத்துக்கு அளவே இருக்கவில்லை.

பத்திரிகைகள் எல்லாம் எனது பேச்சின் இப்பாகத்தைக் கொட்டை எழுத்துகளில் பிரசுரித்தன.

சில பத்திரிகைகள் என்னைப் புகழ்ந்தன. எனக்கு வீரகேசரி, யுவகேசரி என்ற பட்டங்களைக் கொடுத்தன.

சில ராஜவிஸ்வாசப் பத்திரிகைகள் எனது கூற்றை மிக வன்மையாகக் கண்டித்து நான் அந்த நாட்டை விட்டே கடத்தப்பட வேண்டியவன் என்று முழங்கின.

திருவனந்தபுரம் போலீஸ் கமிஷனராயிருந்த Pitt. பிட் எனும் ஆங்கிலேயன் தனது அறிக்கையில் என்னை ஒரு கசைந செயனே தீபந்தம் என்று வருணித்திருந்தான்.

திருவனந்தபுரம் கோட்டையினுள்ளிருந்த கோர்ட்டில் எனது விசாரணை நடைபெற்றது. பொதுமக்கள் கோட்டைக்குள் புகாவண்ணம் அதன் தலைவாசலில் பலத்த போலீஸ் படை நிறுத்தப்பட்டிருந்தது.

வைக்கம் சமரில், தடையுத்தரவை மீறியதற்காகக் கைது செய்யப்பட்ட முதல் மனிதன் நான்தான். எனக்கு ஒரு மாதம் கடின காவல் தண்டனையும் பதினைந்து ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

அப்போரின் முன்னணியில் நின்றிருந்த முப்பத்து மூன்று பிரமுகர்களைத் தடுப்புக்காவல் சட்டத்தில் திருவனந்தபுரம் மத்திய சிறையில் அடைத்திருந்தார்கள். அவர்கள் ராஜாங்கக் கைதிகளாகப் பாவிக்கப்பட்டுத் தனிச் சலுகைகள் பெற்றிருந்தனர். அவர்களுக்கு தனியறைகள், சொந்த உடைகள், தனிச் சாப்பாடு, பத்திரிகைகள்,

மாலை நேரங்களில் அவர்கள் சிறைக் காம்பவுண்டுக்குள் உலவுகின்ற சலுகைகள் அனைத்தும் பெற்றிருந்தார்கள்.

நானே தண்டனை பெற்ற கைதி! அதுவும் காவல். நான் சாதாரண கிரிமினல் கைதியாக நடத்தப்பட்டேன்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை அடைத்திருக்கும் condemned cell வரிசையில், என்னையும் தனிக் கொட்டடியில் அடைத்தார்கள்.

எனது காலில் இரும்பு வளையம் ஒன்றையும், கொடுத்தார்கள், சிறைக் கைதிகளின் சட்டையும் கொடுத்தார்கள்.

மறுநாள் காலையில் ஜெயிலர் ராமகிருஷ்ணன் என்னைப் பார்க்க வந்தார்.

அவருடைய முகம் மலர்ந்திருந்தது.

என்னைக் கண்டதும் அவர் கேட்ட முதற்கேள்வி என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

Mr. Gounder, in which year did you graduate where? என்று கேட்டார்.

Me! I have yet to complete my high school என்றேன்.

What! you spoke such a fine English at the Court Yesterday! - என்றார்.

Oh! that was due to a cultivated habit என்றேன்.

அவர் என்னைப் பார்த்துச் சிரித்தார். நான் மிகவும் அடக்கமாகப் பதில் சொன்னேன் என்று எண்ணியிருப்பார்.

அவருடைய அடுத்த கேள்வி என்னை மேலும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தது.

நடராஜ காளிங்கராயர் உங்களுக்குச் சொந்தமாகிறார்.

சொந்தமொன்றுமில்லை. அவர் எனது ஊர்க்காரர். கீழத் தெருவில் இருப்பவர், எனது இனத்தவர். விளையாட்டு மைதானத்தில் நாங்கள் சந்திப்பதுண்டு என்றேன்.

ஊத்துக்குழி ஜமீன்தார் ராமலிங்க காளிங்கராயருக்கு இரண்டு புதல்வர்கள். மூத்தவர் துரைராஜ காளிங்கராயர், இளையவர் நடராஜ காளிங்கராயர்.

இளைய புதல்வர் நடராஜ காளிங்கராயர் கோவை ஸ்டேன்ஸ் அய்ஸ்கூலிலும், பின்னர் இங்கிலாந்திலும் பயின்றவர். அவர் திருவாங்கூர் இளைய ராஜாவின் மெய்க்காப்பாளராக அப்போதிருந்தார்.

சிறை அதிகாரிகட்கு அவர் ஏதேனும் செய்தி அனுப்பியிருப்பார் என்று ஊகித்துக்கொண்டேன்.

அடுத்த நாளும் ஜெயிலர் வந்தார்.

எனக்கு ஏதேனும் வேலை கொடுங்கள் – கடின காவல் கைதியாயிற்றே என்றேன்.

கைத்தறிகளுக்குத் தார் சுற்றும் வேலை கிடைத்தது.

இரண்டு நாள்கள் ஓயாமல் சுற்றியதாலோ, என் ஒரு கை வீக்கம் அடைந்தது.

அந்தச் செய்தி எப்படியோ திருவனந்தபுரத்தில் பிரசுரமான "சமதர்ஸினி"யெனும் பத்திரிகை ஆசிரியரின் காதுகளை எட்டிவிட்டது. அதன் ஆசிரியர் பாலகிருஷ்ண பிள்ளை ஒரு வக்கீல், அவருக்கு என்மீது அளவற்ற பரிவு.

கை வீக்கத்தைப் பற்றிப் பத்திரிகையில் பெரிய தலைப்புக் கொடுத்து செய்தி பிரசுரித்துவிட்டார்.

அடுத்த நாள், சிறையில் என்னைக் காண நடராஜ காளிங்கராயரே வந்துவிட்டார்!

மற்றும் வக்கீல் குஞ்சுகிருஷ்ண பிள்ளையும், பிரமுகர்களும் சிறைப்பார்வையாளரும் வந்துவிட்டனர்!

சிறையிலிருந்த முப்பத்து மூன்று பாதுகாப்புக் கைதிகளும் என்னை விசாரிக்க வந்துவிட்டனர்!

நான் ரொம்பப் பெரிய "ஹீரோ" ஆகிவிட்டேன்.

அதன் பின்னர் எனக்குத் தார் சுற்றும் வேலை கொடுக்கப்படவில்லை.

இரண்டு தினங்கள் ஓய்வெடுத்த பின்னர் மீண்டும் வேலை கேட்டேன். கைதிகள் சட்டைகள் தைப்பது சொன்னேன். அவ்வேலை கிடைத்தது.

ஒரு கைதி, சட்டை தைக்கும் துணியை வெட்டிப் போட்டான். மற்ற கைதிகள் தையல் மெஷினில் தைத்தார்கள். அது மிகச் சுலபமான வேலை.

சட்டையின் இரு தோள்பாகத்தையும், கழுத்தையும் உருட்டித் தைக்க வேண்டும். பின்னர் இரண்டு பக்கங்களையும் ஒன்றாகச் சேர்த்துத் தைக்கவேண்டும். அவ்வளவுதான். சட்டை முடிந்து விடும். சட்டை அடிப்பாகத்தில் துணியில் உள்ள கரை அப்படியே இருக்கும். அதை மடித்தோ உருட்டியோ தைக்க வேண்டியதில்லை. கழுத்துப்பட்டியோ, முன்புறப்பட்டியோ, பாக்கெட்டோ ஒன்றும் கிடையாது.

ஒரு நாளைக்கு ஒரு கைதி பன்னிரெண்டு சட்டை தைக்க வேண்டுமென்பது திட்டம். ஒரு மணி நேரத்துக்குக்கூட அவ்வேலை இராது.

ஜெயிலர் ராமகிருஷ்ணய்யரின் தயவால் எனக்கொரு அரிக்கன் லைட் கிடைத்தது. மலையாள எழுத்துகள் எல்லாம் எனக்கு ஏற்கெனவே தெரியும். மலையாளம் முதல் மூன்று பாகங்கள், இரவில் காவலுக்கு இருக்கும் வார்டரின் ஒத்தாசையுடன் பத்தே தினங்களில் படித்து முடித்துவிட்டேன். எழுதவும் கற்றுக்கொண்டேன். அதன் பிறகு பத்து நாள்கள் ‘நீதி சாரம்’ என்னும் மலையாள புத்தகத்தின் ஸ்லோகங்களை படித்துப் மனப்பாடம் செய்துவிட்டேன்.

## ராஜாஜியுடன் சந்திப்பு

நான் திருவனந்தபுரம் மத்திய சிறைச்சாலையில் முப்பத்தோரு நாள்களைக் கழித்துவிட்டு வெளியேறினேன்.

எனக்கு விதிக்கப்பட்ட தண்டனை நாள்கள் முப்பது. அபராதம் பதினைந்து ரூபாய். எனது பையையும் அதிலிருந்த வேஷ்டி, சட்டை, போர்வை, எனது செருப்பு ஆகியவற்றை ஏலம் போட்டு பதிமூன்றரை ரூபாய் வசூலித்தார்களாம். மீதியுள்ள ஒன்றரை ரூபாய்க்காக என்னை மேலும் ஒரு நாள் சிறையில் வைத்திருந்து விடுதலை செய்தார்கள்.

சிறைக்கேட்டுகளைவிட்டு நான் வெளியே வந்ததும். நகர போலீஸ் அதிகாரி திருவனந்தபுரம் ஜில்லாவில் ஒருமாத காலத்திற்கு யாதொரு பொதுக்கூட்டத்திலும் பேசக்கூடாதென்ற தடை உத்தரவை என் கையில் கொடுத்தார்.

சிறை வாயிலில் ஏராளமான ஜன கூட்டம். “மகாத்மா காந்திக்கு ஜே!” என்ற கோஷம் வானைப்பிளந்தது.

ஒருவர் என் தலையில் ஒரு காந்தி குல்லாவைப் போட்டார். மலர்மாலைகளுக்கா பஞ்சம். என்னை மறைத்தே விட்டார்கள்!

ஒரு திறந்த காரில் என்னை ஏற்றி, அக் காரை இழுத்துக்கொண்டே சென்றார்கள்.

இத்தகைய ஊர்வலத்தை நான் விரும்பவில்லை.. எனக்கு வெட்கமாகத்தானிருந்தது.

ஊர்வலம் வக்கீல் குஞ்சுகிருஷ்ணபிள்ளை வீட்டை அடைந்தது. அங்கு ராஜாஜி என்னை வரவேற்றார்.

அன்று மாலை திருவனந்தபுரம் கோட்டை மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வளவு பெரிய கூட்டத்தைத் தாம் கண்டதில்லையென “சமதர்ஸினி” ஆசிரியர் பாலகிருஷ்ண பிள்ளை கூறினார்.

நான் மேடையின் மீது மவுனியாய் வீற்றிருந்தேன்.

பொதுக்கூட்டம் முடிந்த பின்னர், செரயங்கீழிலிருந்து வந்திருந்த பிரமுகர்கள், என்னை அவர்கள் ஊருக்கு வருமாறு அழைத்தார்கள்.

நான் ராஜாஜியைக் கை காட்டினேன்..

வைக்கத்துச் சமருக்கு மூவாயிரம் ரூபாய் கொடுப்பதானால் அய்யாமுத்துவை அனுப்புகிறேன் என்றார் ராஜாஜி.

அவர்கள் முந்நூறு ரூபாய் வசூலித்துக் கொள்வதாகச் சொன்னார்கள்.

அய்யாமுத்து அங்கு வந்து என்ன பிரயோசனம்? அவருக்குத் தடையுத்தரவு இருப்பதால் அவர் எங்கும் வாய் திறந்து பேசமுடியாதல்லவா? இங்கு ஊழியர்களுக்குப் பஞ்சமில்லை.

பணத்திற்குத்தான் பஞ்சமிருந்தாகத் தெரிகிறது. எனவே, அய்யாமுத்து தமிழ்நாட்டுக்குச் சென்று, அங்கு பணம் வசூலித்து அனுப்பட்டும் என்றார் ராஜாஜி.

அடுத்த நாள் நான் ராஜாஜியிடம் விடைபெற்றுக் கொண்டு கோவைக்குப் பயணமானேன். அங்கு செரயங்கீழ் மக்கள் என்னை நெருங்கி, தங்கள் ஊருக்கு பக்கத்தில் அஞ்சுங்கோ என்றொரு திட்டுப் பிர இருப்பதாகவும், அது திருவிதாங்கூர் ராஜ்ய எல்லையில் சேராதது எனவும், மலபார் கலெக்டரின் ஆதினத்தில் இருப்பதாகவும், நான் அங்கு சென்று ஒருநாள் தங்கினால், சுற்று வட்டாரத்திலுள்ள ஜனங்கள் திரண்டு வந்து, எனது பிரசங்கத்தைக் கேட்டுவிட்டுப் போவார்கள் என்றும் ரொம்பவும் ரகசியமாகத் தெரிவித்தார்கள்.

சரியென ஒப்புக்கொண்டு அஞ்சாமல் அஞ்சுங்கோவுக்குச் சென்றேன்.

அவ்வூர்க் கோவிலில் என்னை ஒரு மடாதிபதி போல் உட்காரவைத்தார்கள். அன்று மாலை மாபெரும் கூட்டம் திரண்டுவிட்டது. அக்கூட்டத்தில் பேசி முடித்ததும், என்னால் தூக்கவே முடியாத ஒரு பணப்பை என்னிடம் கொடுத்து அதில் நூற்றைம்பது இருப்பதாகவும், மேலும் ஒரு வாரம் அல்லது சில நாள்களில் மற்றொரு நூற்றைம்பதும் தருவதாகவும் சொன்னார்கள்.

வைக்கத்திலிருந்து சாமிசத்யவிரதன், சங்குப்பிள்ளை கிருஷ்ணப்பிள்ளை என்னைச் சந்திப்பதற்காக வந்திருந்தார்கள். அவர்களுடன் சேர்ந்து வைக்கத்துக்குப் பிரயாணமானேன்.

வழிநெடுகப் பல ஊர்களில் தங்கிப் பணம் வசூலித்துக் கொண்டே சென்றோம்.

திருவாங்கூர் பிரதேசம் அக்காலத்தில் குறிப்பிடத்தக்க தொழிலபிவிருத்தியடைந்திருக்கவில்லை. பொதுவாக மக்கள் ஏழ்மை நிலையில் இருந்தனர். அங்கே பழக்கத்திலிருந்த ஒரு ரூபாய்க்கு இருபது சக்கரங்கள். அந்த சக்கரத்துக்குப் பதினாறு காசுகள். இந்தியாவின் பலதர பாகங்களில் ஒரு ரூபாய்க்குப் பதினாறு அணாக்கள். ஓர் அணாவுக்கு பன்னிரண்டு காசுகள்,

ஒவ்வொரு ஊரிலும் பணக்காரர் யாராரென்று தெரிந்து வசூலிக்கச் சென்றோம்.

ஓர் ஊரில் ஒரே ஒரு பணக்காரர். அவரிடம் எவ்வளவு பணம் இருக்குமென்று விசாரித்தபோது “ஓ! ஆயிரம் பணம் உண்டாகும்“ என்று பதில் வந்தது!

ஆயிரம் பணம் என்பது இருநூற்றைம்பது ரூபாய். இதைச் சேர்த்துவைத்திருந்தவன் அந்நாட்டில் ஒரு பணக்காரனாக அந்நாளில் கணிக்கப்பட்டான்!

அந்த ஆயிரம் பணம் வைத்திருந்த “முதலாளி”யைத் தேடிச் சென்றோம். அவனுடைய ஜாகையில் இருந்து பெண்கள் தென்னை நாரால் சூடிக்கயர் திரித்துக் கொண்டிருந்தார்கள். பணக்காரர் முகமலர்ச்சியோடு எங்களுக்கு ஒரு ரூபாய் நிதி அளித்தார்.

மற்றொரு ஊரில் பிரபல்யமான ஓர் இல்லத்துக்குச் சென்றோம். என்னுடன் சென்றவர்கள் அந்த இல்லத்துப் பெரியவரிடம் சென்று “கவுண்டர்” வந்திருக்கிறார் என்று தெரிவித்தார்கள்.

“ஓ! கவுண்டரானு? எவ்விடே” என்று என்னிடம் வந்தார்.

என்னைக் கண்ட பின்னரும் எவ்விடே கவுண்டர் என்று கேட்டார்.

இத்தேகம் என்று என்னைக் காட்டினார்கள்.

அப்பெரியவர் “இதானு கவுண்டர்! கவுண்டர் என்னால், ஆறடி பொக்கம், வலிய ஆகிருதி பெரிய மீசை; என்னெல்லாம் ஞான் விசாரிச்சு” என்று சொல்லிக்கொண்டே என்னைக் கட்டிச் சுருட்டித் தூக்கி அங்கிருந்த ஒரு பெரிய நாற்காலியின் மீது உட்காரவைத்தார்கள்.

அவர் நாயர், அவருடைய மகன் திருவாங்கூரிலே ஒரு ஜட்ஜ்.

ஒரு பெரிய தட்டு நிறைய பழங்களும், ஒரு செம்பு பாலும் கொணர்ந்து வைத்தார்.

“ஓ! ஞான் பத்திரங்கலில் கவுண்டருடெ, பிரசங்கம் ஒக்க வாயிச்சு” என்று சொல்லிக்கொண்டே ஒரு தட்டில் இருபத்தைந்து ரூபாய் வைத்துக்கொடுத்தார். அவ்வளவு பெரிய தொகை அந்த நாட்டிலே வேற யாருங்கொடுக்கவில்லை!

இவ்வாறாக நாங்கள் ஊர் ஊராய்ப் பணம் வசூலித்துக் கொண்டே வைக்கம் போய்ச்சேர ஒரு மாதமாயிற்று.

நாங்கள் வசூலித்த பணத்தை - சுமார் நூறு சொச்சம் என்று ஞாபகம் - வைக்கம் சத்தியாகிரக கமிட்டியின் பொக்கிஷத்தார் கோவிந்தன் சாணாரிடம் கொடுத்தேன்.

வைக்கத்திலிருந்து கொச்சிக்குத் தண்ணீர் வழியாகப் படகில்தான் போய்ச்சேர வேண்டும். என்னுடன் "ஹிந்து" பத்திரிகையின் நிருபர் சச்சிதானந்தம் வந்தார். செல்லும் மார்க்கத்தில் கரையோரத்திலிருந்த ஒரு போலீஸ் ஸ்டேசனில் நாயக்கர் சிறைவைக்கப்பட்டிருந்தார்.

நாங்கள் அங்கே இறங்கியபோது அவர் போலீஸ் காம்பவுண்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு படகில் உட்கார்ந்திருந்தார். ஒரு பார்பர் அவருக்கு முகக்ஷவரம் செய்து கொண்டிருந்தான். அவருடன் சிறிது நேரம் தங்கியிருந்துவிட்டு நாங்கள் அடுத்த போட்டில் கொச்சிக்குப் பிரயாணமானோம்.

■

பகுத்தறிவு,
சமூகநீதி,
வாழ்வியல்
அறிய
படியுங்கள்,
படியுங்கள்...

www.viduthalai.in



ஓராண்டுக்கான சந்தா நன்கொடை ...

| விடுதலை | உண்மை | பெரியார் பிஞ்சு | The Modern Rationalist |
|---|---|---|---|
| ரூ.1800 | ரூ.350 | ரூ.240 | Rs.300 |

இணையதளம் மூலமாகவும் சந்தாதாரர் ஆகலாம் ...


http://viduthalai.in/subscription என்ற இணையதளத்தில் Payment Gateway மூலம் Credit Card / Debit Card / Net Banking -ஐப் பயன்படுத்தி எளிதில் சந்தா செலுத்தலாம்.

நேரடியாக வங்கிக் கணக்குகளிலும் சந்தா செலுத்தலாம் ...

| A/C Name | VIDUTHALAI | UNMAI | PERIYAR PINJU | THE MODERN RATIONALIST |
|---|---|---|---|---|
| Bank | INDIAN OVERSEAS BANK, Vepery | INDIAN OVERSEAS BANK, Vepery | INDIAN OVERSEAS BANK, Vepery | INDIAN BANK, Ethiraj Salai |
| Current A/C No. | 232002000000002 | 232002000000003 | 232002000000004 | 422157838 |
| IFS Code | IOBA0002320 | IOBA0002320 | IOBA0002320 | IDIB000C032 |

முக்கிய குறிப்பு : வங்கியில் சந்தாத்தொகை செலுத்தியவுடன் சென்னை 'விடுதலை' அலுவலகத்திற்கு **97109 44815** என்ற கைப்பேசி எண்ணுக்கு தொடர்புகொண்டு சந்தா விவரத்தினை சொல்லவும்.

மேலாளர், 'விடுதலை' பெரியார் திடல், 84/1(50), ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை–600 007. தொலைப்பேசி : 044-2661 8161, 62, 63
கைப்பேசி: 97109 44813, 97109 44842, 97109 44819 • மின்னஞ்சல் : circulation.viduthalai@gmail.com



9 997720 146945

நன்கொடை : ரூ.100/-